## உள்ளே...


1. வசந்த கால மேகம் — 1

2. அசோக மரம் பூக்கவில்லை — 91


# வசந்த கால மேகம்

## 1

விமலா வீட்டை நோக்கி மாருதியை ஓட்டிக் கொண்டு சென்றாள். தொழிற்சாலைக்குப்போக அம்பாசிடர், பிரத்யோக உபயோகத்திற்கு மாருதி என்று இரண்டு கார்கள் இருந்த போதிலும் குழந்தையைப் போலக் கொஞ்சிக் கொண்டு ஓடிய வெள்ளை மாருதியை ஓட்டுவதென்றால் அவளுக்குப் படுகுஷி.

ஆனால் இன்று அமைதியின்றிப் பரபரப்பாக வீட்டை நோக்கி அவள் விரைந்து கொண்டிருந்தாள்.

கணவர் கணபதியின் மறைவுக்குப் பின்னர் விருந்துகள்—நடவடிக்கைகள் எல்லாம் அவளுக்கு வெறுத்துப் போயிருந்தன.

ஆனால் சில சமயங்களில் சில சங்கதிகள் கடமையாகி விடுகின்றன.

அன்று காலை கல்யாணத்தையும்—மாலை ரிஸப்ஷனையும் அவள் தவிர்க்க முடியவில்லை.

காலை முகூர்த்தத்திற்கு மகள் ஜோதியுடன் அவள் வந்து தலைகாட்டிவிட்டுப் போயிருந்தாள்.

ரிஸப்ஷனுக்குக் கட்டாயம் வரவேண்டும் என்ற வற்புறுத்தலை அவளால் தவிர்க்க முடியவில்லை.

மணப்பெண் அவளது தொழிற்சாலை மானேஜரின் மகள்.

எனவே காலை—மாலை இரு வேளைகளிலும் கல்யாணத்திற்கு வந்திருக்கும் தொழிற்சாலை ஊழியர்களுடன் அவள் கலந்து கொள்ள வேண்டிய நிர்பந்தம்.

காரைவிட்டு இறங்கி மண்டபத்திற்குள் நுழையு முன்பே கை கூப்பிக் கொண்டு மானேஜர் ராமதுரை பெருத்த புன்னகையுடன் அவளை வரவேற்க வாசலுக்கே வந்து நின்றுவிட்டார். காலையில் மணமேடையில் பெண்ணின் தந்தையென்ற தகுதியில் புது வேட்டி—அங்கவஸ்திரமுமாக வளைய வந்து கொண்டிருந்தவர். மாலை ரிஸப்ஷனில் கோட்டும் ஸூட்டும் டையுமாக மாப்பிள்ளைக்கு மேல் ஒரு படி அட்டகாச அலங்காரத்தில் இருந்தார்.

கையோடு கொண்டுவந்த பரிசுப் பொட்டலத்தை மணப் பெண்ணிடம் தந்துவிட்டு அவள் முன் வரிசையிலிருந்ததொரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

பெண்ணுக்கு என்ன பரிசு கொடுக்கவேண்டும் என்று அவள் மண்டையை உடைத்துக் கொள்ளவில்லை.

எந்தக் கல்யாணத்திற்கு அவள் போகவேண்டும்—யாருக்கு எந்தவிதமான பரிசுகள் வாங்கித்தர வேண்டும் என்பதையெல்லாம் தீர்மானிப்பது அவள் மகள் ஜோதி.

அம்மாவின் அன்றாட வேலை அட்டவணையைக் கவனித்து நினைப்பூட்டுவதும் அவளது வேலை.

பரிசுப் பொருள்களை அழகான வண்ணக் காகிதங்களில் சுற்றி ஒட்டி பெயர் எழுதி வாழ்த்துச் சீட்டையும் கூட வைத்து... அம்மா புறப்படுமுன் பொறுப்பாக காரில் கொண்டு வைத்துவிடும் வேலை அவளுடையதாக இருந்தது.



மானேஜர் மகளுக்கு ஒரு தங்க நெக்லஸ் பரிசாகக்
கொடுக்க வேண்டும் என்று ஜோதிதான் தீர்மானித்தாள்.
அம்மா காரை ஓட்ட அவள்தான் நகைக்கடைக்குச்
சென்று திட்டமிட்ட பணத்திற்குள் நகையைத் தேர்ந்து
எடுத்துவந்து வண்ணக்காகிதத்தில் சுற்றித்தயாராக வைத்
திருந்தாள்—காலை கல்யாணத்தின்போது பெண்ணுக்கு
அவள் சார்பில் ஒரு சிறு பரிசைக் கொடுத்திருந்தாள்.

மாலை ரிஸப்ஷன்போது அம்மா தன் கையாலே
மணப்பெண்ணிடம் பரிசைச் சேர்த்துவிட வேண்டுமென்ற
ஆலோசனை ஜோதியுடையது. ஜோதி மட்டும் அவளுக்
குத் துணையாக இருந்திராவிட்டால்...விமலா...தனிமை
யில்...கணவனை இழந்துவிட்ட துயரத்தில் பொடியாகி
விட்டிருப்பாள்.

"ஜோதி... வெரி ஸ்வீட் கேர்ல்...' தனக்குள்ளே சொல்
லிக்கொண்டு... மேடையில் அமர்ந்திருந்த புல்லாங்குழல்
கச்சேரி கோஷ்டியின் மேல் பார்வையை ஓட்டிக்
கொண்டிருந்தாள்.

மேடையில் புல்லாங்குழல் கச்சேரி. கீழே பெருத்த
பேச்சுக் கச்சேரி என்று ஏகப்பட்ட சத்தம். மண்டபத்தை
மறைத்துக் கொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்துப்
பெருமூச்சு விட்டாள்.

எப்பொழுதுதான் நாம் இந்த சம்பிரதாயங்களைச்
சுருக்கிக் கொள்ளப் போகிறோமோ? அலுப்புடன் அவள்
திரும்பியபோது பின்னாலிருந்தவரின் பேச்சு துல்லிய
மாகக் கேட்டது.

''ரிஸப்ஷனுக்குக் கட்டாயம் நல்லதொரு கச்சேரி
வைக்கணும். எங்களுக்கு வேண்டியப்பட்டவங்க நிறையப்
பேர் வருவாங்க, சாப்பாடும் பிரமாதமாக இருக்கணும்னு
மாப்பிள்ளை வீட்டவர்கள் கண்டிஷன் போட்டாங்
களாம்.''

விமலாவின் காதுகள் சூடாகிப் போயின. நெஞ்சு படபடவென்று துடித்தது.

இப்படித்தானே சில நிபந்தனைகளை விதித்து... அவள் சிந்தனை பின்னோக்கி ஓடுமுன் தன் பெயரைச் சொல்லி யாரோ அழைப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

"திருமதி விமலா கணபதிதானே?" கைகூப்பிக் கொண்டு தன்முன் நின்ற அந்த மனிதரைச் சட்டென்று அடையாளம் கண்டு கொள்ள இயலாது குழப்பத்துடன் விழித்தாள்!

"வருஷங்கள் பல ஆயிட்டதில்லையா... என்னைத் தெரியலை? ஆனால் நான் உங்களைப் பார்த்ததும் கண்டு கொண்டு விட்டேன்." பற்கள் லேசாகத் தெரியச் சிரித்தார் அவர்.

வாட்டசாட்டமான தோற்றம்-வயது ஐம்பதிருக்கும் என்று அவளது உடனடியான கணிப்பு...நெற்றியை அகலமாக்கிக் கொண்டு பின்னால் நகர்ந்து கொண்ட நரை ஓடிய கிராப், பிரஷ் மீசை...லேசாக நரைத்த காதோர கிருதாக்கள், குறுகுறுத்த கண்கள், சொந்தம் கொண்டாடிப் பேசுகிற மனிதர். யார் இவர்?

திக்கென்ற உணர்வில் மறுபடியும் அந்த மனிதரை உற்றுப் பார்த்தாள்.

"காலம் என் தோற்றத்தைக் கொஞ்சம் மாற்றி விட்டிருக்கு. ஆனால் நீங்க அன்று இருந்தது போலவே அதே விமலாவாக இருக்கிறீங்க."

மறுபடி பெரிதாகப் புன்னகை செய்தார் அந்த மனிதர்.

எத்தனை பெரிய பொய்? இருபது ஆண்டுகளுக்குப் பின்னரும் அப்படியே அவள் கொஞ்சமும் மாறாது இருக்க முடியுமா என்ன? அவளது மூக்குக் கண்ணாடியின் அகல



பிரேமில் கண்களின் கடையோரம் ஆரம்பமாகி விட்டிருந்த சுருக்கங்கள் ஒளிந்துகொண்டிருந்தன. கூந்தலுக்குச் சாயம் — முகத்திற்கு ஒப்பனை — பொறுக்கியெடுத்து அணிந்துகொண்ட நாசூக்கான நகைகள்—கச்சிதமான உடற்கட்டு... இவையெல்லாம் அவளது உண்மை வயதிலிருந்து பத்து ஆண்டுகள் ஒரேயடியாக விழுங்கிவிட்டிருந்தன.

அதனால் அவள் இன்னமும் இளம் பெண் போல வெளிப் பார்வைக்குத் தெரிந்தாள். ஆனால் உற்றுப் பார்த்தபோது அவள் வீட்டுக் கண்ணாடி உண்மையைச் சொல்லியது.

'நாற்பது வயதை எட்டிவிட்டாய்...நாய் குணத்தைக் கொண்டு விடாதே...' அன்றாடம் அவளுக்கு அது எச்சரித்துக் கொண்டிருந்ததே...

புருவங்களைச் சுருக்கிக் கொண்டு மூளையை ஒரு முறை கசக்கி விட்டுக் கொண்டாள்.

பளிச்சென்று ஞாபகத்தில் வந்து நின்றார் அவர்.

"மிஸ்டர் சிவநேசன் தானே?" மெல்லிய குரலில் கேட்டாள்.

முகம் முழுவதும் சிரிப்பில் மலர அவளருகே காலியாகக் கிடந்த நாற்காலியில் சிவநேசன் அமர்ந்து கொண்டார்.

"கடைசிலே கண்டு பிடிச்சுட்டீங்களே. மறந்து போயிருப்பீங்கன்னு நினைச்சேன்."

"ஆசைமுகம் மறந்து போச்சே. இதை யாரிடம் சொல்லுவேன் தோழி.'

புல்லாங்குழல், இசையை ஒலிபெருக்கி மண்டப முழுவதும் பரப்பிக் கொண்டிருந்தது.

'நேசம் மறைக்கவில்லை எனில்...நினைவு முகம் மறக்கலாமோ...'

முகத்தைச் சுளித்துக் கொண்டாள் விமலா.

''கேள்விப்பட்டேன். நீங்கள் இப்போது தனியா தொழிற்சாலையைக் கவனிச்சுக்கிட்டு வறீங்கன்னு. சரி தானே?''

தலையை அசைத்தாள் அவள். வார்த்தைகள் தொண்டையிலேயே நின்று விட்டன.

''நான் சென்னையிலேயே குடிவந்து விட்டேன்.'' சொல்லியபடி, தமது சட்டைப் பையிலிருந்த பர்சை எடுத்து தமது பெயர் பொறித்த விசிட்டிங் கார்டை அவளிடம் நீட்டினார்.

''உங்க முகவரியைச் சொல்லத் தேவையில்லை. டெலிபோன் டைரக்டரியிலிருந்து பார்த்துக் குறிச்சு வச்சுக் கொண்டிருக்கேன். அடையாறில் தங்கியிருக்கீங்கன்னு தெரியுது. கூட...''

''மகள் இருக்கிறாள். காலேஜ்படிக்கிற பெண்.'' சுருக்கமாகக் கூறினாள்.

அதற்குள் மானேஜரின் மனைவி அருகில் வந்து பவ்யமாகக் குனிந்து மெல்லிய குரலில் சொன்னாள்.

''நீங்க இருந்து சாப்பிட்டுட்டுப் போகணும்—காலை முகூர்த்தத்தின் போது காப்பி கூட சாப்பிடலைன்னு வீட்லே அவர் வருத்தப்பட்டார்.''

''நான் ராத்திரி வேளையில் சாப்பிடறதில்லை.''

''ஒரு நாள் சாப்பிட்டால் உடம்பு கெட்டுவிடாது. இது உங்க வீட்டுக் கல்யாணம். நீங்க ஒரு வாய் சாப்பிடாமப் போனால் நாங்க விடமாட்டோம்.''

வீட்டிற்கு விரைவாகத் திரும்ப நினைத்த விமலா... முதல் பந்தியிலேயே சாப்பிட எழுந்து விட்டாள்.



சாப்பாட்டு ஹாலில் அவள் பக்கத்திலேயே வந்து அமர்ந்து கொண்டார் சிவநேசன்.

''வடநாட்டிலேயே வேலை செய்து கொண்டு வாழ்ந்து விட்டதாலே வந்த புதிசில் எனக்கு சென்னை வாசம் பிடிக்கவேயில்லை. ஆனா இப்போது பழக்கமாகி விட்டது.''

வரட்சியாகப் புன் முறுவலித்தாள் பதிலுக்கு அவள்.

''என் மனைவி இறந்து இப்போ நாலு வருஷமாகிறது. பம்பாயில் தனியா வசிக்கப் பிரியமில்லாம இந்தப் பக்கம் வந்து விட்டேன். திருவல்லிக்கேணியிலே எங்களுக்குச் சொந்த வீடு ஒண்ணு இருந்தது. அதை விற்க வேணும்னு பசங்க ரெண்டு பேரும் அடம் பிடிச்சார்கள். துபாய் போய் சம்பாதிச்சுக் கொண்டு வந்த காசைச் செலவழிச்சு ஃபிளாட் கட்டிப் போட்டு...வாடகைக்கு விட விரும்பினார் ஒருவர். நல்ல விலைக்கு வித்து மகன்கள் ரெண்டு பேருக்கும் சேர வேண்டியதைக் கொடுத்துட்டு... என் பங்கை வங்கியில் போட்டுக் கொண்டு வாடகைக்கு ஒரு சின்ன ஃபிளாட் எடுத்துக் கொண்டு தனியே வசிக்கிறேன். பிள்ளைகள் ரெண்டு பேரும் வடக்கே வேலை பார்க்கிறார்கள். கூட வந்து இருக்கச் சொல்றாங்க. ஆனால் நான் என் சுதந்திரத்தை அதிகம் விரும்புகிறவன். தனியே இருக்க ஆசைப்படுகிறேன்.'' சிரித்தபடி அப்பளத்தை ஒடித்து வாயில் திணித்துக் கொண்டார் சிவநேசன்.

மௌனமாகத் தலையை அசைத்தபடி சாப்பாட்டைக் கொறித்துக் கொண்டிருந்தாள் அவள்.

''எல்லாம் வந்ததா?'' மானேஜரின் மனைவி புன்னகையுடன் வந்து விசாரித்து விட்டு நகர்ந்தாள்.

''என்னைப் பத்தி நான் ஓரளவு சொல்லி விட்டேன். உங்களைப் பற்றி ஏதும் நீங்க சொல்லலையே?'' பாயசக் கிண்ணத்தைக் கையில் எடுத்துக் கொண்டு கேட்டார்.

''நீங்கதான் என்னைப் பத்தித் தெரிஞ்சு வச்சுக் கொண்டிருக்கீங்களே! அதைத் தவிர புதுசா சொல்ல ஒண்ணுமில்லையே...'' சொல்லிவிட்டு மெல்ல அவள் எழுந்திருந்தாள்.

''மன்னிச்சுக்கோங்க. நான் கொஞ்சம் சீக்கிரமா வீட்டுக்குப் போகணும். குழந்தை தனியா இருப்பா.''

''உங்களோட உங்க தாயார் கூட இருப்பதாகக் கேள்விப்பட்டேன்.''

''அவங்க போன வருஷம் இறந்துட்டாங்க.''

''அப்படி ஒண்ணும் அவங்களுக்கு வயசாகலையே?''

''காலம் அப்படியே ஸ்தம்பிச்சு நிக்கிறதாக நாம நினைக்கிறோம். அது இறக்கை கட்டிக்கொண்டு பறக்கிறது.'' சொல்லியபடி அவள் நகர்ந்தாள்.

மானேஜரிடம் சொல்லிக் கொண்டு, அவர் மனைவி கொண்டு வந்து தந்த வெற்றிலை பாக்கு, பழப்பையுடன் அவள் வெளியேறியபோது பின்னால் பலத்த காலடி ஓசை கேட்டது. திரும்பிப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனாள். மூச்சிறைக்க சிவநேசன் ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தார். ''தயவு செய்து உங்க காரில் என்னை பஸ் நிலையத்தில் விடமுடியுமா?''

தாடை இறுக அவள் தலையசைத்தாள். சிவநேசன் பாய்ந்து காரில் ஏறி அவளது பக்கத்தில் அமர்ந்து கொண்டார்.

பஸ் நிலையத்தில் அவரை இறக்கிவிட்டு அவள் வீட்டுக்கு வேகமாக வந்து கொண்டிருந்தாள்.

மகள் ஜோதி...கார் தோட்டத்திற்குள் விரையுமுன் கதவு திறந்து விட்டாள்.

''அம்மா கல்யாண வீட்டில் சாப்டீங்களா? உங்க உடம்புக்கு ஒத்துக்காதே! நான் உங்களுக்காக மேஜை மேல் தட்டு வைத்துக் காத்திருக்கேனே!'' மனத்தாங்கலுடன் கேட்டாள்.



''ஒரே களைப்பா இருக்கு...நான் போய்ப் படுத்துக்கறேன்'' என்றபடி அவள் மாடிப்படிகளை வேகமாகக் கடந்து தனது படுக்கையறைக் கதவைத் திறந்து விளக்கைப் போட்டாள்.

படுக்கை தலை மாட்டில் சாய்ந்த வாக்கில் வைக்கப்பட்டிருந்த கணவரது புகைப் படத்தில் பார்வை படர்ந்தது.

கண்ணாடிக்குள் அடங்கியிருந்த கணேசன் அவளைப் புன்னகையுடன் பார்த்தார்.

இரவு உடை அணியாது அப்படியே உடுத்திச் சென்ற பட்டுச் சேலையுடன் அவள் படுக்கை மீது சரிந்து விட்டாள்.

திடீரென்று அவளுக்கு அழுகை வந்தது. இருபது ஆண்டுகளுக்கு முன்னர் ஒருநாள் குமுறி அழுத அழுகையின் தொடர்ச்சிபோலத் தலையணை மீது முகத்தைப் பதித்துக் கொண்டு குலுங்கி அழுதாள். ஆனால் அன்று அழுததற்கும் இன்று அவள் கண்ணீர் பெருக்குவதற்கும் வித்தியாசம் அதிகம் இருந்தது.

அன்று ஏமாற்றப்பட்டோம் என்ற துயரம் நெஞ்சை நொறுக்க அவமானத்தில் துடித்து அழுதாள்.

இன்று...இழந்துவிட்டோம் என்ற துயரம் நெஞ்சைப் பிழிய அவள் அடக்கமாட்டாது...அழுதாள்.

## 2

தாய் மகள் என்ற இரண்டு பேர் அடங்கிய சிறு குடும்பம் அது.

அவர்களிருவரும் வசதியாக வாழ உதவ, சில வேலைக்காரர்கள் இருந்தனர். ஆனால் எல்லோருமே நீண்ட காலம் அங்கேயே பணிபுரிந்து பழகிவிட்ட ஆட்கள்.

சமையற்காரம்மா சங்கரி எஜமானர் காலத்திலிருந்து வேலை செய்கிறவள். சிறு வயதிலேயே விதவையாகி—கிராமத்தில் வறுமையில் திண்டாடிக் கொண்டிருந்தவள். கணபதி இரக்கப்பட்டு அழைத்து வந்து சமையல் வேலையில் அமர்த்தினார்—உறவுக்காரி போல அவர்களுடன் ஒட்டிக் கொண்டு விட்டவள்.

தோட்டக்கார தங்கவேலு எஜமான் காலத்து ஆள்—காது சிறிது மந்தமாகி...முட்டிகளில் நோவு காணத் தொடங்கியிருந்தும் அம்மாவை விட்டுப் போக மனமின்றித் தொடர்ந்து வேலை பார்த்துக் கொண்டிருந்தான்.

டிரைவர் கந்தசாமியும் பல காலமாக வேலை பார்க்கிறவர்— ஜோதி சிறு குழந்தையாக இருந்தபோது வந்தவர்... அவளைத் தம் தோளில் தூக்கிக் கொஞ்சி மகிழ்ந்தவர்... இப்போது கல்லூரி மாணவியான அவளுக்குக் கார் ஓட்டிக் கொண்டிருக்கும் பொறுப்பிலிருந்தார்.

வேலைக்காரி முனியம்மாளும் அப்படியே பல ஆண்டுகளாக அந்த வீட்டில் உழைத்துக் கொண்டிருந்தவள்.

ஒரு துரும்பைக் கூடத் தொடாத கை சுத்தக்காரி... ஆனால் வால் கொஞ்சம் அதிகம்... அள்ளித் தெளித்த கோலம் போல அவசரமான வேலைகள்.

எப்படியிருந்தால் என்ன, நம்பிக்கை மிகவும் முக்கியமாயிற்றேஎன்றுவிமலா கண்டும்காணாமலும் இருந்தாள்.

தொழிற்சாலையை நிர்வகிப்பதே அவளுக்குப் பெரிய காரியமாக இருந்ததால் வீட்டுப் பொறுப்பு அனைத்தையும் ஜோதியிடம் ஒப்படைத்து விட்டிருந்தாள்.



பி.ஏ. இறுதி ஆண்டில் படித்துக் கொண்டிருந்த ஜோதி ரொம்பவே சுறுசுறுப்பான பெண். புத்திசாலி—எல்லாவற்றையும் விட அம்மாவிடம் மிகவும் பாசமான பெண்.

காலைவேளையில் எப்பொழுதுமே வீடு இரண்டு பட்டுப் போய் விடும். விமலா எட்டு மணிக்குள் தொழிற்சாலையில் இருக்க வேண்டியவள். ஜோதி கல்லூரிக்குப் போக வேண்டுமென்று அவசரப்படுவாள். சமையற்காரி சங்கரி விடிவதுக்கு முன்பே எழுந்து ஸ்நானத்தை முடித்துக் கொண்டு— தானே துவைத்துக் காயவைத்துக் கொடியில் உலரப் போட்டிருக்கும் மாற்றுப் புடவை—ரவிக்கைகளை அணிந்து கொண்டு ஈரத் தலையைத் துவட்டி—அள்ளி முடிந்து கொண்டு... பூஜையறை வேலையைக் கவனித்து விட்டு சமையல்கட்டிற்குள் நுழைந்தால் அவளுக்கு மூச்சுவிடப் பொழுதிருக்காது.

எத்தனை சீக்கிரம் அவள் எழுந்திருந்த போதிலும்... விமலா தொழிற்சாலைக்குச் செல்லத் தயாராகி மாடியினின்று கீழேவருவதற்குள் அவள் பதறிப்போய் விடுவாள்.

சூடான பாத்திரங்களை அவசரத்தில் தொட்டுவிட்டுக் கையை உதறிக் கொண்டு தவிப்பாள். சட்டினிக்கு உப்புப் போட்டு அரைத்தோமா என்று சந்தேகத்தில் திகைப்பாள்— தாயும் மகளும் காப்பி பலகாரம் சாப்பிட வந்து மேஜையருகே உட்காருமுன் தட்டுகளையும் டம்ளர்களையும் கொண்டு வைக்க அவசரப்பட்டு வாசற்படியில் தடுக்கிக் கொண்டு விரைவாள்.

வேலைக்காரி முனியம்மாள் அப்பொழுதுதான் சாப்பாட்டறையைச் சுத்தம்செய்யத் துடைப்பத்துடன் வந்து நிற்பாள்.

"சீக்கிரம். அம்மா வந்துக்கிட்டிருக்காங்க.'' எச்சரிப்பாள் சங்கரி...

அன்று காலை விமலா மாடியினின்று இறங்கி வந்த போது சங்கரி கவனித்தாள்.

அம்மாவின் முகம் லேசாக உப்பி... இமைகள் வீங்கி— கண்கள் சிவந்திருந்தன. அழுதிருக்காங்க போலிருக்கு. எதற்காக? சில தினங்களுக்கு முன்னர்தானே— கணபதி யின் மறைவு நாள் வந்து போனது?— வழக்கம் போல விமலா அந்த நாளில் சம்பகம் கருணை இல்லத்துக் குழந் தைகளின் பகல் உணவுச் செலவை ஏற்றுக் கொண்டாள். வடை பாயாசத்துடன்... முன்னூறு குழந்தைகள் வயிறு முட்ட சாப்பிட்டனர்.

அன்று முழுவதும் விமலா துயரத்தில் துவண்டு கிடந் தாள். ''குழந்தைகளே... இன்னிக்கு உங்களுக்கு திரு. கணபதியின் நினைவு நாள் விருந்து அளிக்கப்படுகிறது. அவருக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டு விமலா அம்மாவுக்கு நன்றி சொல்லிவிட்டுச் சாப்பிடணும்.'' தலைவி வழக்கமாகச் சொல்வதைக் கூற குழந்தைகள் ஒரே கோஷமாக ''நன்றி அம்மா...'' என்று கத்திய போது விமலா கண்கள் பனித்துப் போனாள். அன்று மாலை... மலர் மாலை ஒன்றை வாங்கிக் கொண்டு வந்த வள் தன் கரத்தாலேயே கணவரது போட்டோவுக்குச் சூட்டிவிட்டு காப்பியைக் கூடச் சாப்பிடாது படுக்கை யறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள். இரவு சாப்பாட்டிற்கு இறங்கி வந்தபோது இன்றுபோலத் தான் அழுத முகமும்— சிவந்த கண்களுமாகக் காணப் பட்டாள்.

பலவாறு எண்ணியபடி சங்கரி தட்டில் இட்லிகளை வைத்து சாம்பாரை ஊற்றி நெய்யை வார்த்தாள்.

''ஒரு இட்லி போதும்...'' என்று முணுமுணுத்தவளை மிகவும் பரிவுடன் பார்த்தாள் அவள்.

'சாப்பிடறதே இரண்டு இட்லி—அதையும் ஏன் குறைக்கணும்?'



''உங்களுக்கு நான் சொல்லணுமா அம்மா...ஆண் டாண்டு தோறும் அழுது புரண்டாலும்...ன்னு சொல்லி யிருக்காங்களே'' அன்போடு கூறிய வண்ணம் காப்பி டம்ளரை அருகில் நகர்த்தி வைத்தாள்.

விமலா நிமிர்ந்து அவளைப் பார்த்து லேசாகப் புன் முறுவலித்தாள். தலையை அசைத்துவிட்டு மௌனமாக சாப்பிடத் தொடங்கினாள்.

சமையற்காரம்மா உள்ளே சென்றதும் மகள் தன் கையை நீட்டி அம்மாவின் கரத்தை ஆதரவுடன் பற்றிக் கொண்டாள்.

''அம்மா வருத்தப்படாதீங்க. இது தவிர்க்க முடியாத பிரிவாச்சே அம்மா'' என்றாள்.

மகளின் முகத்தைப் பார்த்து மௌனமாக முறுவலித் தாள் விமலா.

அவள் மனதைக் கலவரப்படுத்தித் துயரத்தில் தாங்க முடியாத துன்ப நினைவில் கண்ணீர் சொரியச் செய்த சங்கதி முற்றிலும் வேறு என்று அவள் விரிவாகச் சொல்ல விரும்பவில்லை.

அவள் உள்ளத்திலே அடைந்து கிடக்கும் சில ரகசியங் களை அவள் யாருடனும் பகிர்ந்துகொள்ள வேண்டிய அவசியமில்லையே.

விரைவாக காப்பியைச் சாப்பிட்டுவிட்டு எழுந்து கை யைக் கழுவிக்கொண்டு தனது தோள்பையுடன் புறப்பட் டாள்.

மகள் கல்லூரிக்குச் செல்ல மாருதிக் காரை வைத்து விட்டு அம்பாசிடரில் ஏறிக் கொண்டாள்.

கடமை ஒன்றைச் செய்யும் தீவிரத்துடன் கிளம்பிப் பழக்கப்பட்டவள் இன்று... உணர்வுகள் தொய்ந்து உற் சாகம் இன்றிப் புறப்பட்டிருந்தாள்.

தொழிற்சாலைக்குள் நுழைந்து வண்டியை நிறுத்தத்தில் விட்டுவிட்டுக் கவனிக்க வேண்டிய காரியங்களில் மும்முரமாகிப் போனாள்.

பத்து மணி அளவில் தேநீர் இடைவேளையின்போது தன் அறைக்கு வந்து உட்கார்ந்தாள்.

பையன் சூடான தேநீரைக் கோப்பையில் நிறைத்து எடுத்துக் கொண்டுவந்து அவள் முன் வைத்துவிட்டுப் போனான்.

கோப்பையை எடுத்து மெல்லப் பருகிக் கொண்டே மேஜை மேலிருந்ததொரு ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்தபோது தொலைபேசி கிணுகிணுத்தது.

மறுமுனையில் சிவநேசனின் கரகரத்த குரல்.

"உங்களை நான் தொல்லைப் படுத்துகிறதாக நினைக்கக் கூடாது."

"சொல்லுங்கோ சங்கதியை" தணிவான குரலில் கேட்டாள்.

"நேத்திக்கு அந்தக் கல்யாணத்திலே உங்களைச் சந்திப்பேன்னு நான் கனவிலும் நினைக்கலை. வீட்டுக்குத் திரும்பினதும் எனக்கு வெகுநேரம் பல விஷயங்களின் ஞாபகம் வந்து மனது ஒரே குழப்பமாகி விட்டது."

"எனக்கும் பல சங்கதிகள் நினைப்புக்கு வந்தன. மனசு வேதனைப் பட்டது."

"அப்படியா விமலா...இதைக் கேட்க எனக்கும் கொஞ்சம் ஆறுதலாகத்தானிருக்கு."

"இருவரும்ஒரேமாதிரியாத்தான்சிந்திச்சிருக்கோம்."

லேசாக இருமினாள் விமலா. மறுமுனையிலிருந்து சிவநேசன் சட்டென்று கவலையுடன் வினவினார்.

"உடம்புக்கு சுகமில்லையா? இருமுறீங்களே?"



"நல்ல சுகத்தோடதான் இருக்கேன். லேசா ஜல தோஷம். அவ்வளவு தான்."

"இந்த வயசிலே நாம் ரொம்ப ஜாக்கிரதையாக உடம்பைப் பார்த்துக்கணும். பல வியாதிகளும் சட்டென்று பிடிச்சிக் கொள்ளும் வயது இது."

"பல ஆசைகளும்னு கூடச் சொல்லலாம் இல்லையா? சிரித்தாள் அவள்.

"எப்பொழுதும் போல வேடிக்கையாகத்தான் பேசுறீங்க. அதையெல்லாம் நான் மறக்கலை."

மௌனமாக இருந்தாள் விமலா.

"ஹலோ...கேட்கிறதா..." உரத்த குரலில் மறு பக்கத்தில் சிவநேசன் கத்தினார்.

"நன்னா கேட்கிறது. சொல்லுங்க இன்னும் ஒரே நிமிஷம்தான் நான் பேச முடியும். பிறகு இங்கே ரொம்ப வேலையிருக்கு."

"என்னைப் போல ரிடயர் ஆயிடலைன்னு சொல்ல வரீங்க, புரிகிறது. உங்க நேரத்தை வீணாக்க மாட்டேன். உங்களைச் சந்திச்சது பற்றி ரொம்ப மகிழ்ச்சின்னு சொல்லிக்க விரும்பறேன்."

"தாங்க் யூ!" என்று மேலே தொடராது தொலைபேசியை வைத்தாள். மீண்டும் நெஞ்சில் ஒரு படபடப்பு... முகத்தில் குப்பென்று வியர்வை அரும்பிக் காதோரங்களில் வழிந்தோடியது.

கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள். உடல் முழுவதும் அனலாகிவிட்டது போன்றதொரு எரிச்சல்.

மேஜை மீது பையன் வைத்துவிட்டுப் போயிருந்த கண்ணாடி கூஜாவிலிருந்த ஐஸ் தண்ணிரைத் தம்ளரில் ஊற்றி வேகமாகக் குடித்தாள்.

அப்பொழுதும் எரிச்சல் அடங்கவில்லைபோல மூக்கும் முகமும் கபகபவென்று எரிந்தது. மார்பு வேகமாகத் துடித்தது. உள்ளங்கைகள் வியர்வையில் நனைந்து போயின.

மேற்பார்வையிட்டு யோசனை சொல்ல வேண்டிய வேலைகளை அன்று அவள் முன்னதாக முடித்துக் கொண்டு விட்டதால் கொஞ்சம் ஓய்வாக தன் அறையில் இருக்க நேரம் இருந்தது.

ஆனால் மனம் ஓய்வாக இருக்க மறுத்தது. கடந்த காலத்து சங்கதிகளை அவள் மறக்க விரும்பிக் குழி தோண்டிப் புதைத்து விட்டிருந்த விஷயங்களைத் திரும்பி அசை போட ஆரம்பித்து விட்டது.

ஒரு சிங்கத்தின் முதுகின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு அதை அடக்கிவிட முடியும். இன்னும் என்ன வெல்லாமோ செய்ய முடியும். ஆனால் இந்தச்சிந்தையை அடக்கி... என்று சும்மா சொல்லவில்லை.

அவளது சிந்தனையில் கடந்த காலத்து நினைவுகள் நீர்வீழ்ச்சியாக விரைவாகத் தோன்றத் தொடங்கின. தன்னை மறந்து பிரமித்துப் போய் உட்கார்ந்து விட்டாள்.

## 3

இப்போது அவளுக்கு ஜோதியைவிட இரண்டு வயது கூடுதலாக இருக்கும். இளமைப்பருவத்துச் செழுமையில். மாநிறமாக இருந்தும் ஒப்பனைகள் இல்லாத போதும் பார்க்கப் பளிச்சென்றுதான் இருந்தாள். ஒடிய உயரமான தோற்றம். கல்யாண வயசு தாண்டிக் கொண்டு போகிறதே என்று அம்மா கவலைப்பட்டுக் கொண்டிருந்த காலம்.



''உன் வயசில் எனக்குக் கல்யாணமாகி...உன் அண்ணன் கைக்குழந்தையாக இருந்தான். ம்!...'' என்று அம்மா அலுத்துக் கொண்ட போது குற்ற உணர்வில் தவித்தாள்.

வந்த வரன்கள் பல காரணங்களால் தட்டிப்போயின. அது என்னவோ அவளுடைய பிசகு போன்று ஒரு தவிப்பு அவளுள் ஏற்பட்டிருந்தது.

இரண்டு பெண்கள், ஒரு பிள்ளை என்ற அளவான தொரு குடும்பம்தான். ஆனாலும் இரண்டு பெண்கள்... 'கல்யாணம் செய்து கொடுத்துக் கரையேற்ற வேணுமே' அம்மா அடிக்கடி கவலையில் முனகினாள்.

புரசைவாக்கம் பொன்னம்பலத் தெருவிலிருந்த ஓட்டுக்கூரை வீடுதான் அப்பாவின் ஆஸ்தி, அப்ப வேலையிலிருந்து ஓய்வடைந்ததும் கிடைத்த சொற்ப பென்ஷனில் குடும்பத்தை நிர்வகிக்க அம்மா ரொம்பவே தவித்துப் போனாள். அண்ணனுக்கு வேலை கிடைத்த பின்னர்தான் அவர்கள் வீட்டில் தாராளமாக மூன்று வேளை எல்லோரும் சாப்பிட முடிந்தது. தங்கை சுமதி பி. ஏ. முதல் வகுப்பிலிருந்த போது அவள் தன் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு வீட்டிலிருந்தாள்.

வேலைக்கனுப்பி அவளது சம்பாத்தியத்தில் வாழ அப்பாவுக்கு விருப்பமே இல்லாததால்... வீட்டோடு தங்கி அடுப்பங்கரையில் அம்மாவுக்கு உதவிக் கொண்டு அவள் அலுத்து விட்டிருந்த சமயம்.

பங்களூரிலிருந்து பெரியம்மா அவர்களைப் பார்க்க வந்திருந்தாள்-அம்மாவின் அக்கா. நல்ல இடத்திலேயே வாழ்க்கைப் பட்டவள். கணவன் போன பின்னரும் அவர் விட்டுப்போன சொத்துக்களுடன் சுகமாகவே வாழ்ந்து கொண்டிருந்தாள்.

பண உதவி செய்ய விரைவாக முன்வராவிட்டாலும் பெரியம்மா விமலாவைத் தன்னுடன் அழைத்துச் சென்று கொஞ்சநாள் வைத்திருந்து ஏதாவது வரன் அமைகிறதா என்று பார்க்கப் பிரியப்பட்டாள். ''கூடப் பிறந்த சகோதரிதானே. தன்னந்தனியாக ஒரு வேலைக்காரி துணையுடன் வாழ்கிறாள். கொஞ்ச நாள் பங்களூருக்குப் போய் இருந்துவிட்டு வரட்டும். அக்காவுக்கும் உதவியாக இருப்பாள். அப்படியே ஒரு நல்ல வரன் கிட்டினால் நமக்கும் நன்மையாகும்.'' அம்மா சொன்னதை அப்பா மறுக்க முடியவில்லை. ஊர் திரும்பிய பெரியம்மாவுடன் படு குஷியாகக் கிளம்பி விட்டாள் விமலா.

அவளது ஆயுளில் அதுதான் முதல்முறை சென்னையை விட்டு அயல் ஊருக்குச் செல்வது.

வெய்யிலை வாரிக் கொட்டிய சென்னைக் கோடையிலிருந்து விடுதலை, ஓட்டுக் கூரை வீட்டிலிருந்து. கொஞ்ச நாட்கள் பங்களா வாசம், கார்சவாரி, கடைத் தெரு சுற்றல் என்ற எதிர்பார்ப்புகளில் உற்சாகமாகப் புறப்பட்டிருந்தாள். அவளது எதிர்பார்ப்புகள் வீணாகவில்லை. பெரியம்மா அவளிடம் பிரியமாகத்தான் நடந்து கொண்டாள். பெரியம்மாவுடன் காரில் ஏறிக் கொண்டு ஊரைச் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தாள்.

அவளது சிநேகிதிகள் பலரின் அறிமுகம் கிட்டியது.

பெரியம்மா தாராள மனதுடன் தனது பழைய பட்டுச் சேலைகள் இரண்டை அவளுக்கு உடுத்திக்கொள்ளக் கொடுத்து விட்டிருந்தாள்.

அவைகளை அணிந்துகொண்டு அவள். பெரியம்மாவின் தோழி வீட்டு விருந்திற்கும். சினிமாவுக்கும் சென்று மகிழ்ந்தாள்.

ஒருநாள் கூட வீட்டிலே தங்காதது போல உற்சாகத்துடன் இருவரும் ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தனர்.



அங்கேதான் முதல் முதலாக அவள் சிவநேசனைச் சந்தித்தாள். அப்போது அவன் இன்ஜினியர் பட்டம் பெற்ற இளைஞன்.

பெரியம்மாவின் தோழி வசந்தாவின் பேரக் குழந்தையின் ஆண் நிறைவு வைபவத்தின் போதுதான் அவள் சிவநேசனை அந்த வீட்டில் பார்க்க நேரிட்டது.

வசந்தா அம்மாவுக்குத் தூரத்து உறவுப் பையன். அவளைப் போல பெங்களூரைச் சுற்றிப் பார்த்து மகிழ வந்திருந்தவன்.

மதுரைப் பக்கத்துக் கிராமத்திலிருந்து வருகிறவன். பம்பாயில் விரைவில் உத்தியோகத்தில் அமரும் வாய்ப்பு கிட்டிருக்கிறது.

இத்தனையையும். அறிமுகம் ஆன சில நிமிடங்களிலேயே அவன் சொல்லிவிட்டான்.

விருந்தின்போது. இருவரும் தனியே ஒருபக்கம் நின்று கொண்டு பேச நிறைய சந்தர்ப்பங்கள் கிட்டின.

புரசைவாக்கம் பொன்னம்பலத்தெரு மனிதர்களைப் போல வசந்தா வீட்டவர்களுக்குக் குறுகிய நோக்கம் இருக்கவில்லை. வந்திருந்த பெண்களும்—ஆண்களும் நாணிக் கோணிக் கொள்ளாமல் நன்றாகவே நின்று நிதானித்துப் பேசி — சிரித்து மகிழ்ந்தார்கள்.

முதல் நாள் அறிமுகத்திலேயே அவளும் சிவநேசனும் நல்ல நண்பர்களாகி விட்டனர்.

அதற்குப் பின்னர் அவர்களது சந்திப்பு வீட்டிலும் தோட்டத்திலும் பின்னர் கடைத் தெருவிலும் பூங்காவிலும் தொடர்ந்து கொண்டு போனது.

அவளைத் தேடிக்கொண்டு தங்கள் வீட்டுக்கு சிவநேசன் வந்ததைப் பெரியம்மா தவறாகவே கொள்ளவில்லை.

அவனும் தொடர்ந்து வந்து போய்க் கொண்டிருந்தான்.

ஆரம்பத்தில் இருவரும் பொதுவான பல சங்கதிகளைப் பேசிவிட்டிருந்தனர்.

பின்னர் கல்லூரி, படிப்பு இத்யாதிகள்.

அதற்குப் பின்னர் அவர்களுக்குப் பிடித்த, பிடிக்காத சங்கதிகள் வெகுவாகப் பேசிக் கொண்டனர்.

வசந்தா அம்மா தங்கள் குடும்பத்துடன் மைசூருக்குச் சுற்றுலா கிளம்பியபோது விமலாவையும் பெரியம்மாவையும் தங்களுடன் கூட வரும்படி அழைத்திருந்தாள்.

வண்ண விளக்குகளுடன் பிரமிப்பூட்டிய பிருந்தாவனத் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த போது தான் சிவநேசன் அவளிடம் சொன்னான்.

"எத்தனை அழகாக இருக்கு பார்த்தீங்களா?" அவள் கேட்டாள்.

"உன்னை விட எனக்கு இது அழகாகத் தென்படலை."

திடுக்கிட்டுப் போய் அவள் திரும்பி அவனைப் பார்த்தாள். நெஞ்சு பரவசத்தில் துடித்தது.

"இப்படி உட்கார். உன்னோட பேசணும். அவங்கள்ளாம் சுத்திப் பார்க்கப் போயிருக்காங்க" என்று சிமெண்ட் ஆசனம் ஒன்றைக் காட்ட அவள் அமர்ந்தாள்.

இனிய பின்மாலைப் பொழுது. வண்ண விளக்குகளின் கண்கொள்ளாக் காட்சி, உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே வருடிய தென்றல்...

அந்த அழகான சூழ்நிலையில் அவன் படித்துச் சுவைத்த பல காதல் நவீனங்களில் வருவது போல அவன் சொன்னான்.

"வசந்தா அத்தை வீட்டில் உன்னைச் சந்தித்த முதல் நாளே என் மனசை உன்கிட்டே பறிகொடுத்திட்டேன்.



ஐ லவ் யூ விமலா, உன்னை நான் கல்யாணம் செய்துக்க விரும்பறேன். உனக்குச் சம்மதமா?"

கதைகளில் வருவது போல, சினிமாவில் அவள் பார்த்த காதல் காட்சியைப் போல... அவளால் நம்ப முடியவில்லை.

இது எப்படி சாத்யமாகும்? சிவநேசன் அந்தஸ்தில் அவர்களை விட உயர்ந்தவன்.

அவன் அப்பா பம்பாயில் ஒரு முக்கிய நிறுவனத்தின் உயர்மட்ட அதிகாரி.

பம்பாயில் மாதுங்காவில் அவர்களுக்குச் சொந்தமாகப் ஃப்ளாட் ஒன்று இருக்கிறது.

சென்னையில் கூட ஒரு வீடு உள்ளது. அவன் தாய் பெரிய இடத்துப் பெண்.

விரைவில் வேலைக்கு அமரப் போகும் இளம் என்ஜினியர். பார்க்க அவளை விட அழகானவன்.

எத்தனையோ ஏற்றத் தாழ்வுகள். அவளைக் காதலிக்கிறான்...கல்யாணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறான்.

அவள்?

அவளுக்கும் அவனைப் பிடித்திருந்தது. அவனுடன் நின்று பேசிச் சிரிப்பதை ரசித்தாள். அவனது தோழமை இனித்தது. ஒரு சமயம் அதுதான் காதலா?

"என்ன யோசிக்கறே? நம் கல்யாணத்திலே ஜாதி சமயப் பிரச்னை எதுவும் குறுக்கிடாது. அதனால் நாம் கவலைப்படத் தேவையில்லை."

"அந்தஸ்து குறுக்கிட்டால்...?"

"நான் விரும்புகிறேன் என்று சொல்லிவிட்டால், அதற்குப் பின் அந்தஸ்து எப்படிக் குறுக்கிடும்?"

அடக்கிக் கொள்ள முடியாத மகிழ்ச்சி. ஒப்புதல் தந்து விட்டாள்.

அதற்குப் பின்னர் அங்கே தங்கியிருந்த நாட்கள் எப்படித்தான் மாயமாக மறைந்தனவோ, அவளுக்கே தெரியாது.

பெரியம்மாவிடம் விஷயத்தைச் சொன்னபோது அவள் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தாள்.

''நான் சொல்லித்தானே அழைச்சுக் கொண்டு வந்தேன். பங்களூரில் உனக்குத் தக்க வரன் கிடைக்கலாம்னு எதிர்பார்த்தேன். கிடைச்சுட்டது.''

''பெரியம்மா எனக்குப் பயமாக இருக்கு...''

''எதுக்கு பயம்? எல்லாப் பொறுப்பையும் என்கிட்டே விட்டுடு. நான் இந்தக் கல்யாணத்தை முடிச்சு வைக்கிறேன்.''

பெரியம்மா மிகவும் பாடுபட்டாள் என்றேதான் சொல்ல வேண்டும். தன் தோழி வசந்தா மூலம் கல்யாணப் பேச்சை ஆரம்பித்தாள்.

அதுஅவ்வளவு சுலபமான காரியமாக இருக்கவில்லை.

பம்பாயிலிருந்து வசந்தாவுக்குத் தந்தி வந்தது.

'உடனே சிவநேசனை அனுப்பவும். அவன் வேலையில் சேரவேண்டிய ஆர்டர் வந்திருக்கிறது!'

சிவநேசன் புறப்பட்டுப் போனதுமே உலகமே இருண்டு போய்விட்டது போன்றதொரு மருட்சி விமலாவுக்கு.

பெரியம்மா ரொம்பவே பிடிவாதக்காரி. எப்படியாவது அந்த வரனை விமலாவுக்கு முடித்துவிட வேண்டுமென்றதொரு வீம்பு.

பையனுக்குத் தன் கைப்படக் கடிதங்கள் எழுதி வேப்பிலை அடித்து வீட்டிருந்தாள். 'விமலாவைத்தான் திருமணம் செய்து கொள்வேன். அவளைக் காதலிக்கிறேன், இல்லாவிட்டால் உயிரே போய்விடும்' என்று அவன் பய



முறுத்த, கடிதங்கள் வசந்தாவுக்கும், அவனது பெற்றோருக்குமிடையே பறக்க... முடிவில் அவர்கள் அரை மனதுடன் ஒப்புதல் தந்து விட்டிருந்தனர்.

பெண் பார்க்கும் படலம் ஆரம்பித்தது.

பெண்ணை அவளது வீட்டிலேயே... பெற்றோர் உற்றார் சூழ்நிலையிலேயே பார்க்க வேண்டும் என்று பிடிவாதம் செய்தார் சிவநேசனின் தந்தை.

பெரியம்மா ஒப்புக் கொண்டாள். போன இடத்தில் தங்கள் மகளுக்கு ஒரு நல்ல வரனைக் கண்டுபிடித்து விட்டாள் என்று பெரியம்மாவுக்கு வீட்டில் ஒரே புகழ் அர்ச்சனை.

# 4

**பெ**ண் பார்க்க அந்த வெள்ளிக்கிழமை அவர்கள் எல்லோரும் பம்பாயிலிருந்து வருகிறார்கள் என்றதும் அம்மா பரபரப்படைந்து போனாள்.

கூடத்தில் இங்குமங்கும் தொங்கிய ஒட்டடைகளைத் தட்டி அவசரமாக சுவருக்குச் சுண்ணாம்படித்து...நாற்காலியின் ஒடிந்த காலைத் தச்சரிடம் கொடுத்துச் சீராக்கி, தரையைக் கழுவித் துடைத்து சுத்தமாக்கி, முற்றத்துப் பாசியை பிளீச்சிங் பவுடர் போட்டுத் தேய்த்துக் கழுவி... அண்டாவைப் பளபளக்கத் தேய்த்து நீர் நிறைத்து வீட்டைத் துப்புரவாக்கினாள்.

ஆனால் சின்ன ஓட்டுக் கூரை வீட்டை ஒரு நிமிடத்தில் பங்களாவாக்கிவிட அவளிடம் என்ன பூதமா சேவகம் செய்து கொண்டிருந்தது?

'ஜிபூம்பா!' என்றவுடன்... அங்கே ஒரு மாடமாளிகை வந்து விடுமா? அதே. ஓட்டுக்கூரை வீடுதானே. நாயும்—

எருமை மாடும் நடை போட்டுக் கொண்டிருந்த அதே குறுகிய சந்துதானே அவர்கள் வசித்த தெரு?

அவர்கள் வீட்டில் பெண் பார்க்கப் பெரிய இடத்திலிருந்து வரப் போகிறார்கள் என்று 'குப்பையைக் கொண்டு தெருக்கோடிக் குப்பைத் தொட்டியில் பொருட்களைப் போடுங்கள். வாசலில் கொட்டாதீர்கள்...' என்று அடுத்த வீட்டுக்காரியை அதட்டி மிரட்ட முடியுமா?

மூக்கைப் பிடித்துக் கொள்ளாத குறை. முகத்தைச் சுளித்துக் கொண்டு சிவநேசனின் பெற்றோர்கள்... தங்கள் உறவினர் படையுடன் வந்து இறங்கினர்.

மாப்பிள்ளைப் பையனது அம்மாவைப் பார்த்ததுமே விமலாவின் தாய் பயந்து நடுங்கி விட்டாள்.

அவள் உடுத்தியிருந்த நூல் சேலையைப் பார்த்துச் சிரித்துக் கேலி செய்வது போல அந்தம்மாள் பட்டையான சரிகைக் கரை வைத்த காஞ்சீபுரப் பட்டில்... கழுத்திலும் கைகளிலும் தங்கம் மின்ன—காது மூக்குகளில் வைரம் வெளிச்சம் போட... தலை நிறைய மல்லிகைப் பூவும் நெற்றியை நிறைத்த குங்குமப் பொட்டுமாக... பலத்த அலங்காரத்துடன் வந்திருந்தாள்.

அப்பா அண்ணன் எல்லோரும் சலவையிலிருந்து எடுத்த வேட்டி சட்டைகளைத்தான் அணிந்திருந்தனர்.

ஆனாலும் முகத்திலே உண்மையான அந்தஸ்து அச்சடித்து விட்டிருந்தது.

அவள் பெரியம்மாவின் உபயமான பட்டுச் சேலையில் லேசான ஒப்பனையில் வந்து கூடத்தில் அவர்கள் முன் நின்றாள்.

சிவநேசன் பெற்றோர்களைக் கண்டு அவள் நெஞ்சு படபடவென்று துடித்தது.

உயர் மட்டத்துவாசிகளான இவர்கள் அவளை மருமகளாக ஏற்றுக் கொள்வார்களா?



அரசன் காப்பசுவா சொன்னான்: 'சபையில் வந்து நிற்கும் இந்த அழகான பிச்சைக்காரிதான்... எனது ராணி.' அப்படி ஒரு ஆங்கிலக் கவிதையைப் பள்ளி நாளில் அவள் படித்திருக்கும் ஞாபகம் வந்தது.

சிவநேசனுக்கு அந்த மன்னனின் துணிச்சலிருக்குமா? அவர்களுக்குத்தான் இரக்கம் இருக்குமா?

இரண்டு உள்ளங்கள் ஒருவரையொருவர் விரும்பும் போது குறுக்கீடு செய்யாது அவர்களைத் திருமணத்தில் ஒன்றுபடுத்த வேண்டும் என்ற பெரிய மனம் அவர்களுக்கு இருக்குமா?

கடன்பட்டு அம்மா நெய்யொழுகச் செய்திருந்த சொஜ்ஜியில் அவர்கள் கையே வைக்கவில்லை—ஒரு வாய் காப்பியைக் குடித்துவிட்டு டம்ளரை அசட்டையாக முக்காலி மீது வைத்ததைக் கண்டபோது அவள் பயந்து விட்டாள்.

விடை பெற்றுக் கொண்டு வெளியே செல்லும்போது சிவநேசனின் தாய் மகனிடம் அடிக்குரலில் சொன்னது அவளுக்குத் துல்லியமாகக் கேட்டது.

"பெரிய பூலோக ரம்பைன்னு வருணிச்சியே? பெண் மாநிறமா இருக்கா. கழுதையும் குட்டியிலே அழகும் பாங்க—அது போல இள வயசு. பார்க்ககளையா இருக்கா. தாழம்பூ நிறத்திலே... உனக்கு... தங்கக் கொடி போல... நான் பார்த்து வச்சிருக்கேன் வேறொரு இடத்தில்... என்னடா இப்படி ஒரு பிடிவாதம்?''

'அம்மாக்காரி பெரிய முட்டுக் கட்டை போடுகிறாள் போலிருக்கு' என்று இடிந்து போய் விட்டாள் அவள்.

இரவு முழுவதும் ஓசைப்படாது அழுதாள். மறுநாள், அதற்கடுத்த நாள், அதற்குப் பின்னர் வந்த நாட்கள் எல்லாம் நத்தையாக ஊர்ந்து வேதனையான எதிர்பார்ப்பில் விடே தவித்துக் கொண்டிருந்தபோது, பம்பாயிலிருந்து வந்த கடிதத்தை அப்பா ஆவலுடன் பிரித்தார்.

"என்ன எழுதியிருக்காங்க?" அம்மா பரபரப்புடன் கையில் பிடித்த கரண்டியை அடுப்பங்கரை மேடை மீது வைத்துவிட்டு வர மறந்து—அப்படியே ஓடி வந்தாள்.

வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருந்த அண்ணன் பஸ்ஸைத் தவிர விட்டாலும் பரவாயில்லை என்று திரும்ப உள்ளே வந்தான்.

கல்லூரிக்குக் கிளம்பிக் கொண்டிருந்த தங்கை புத்தகச் சுமையுடன் நடையில் நின்று விட்டாள்.

அப்பாவுக்கு பேச்சு வரவில்லை. திக்கித் திணறினார். அத்தனை சந்தோஷம். "நம்ப விமலாவை அவங்களுக்குப் பிடிச்சிருக்காம். கல்யாணத்துக்கு ஒப்புதல் தெரிவிச்சிருக்காங்க சீக்கிரம் முகூர்த்தம் வச்சுக் கொள்ளணுமாம். எல்லாத்தையும் வசந்தா அம்மாவும்—பங்களூர் பெரியம்மாவும் பேசித் தீர்மானம் செய்து முடிக்கணுமாம்."

அன்று அவர்கள் வீடு அமர்க்களப்பட்டுப் போயிற்று. விமலாவுக்கு இந்த நல்ல இடம் கிடைத்து விட்டதே என்று தாங்கமுடியாத மகிழ்ச்சியால் அம்மா அன்று ரொம்ப ஜோராகவே சமைத்துப் போட்டாள்.

அப்பா தோளில் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு தெரு முனையிலிருந்த பழக் கடையிலிருந்து ஒரு சீப்பு மலை வாழைப் பழத்தை வாங்கிக் கொண்டு வந்தார்.

அண்ணா வேலையிலிருந்து திரும்பி வந்தபோது... வழியிலிருந்த மிட்டாய்க் கடையிலிருந்து பாம்பே ஹல்வா வாங்கிக் கொண்டு வந்தான்.

தங்கை அவள் பங்குக்கு, கல்லூரிக்கு அன்று மட்டம் போட்டாள். அவள்? மகிழ்ச்சி சமுத்திரத்தில் மூழ்கிப் போய் திக்கு முக்காடிக் கொண்டிருந்தாள்.

# 5

கல்யாணத்திற்குச் சில தினங்களேதான் இருந்தன.

பங்களூர் வசந்தா அம்மாவும் பெரியம்மாவும்தான் கூடி இருதரப்பினருக்காகவும் கல்யாண பேரங்களைப் பேசி முடித்தனர்.

பையன் விரும்புகிறான் என்பதற்காக சிவநேசன் தாய் விட்டுக் கொடுக்கிறாள். ஆனால் சம்பிரதாயங்களை ஒரேயடியாகச் சுருக்கிக்கொள்ள முடியாது. வசந்தா அம்மா அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டிருந்தாள். பம்பாயிலிருந்து அவர்கள் அனைவரும் சென்னைக்கு வந்து போகவேண்டிய முதல்வகுப்பு ரெயில் டிக்கட் செலவு. அவர்கள் கல்யாணமண்டபத்தில் கொசுக் கடியில் அவதிப்படத் தயாராக இருக்கவில்லை—அதனால் வசதியாகத் தங்க அருகிலிருக்கும் நல்ல ஹோட்டல் ஒன்றில் ஏற்பாடு செய்து தரவேண்டும். அவர்கள் பக்கத்துப் பெண்களுக்குச் சேலை எடுத்துக் கொடுத்து மரியாதை செய்ய கைச்செலவுக்கு ஐயாயிரம்... என்று மளிகைக் கடை ஜாபிதா போன்றதொரு நீண்ட பட்டியலை வசந்தா கொடுக்க—அதை எடுத்துக்கொண்டு இரவு ரயிலில் பயணப்பட்டுப் பெரியம்மா வந்து நிற்க அவர்கள் அனைவரும் அதிர்ந்து போனார்கள்.

"தலையைக் கொடுத்தாகிவிட்டது—வெட்டும் கத்திக்குப் பயப்படலாமோ' என்று அப்பா விவாதித்தார். தமது சேமிப்பு முழுவதையும் அவள் கல்யாணத்திற்குச் செலவு செய்வதென்று ஓரங்கட்டி வைத்துவிட்டார்.

"கைச்செலவுக்கு என்று மாற்றுப் பெயர் எதற்கு? நேரே இத்தனை வரதட்சணை, இத்தனை சீர் வரிசைக்கு

என்று பளிச்சென்று கேட்டுவிடலாமே! இதென்ன மூடு மந்திரம்?'' அம்மா முணுமுணுத்தாள்.

அடுத்ததாக ஒரு பெண் கல்யாணத்துக்கு நிற்பதைப் பற்றிக்கூடச் சிந்திக்காது...எப்படியாவது பெரியவளைத் தள்ளிவிட்டால் போதும் என்ற தவிப்பில் தாலியை மட்டும் தன் கழுத்திலே தங்கவிட்டுக் கொண்டு மற்ற நகைகள் அனைத்தையும் கழற்றிக் கடையில் கொடுத்து அழிக்கச் செய்து புதியதாக இரண்டு சவரனில் சங்கிலிக் கொத்தும், கைகளுக்கு இரண்டு ஜோடி வளையல்களையும் செய்து போட்டாள். அதோடு மட்டுமா?

மளிகைக்கடை சாமான்கள் எழுதும்போது தலைப்பில் முதலாவதாக உப்பு இடம் பெறுவது வழக்கம்.

உப்பில்லாப் பண்டம் குப்பையில் என்பதற்காகப் போலும். கல்யாண வீட்டவர்கள் தந்த ஜாபிதாவில் முதலாவதாக 'வைரத் தோடு' என்ற அயிட்டம் தலைமை வகித்துக் கொண்டிருந்தது.

நல்ல வேளை. அவள் அந்தக் காலத்துப் பெண்— மூக்குக் குத்திக் கொள்ளவில்லை. இந்த காலத்தைப் போல நாகரிகம் கொண்டாடிக்கொண்டு மூக்கைக்குத்திக் கொண்டு தோடு போடும் காதின்மேல் சின்னதாக ஒரு மூக்குத்தி போடக் குத்திக் கொண்டிருந்தாளோ... சிவநேசன் அம்மாள் அவர்களைவிட்டு வைத்திருக்க மாட்டாள்.

வைர மூக்குத்தி, ஒற்றைக்கல் வைரக் கிராம்புக் காதணி என்று ஜாபிதாவின் நீளத்தைப் பெருக்கி விட்டிருப்பாள்.

அண்ணா தன் பங்கிற்கு அவளுக்கு வைரத்தோடு வாங்கிப் போட சம்மதம் தெரிவித்து விட்டிருந்தான்.

அந்தக் காலத்தில் ஆறாயிரம் ரூபாய்க்குள் நல்லதாகவே வாங்கிவிட முடிந்தது.



பிள்ளைக்குப் பெண்ணைப் பிடித்திருக்கிறது என்று சொன்னார்கள்—ஆனால் நகை—வரதட்சணை மற்ற சங்கதிகள் எதிலும் அதற்காக எதையும் விட்டுக்கொடுத்துப் பேசவில்லை.

''சக்திக்கு மீறிய இடம்...இத்துடன் மட்டும் முடிந்ததா? ஆடிச் சீர்...தலைதீபாவளி...கார்த்திகை... பொங்கல் என்றும், பின்னர் பிரசவம்...தொட்டில், பால் கிண்ணம் என்று ஏதாவது வளர்ந்துகொண்டே போகப் போகிறது. தெரியாமல் கழுத்தை குடுத்துட்டமே...'' அம்மா அடிக்கடி புலம்பிக் கொண்டிருந்தாள்.

பெரியம்மா...வரனை பிடித்துக் கொடுத்ததுடன் சம்பிரதாயங்களைத் தரகர் பாணியில் இருந்து பேசி முடித்ததோடு சரி.

''கஷ்டப்படாதீங்க, நான் என்னால் ஆனதைக் கல்யாணச் செலவுக்குத் தந்துவிடுகிறேன்'' என்று சொல்லவில்லை. இரண்டு நடை பங்களூருக்கு, சென்னைக்கு ரயில் பயணத்திற்காகச் செலவழித்ததே அதிகம் என்று அவள் அரற்றினாள்.

''பெரியம்மா கணிசமா கொடுக்கலாம். மெதுவாக நழுவிக் கொள்கிறாள். பிள்ளை குட்டி இல்லாதவள்— அவளுக்குப் பிறகு பங்களாவையும் வங்கிப் பணத்தையும் யார் அனுபவிக்கப் போறாங்க?'' அம்மா முனகியதைக் கேட்டு விமலாவுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.

''பெரியம்மா உதவுவாங்கன்னா நீங்க மூணு குழந்தைகளைப் பெத்துக் கொண்டீங்க? அவரவர் பொறுப்பு அவரவருன்னு நினைக்கணும்.''

அம்மா கோபத்துடன் மௌனமானாள்.

ஆனால் என்னவோ மனதிலே ஒரு இனம் விளங்காக் கலவரம்.

அவளை உயிருக்கு மேலாக நேசிப்பதாகச் சொல்லும் சிவநேசனுக்கு ஏன் துணிச்சல் இல்லை?

‘எளிய முறையில் எங்களுக்குத் திருமணம் செய்து வைத்தால் போதும்’ என்று சொல்லத் தெரியவில்லையே!

‘அவர்களது காதல் திருமணத்திலும் காசு புகுந்து விளையாடுகிறதே—என்ன அநியாயம்...’ எண்ணி எண்ணிக் குமுறினாள்.

வங்கியிலிருந்து அப்பா எடுத்து வந்த பணம்... பாத்திரங்களாகவும் புடவைகளாகவும் மாறிவிட்டபோது அவள் மனம் உண்மையில் வேதனைப்பட்டது. பாடுபட்டு பல ஆண்டுகள் உழைத்து, குருவி சேமிப்பது போலச் சேர்த்து வைத்த பணம் அது. தமது பிற்காலத்திற்கு உதவும் என்று நம்பிக்கொண்டிருந்தார் அப்பா.

‘அவ்வளவும் கல்யாணத்திலே கரைந்துவிட்டதே — அதுவும் சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயம் போல. பணக்கார சம்பந்தியின் தர்பாருக்கு ஈடுகட்ட முடியாத விதத்தில் கைக்காசு செலவழிந்து போய்விட்டதே!’ எண்ணி மனம் புழுங்கினாள்.

வரதட்சணைக் கொடுமையை அழிக்க இளைஞர்கள் காதல் திருமணம் செய்து கொள்வதுதான் வழி என்று அவளது கல்லூரியில் ஒரு பேச்சாளர் சொன்னது நினைவுக்கு வந்தது.

‘காதல் திருமணமானால் என்ன? கட்டாயக் கல்யாணமானால் என்ன... பெண்ணைப் பொறுத்தவரை வரதட்சணை எனும் அரக்கன் வாயைப் பிளந்துகொண்டு நின்று பயமுறுத்துகிறானே.’

எண்ணி வேதனைப் பட்டாள். ஆனால் வழியேதும் தெரியவில்லை. கல்யாண நாளும் நெருங்கியது. முதல் நாள் காலையிலேயே தங்கள் குடும்பத்தாருடன் உற்றார் உறவினர் படையுடன் கல்யாண மண்டபத்திற்குச்



சென்றுவிட்டனர். மாப்பிள்ளை வீட்டவர்கள் கண்டிப்பாகச் சொன்னதின் பேரில்தான் அந்தக் கல்யாண மண்டபத்தை அப்பா சிரமப்பட்டுத் தேடிப் பிடித்திருந்தார். மூன்று நாள் வாடகையை முன் பணமாகக் கொடுக்க நேர்ந்ததில் அவருக்கு ஒரு பெரிய செலவு.

முதல் நாள் காலையிலேயே வந்து சேர்ந்துவிட்ட வசந்தா அவர்கள் வாங்கியிருந்த பட்டுச் சேலைகளைப் பார்வையிட்டுவிட்டு, முகத்தைச் சுருக்கினாள்.

“பம்பாயிலிருந்து இன்னும் மாப்பிள்ளை வீட்டவங்க வரலை. இன்று மாலை வந்ததும் சிவநேசன் அம்மாமுதல் வேலையாக இவர்களைப் பார்க்க விரும்பிச் சொல்லி அனுப்புவாங்க. ரிஸப்ஷன் புடவைக்குச் சரிகை போதாது. அதனாலே உடனடியா நீங்க கூடுதலாக விலை போட்டு ஒரு நல்ல புடவையை வாங்கி வைச்சுடுங்கோ.”

அம்மாவுக்கு அழமட்டாத குறை. கல்யாணம் என்று ஆரம்பித்ததிலிருந்து இப்படி ஒவ்வொரு கட்டத்திலும் ஏதாவது ஒரு சிக்கலா? விமலா தாடை இறுகிப் போனாள்.

இந்த சிவநேசன் எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறார்? வசந்தா போன்ற தூரத்து உறவினர்கள் எல்லாம் குறுக்கிட்டு அவர்களது கல்யாணத்தை, கலாட்டாவாக்கி விடுவார்கள் போலிருக்கே!

அப்பா மறுபடி தமது வங்கிக்கு ஓட வேண்டியிருந்ததைப் பார்த்த மகள் மனம் வெதும்பிப் போனாள்.

பெண்ணைப் பெற்றவன் என்றால் இப்படி ஒரு தண்டனையா?

இத்தனை இழிவையும்—இன்னலையும் கல்யாணம் என்கிற கட்டத்திலேயே அனுபவித்துவிட்டுவலது காலை

எடுத்து வைத்து அவர்கள் வீட்டுக்குப் போனால்
வாழ்க்கை நிம்மதியாக—மகிழ்ச்சியாக இருக்கும் என்ப
தற்கு என்ன உத்திரவாதம்?

அவசரமாக அம்மாவும் அப்பாவும் டாக்ஸியில் புறப்
பட்டுச் சென்று... வேறு ஒரு புடவையை அதிக விலைக்கு
வாங்கிக் கொண்டு வந்து வசந்தாவிடம் காட்டிய பின்
தான் அந்தச் சிக்கல் மறைந்தது.

முதல் நாள் மாலே, பரிசம் என்று தீர்மானிக்கப்பட்ட
படியே எல்லோரும் மண்டபத்தில் கூடியிருந்தனர்.

மாப்பிள்ளை வீட்டவர்கள் அவளுக்குப் பந்தலில் எல்
லோர் முன்னிலும் வழங்கப்போகும் பரிசுகளைப்பெற்றுக்
கொள்ள தயாராக இருக்க வேண்டுமே! அதனால் அம்மா
அவளுக்குத் தலைச் சாமான்கள் வைத்து அலங்காரம்
செய்து கொண்டிருந்தாள்.

''இங்கே வா சம்பந்தி கூப்பிடுகிறார்.'' பதறிக்
கொண்டு அப்பா ஓடி வந்து சொன்னபோது திடுக்கிட்டுப்
போனாள்.

ராக்கொடி மீது சுற்றக் கையில் எடுத்துக் கொண்டி
ருந்த பூச்சரத்தை அப்படியே கூடையில் வைத்துவிட்டுப்
புடவையைத் தட்டிக் கொண்டு எழுந்தாள்.

''என்னங்க. வந்தவங்களுக்கு காப்பி டிபன் எல்லாம்
கொடுத்து நல்லாதானே கவனிச்சோம். என்ன சங்கதி
யாம்?'' என்று திகிலுடன் வினவிக் கொண்டு கணவன்
பின்னால் விரைந்தாள். கொஞ்ச நேரம் பொறுத்து
உள்ளே வந்த அம்மாவின் முகம் வெளுத்து விட்டிருந்தது.

அப்பா தடுமாறிக் கொண்டு மெல்ல உள்ளே வந்
தார். அண்ணன் ஆவேசமாகத் தென்பட்டான்.

பெண்ணின் தலை அலங்காரத்தை வேடிக்கை
பார்க்கக் குழுமியிருந்த உறவுக்காரப் பெண்களை
அப்பால் போகச் செல்லிவிட்டு அப்பா கதவைச் சாத்திய
போதே விமலாவுக்குப் புரிந்துவிட்டது.



ஏதோ எக்கச்சக்கமான சங்கதி நடந்திருக்கிறது.
அப்பா ரகசியமாக அவளுக்குச் சொல்ல விரும்புகிறார்.

''என்னப்பா...ஏன் எல்லோரும் பதட்டமாக இருக்
கிறீங்க?''

அண்ணன் முகம் சிவந்து, கோபத்துடன் முன்னால்
வந்தான். ''இதைப் படிச்சுட்டு நீ எங்களுக்கு உண்மை
யைச் சொல்லணும்.'' தனது சட்டைப் பையிலிருந்த
தொரு காகித உரையை எடுத்து அவளிடம் நீட்டினான்.

வாயும் தொண்டையும் காய்ந்து போக, நெஞ்சு திக்
திக்கென்று அடித்துக் கொள்ள அந்த உரையிலிருந்த
காகிதத்தை மெல்ல எடுத்துப் பிரித்தாள்.

ஒரு மொட்டைக் கடிதம். மாப்பிள்ளை வீட்டவர்கள்
தங்க ஏற்பாடு செய்யப்பட்ட ஹோட்டல் முகவரிக்கு,
சிவநேசன் தந்தை ரகுபதிக்கு எழுதப்பட்டிருந்த கடிதம்
அது.

"அன்புள்ள திரு ரகுபதி அவர்களுக்கு, உங்களது நன்
மையைக் கருதி ஒரு நண்பன் எழுதும் எச்சரிக்கைக்கடிதம்
இது. பம்பாயிலிருந்து நீங்கள் வந்து தங்குவதற்கு முன்
உங்கள் பார்வைக்காக ரிஸப்ஷனில் இது காத்துக் கொண்
டிருக்க வேண்டும் என்று முன்னதாகவே எழுதுகிறேன்.
நான் யார்? பெயர் என்ன என்பதெல்லாம் தங்களுக்குத்
தெரியவேண்டியது அவசியமல்ல. ஆனால் உங்களுக்கு
வருங்கால மருமகளாக வரப்போகிற விமலாவைப் பற்றி
நீங்கள் தெரிந்து கொண்டு, சம்மதமானால்தான் இந்தத்
திருமணத்தை மேற்கொண்டு நடத்த அனுமதிக்க
வேண்டும்.

விமலாவுக்கு ஏற்கெனவே ஒரு காதலன் இருக்கிறான்.
அவனுடன் கருத்தழிந்து போனவள் என்பது மட்டும்
எனக்கு நிச்சயமாகத்தெரியும். அவன் பெயர் கோபாலன்
பங்களூரில் அறிமுகமானவன். தொடர்ந்து இன்னமும்

சென்னையில் அவர்களது நட்பு நீடித்துக் கொண்டிருக்கிறது. உங்களது குடும்ப கௌரவம்—அந்தஸ்து இவைகளை நாசம் செய்து கொள்ள விருப்பமிருந்தால் விமலா உங்கள் மருமகளாகட்டும். மேற்கொண்டு தீர்மானிக்க வேண்டியவர் நீங்கள்.—இங்ஙனம் உண்மை விளம்பி.'

காய்ந்து போன உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டாள். என்ன அநியாயம்—யாரோ அயோக்கியன் அவளது திருமணத்தில் குழப்பம் ஏற்படுத்த இப்படி ஒரு மொட்டைக் கடிதத்தை திரு ரகுபதிக்கு எழுதி விட்டிருக்கிறானே?

''என்ன? பேசாம இருந்தால் என்ன அர்த்தம்?'' அண்ணா அதட்டிக் கேட்டான். ''உண்மை ஏதாவது அப்படி இருந்தா சொல்லிடு?'' அம்மா அழுதாள். அவளைப் பரிதாபமாகப் பார்த்தார் தந்தை. அவர் முகத்திலே ததும்பி நின்ற வேதனையைக் கண்டு நொறுங்கிப் போய் விட்டாள் அவள்.

''அப்பா! நீங்க இந்த மொட்டைக் கடிதத்தை நம்புகிறீர்களா? எவனோ பொறாமைக்காரன் இப்படித் தாறுமாறா எழுதிப் போட்டுருக்கான் அப்பா.'' குலுங்கி அழுதாள்.

''உன்கிட்டே எதுக்கும் ஒருவார்த்தை கேட்கணும்னுதான் அம்மா வந்தோம். உண்மை அப்படி இருந்தால் எழுதினவன் பயப்படாமல் தன் பெயர்—முகவரி எல்லாம் கொடுத்து எழுதியிருக்கலாமே? மேலும் விமலா, உன்னை எனக்குத் தெரியும். இந்த ஏழை அப்பாவுக்கு இத்தனை பெரிய தொல்லையைக் கொடுக்க மாட்டே, குடும்ப மானத்தைக் குலைக்க மாட்டே. நாம் பணக்காரர்கள் இல்லே. ஆனால் மானம்தான் பெரிசுன்னு வாழறவங்க...'' அதற்கு மேல் பேசமுடியாமல் அப்பா மேல் துண்டை வாயில் அடைத்துக்கொண்டு அழுவதைக்கண்ட விமலாவின் நெஞ்சு பிளந்து போனது. ''அப்பா!...''



என்று அவரை ஓடி அணைத்துக் கொண்டு ஓவென்று அழுதாள்.

''அப்போ இந்தக் கடிதாசியில் இருக்கிற சங்கதி பொய்தானே...'' அண்ணன் கேட்டான்.

''எவனோ எழுதின மொட்டைக் கடிதாசி. எனக்கு பங்களூரில் சிவநேசனைத் தவிர வேறு யாரையும் தெரியாது. இதில் எழுதியிருக்கிற அத்தனையும் பொய். எந்தக் கோவிலில் வேண்டுமானாலும் சத்தியம் செய்யத்தயார்'' ஆத்திரமும் அழுகையுமாகச் சொன்னாள்.

''நேரம் ஆகிறதே, இன்னும் பெண் தயாராகலையா?'' என்று உறவினர் ஒருவர் கதவைத் தட்டினார்.

வெளியே முதலில் அண்ணாதான் வந்தான்.

மண்டபத்தில் மணமேடையருகே குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருந்த ரகுபதியிடம் வேகமாக வந்தான்.

''ஒரு மொட்டைக் கடிதத்தை வைத்துக் கொண்டு நீங்க என் சகோதரியைப் பத்தி எப்படித் தவறாக நினைக்கலாம்?'' கொஞ்சம் அதட்டலாகவே கேட்டான். மாப்பிள்ளை சிவநேசன் தன் தோழர்களுடன் ஒரு பக்கம் விறைத்தபடி நின்று கொண்டிருந்தான்.

''என்னவோ இதைப் பார்த்ததும் மனம் சஞ்சலப்படுறது. இந்தக் கல்யாணத்தை மேலே நடத்திச் செல்ல எங்களுக்கு மனம் இல்லே.''

''என்ன சொன்னீங்க?'' அண்ணன் போட்ட அதட்டலைக் கேட்டுக் கூடியிருந்தவர்கள் எல்லோரும் ஓடிவந்து விட்டனர். அப்பா, மகளை அழைத்துக் கொண்டு விரைவாக மண்டபத்திற்குள் வந்து விட்டார். அம்மா கண்ணைத் துடைத்துக் கொண்டு ஓடிவந்தாள்.

''கல்யாணத்தை நிறுத்திடப் போறாராம் இவர். கேட்டுக்கோங்க அப்பா'' உறுமினான் அண்ணன்.

''இது நியாயமா—இத்தனை ஜோடிச்சப்புறம் கல்யாணம் நின்னு போனா எங்களுக்கும் பொருள் நஷ்டம்—மான நஷ்டம். கொஞ்சம் தயவு செய்யுங்க'' அம்மா கெஞ்சினாள்.

''அதெப்படிமுடியும்? பெண் ஏற்கெனவே கெட்டழிஞ்சவன்னு தெரிஞ்ச பிறகு சம்பந்தம் செய்து கொண்டா எங்க மானம் கப்பல் ஏறிடும்'' சிவநேசன் அம்மா கூச்சலிட்டபோது.

விஷயம் நெருப்பாக மண்டபத்திற்குள் பரவி... ஆளுக்கு ஆள் வாய் அலுக்காது பேச... ஏக சத்தம்.

''நாங்க என்ன செய்வோம்? இப்படி ஒரு வெடிகுண்டைத் தூக்கிப்போட்டா...'' அம்மா திருமதி ரகுபதியின் கரத்தைப் பற்றிக் கெஞ்சினாள்.

''விடுங்கோ...போதும் இந்த சம்பந்தம். அந்த கோபாலனைத் தேடி உங்க பெண்ணைக் கட்டிக் கொடுங்கோ.'' சீறினாள் அவள்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... நேரே சிவநேசன் அருகே விரைந்தாள் விமலா.

''நீங்க கூட இதை நம்புறீங்களா? இந்தக் கல்யாணம் நின்னு போனா எங்களுக்கு எத்தனை பெரிய அவமானம் தெரியுமா?'' கேட்டாள்.

''அவன் கிட்டே போய் ஏன் முறையிடறேம்மா? நீ நல்ல பொண்ணுன்னு நினைச்சு உன் மேலே பிரியப்பட்டான். நாங்களும் சம்மதம் தந்தோம். இப்போ விஷயமே வேறயா இருக்கே.'' ரகுபதி உரத்துப் பேசினார்.

''நீங்க ஒரு வார்த்தை சொல்லிடுங்கோ. அது எனக்குப் போதும்'' என்றாள் துக்கத்தை அடக்கிக் கொண்டு விமலா.



''இதுக்குப் பிறகு என்னால் என்னைப் பெத்தவங்களை எதிர்த்துக்க முடியாது. அயாம் வெரி ஸாரி...'' என்றபடி முகத்தைத் திருப்பிக் கொண்டான் சிவநேசன்.

''அப்படின்னா நீங்க இந்தக் கடிதத்தில் கண்டிருக்கிறதை நம்புகிறீங்கன்னு அர்த்தம். இல்லையா?''

''நம்புகிறதா இல்லையா என்பது இப்போ கேள்வியல்ல—மனதிலே அப்பாவுக்கு சந்தேகம் விழுந்த பிறகு. என் தாயார் உள்ளம் சஞ்சலத்தில் தடுமாடுகிற இந்தச் சமயம் நான் அவர்கள் சொல்படி நடப்பதுதான் சிறந்ததுன்னு முடிவு செய்துவிட்டேன்.''

விமலாவின் கண்கள்...குளமாகின—அவமானம் தாளமுடியாது அவள் ''அப்பா'' என்று அலறிக் கொண்டு... மண்டபத்துத் தூண் மீது சாய்ந்து கொள்ள, ''பெண்ணைப் பிடியுங்கோ! மயக்கம் போட்டு விழறாப்பல இருக்கு. கொஞ்சம் தண்ணி. இப்படி வாங்க'' என்று சிலர் கூக்குரலிட மண்டபத்தில் ஒரே குழப்பம்.

''இப்படி ஒரு கடிதத்தை வச்சுக்கொண்டு எங்களை அவமானப்படுத்திட்டுக் கிளம்பத் திட்டம் போட்டா... நாங்க ஏமாளியல்ல. உங்கள் மேல் மான நஷ்ட வழக்கு தொடர முடியும். இதை சும்மா விடமாட்டோம்'' அண்ணன் ஆக்ரோஷமாகக் கத்தினான். அவன்பக்கம் சேர்ந்து கொண்ட உறவினர்கள் ஆளுக்கு ஒன்றாகக் கையை ஆட்டிக் கொண்டு கூச்சலிட்டனர். ''பேஷா... கேஸ் போட்டுக்கோங்கோ. எங்களுக்குப் பயம் காட்ட வேண்டாம். நாங்க பம்பாயிலிருந்து வந்து போன ரயில் செலவை வேணா தர வேண்டாம். இன்னிக்கு நாங்க வேறு ஹோட்டலில் போய் தங்கிவிட்டுப் பிறகு ஊர் போய் சேரப் பாக்கிறோம். கோர்ட்டுக்குப் போனா என்னா ஆகும் தெரியுமா?''

''சொல்லுங்கோ... நல்லா சொல்லுங்க. முதல்ல பணம் செலவாகும். கேஸ் தோத்துப் போனா... அது

வேறே நஷ்டம். எல்லாத்தையும்விட இப்போ மண்டபத்தோட அடங்கிக் கிடக்கிற இந்த சங்கதி ஊர் உலகம் தெரிய பத்திரிகையிலே பத்தி பத்தியா வரும். அப்போ யாரோட மானம் நஷ்டமாகும்? எங்க பிள்ளைக்கு நாளைக்கே ஒரு பெண்ணைப் பார்த்து நாங்க கட்டி வச்சுட முடியும். உங்க பெண்ணுக்கு?''

மிகவும் கோபமாக, கேலியாகப் பேசினாள் சிவநேசனின் தாய். கொஞ்ச நேரம் வார்த்தைகள் இருபுறமும் வாரி வீசப்பட்டன. இடை புகுந்து சமாதானப்படுத்த முயன்றார்கள் சில உறவினர்கள்.ஒன்றும் பலிக்கவில்லை. உத்திரியத்தை உதறி சில்க் ஜிப்பா மீது போட்டுக் கொண்டு கிளம்பிவிட்டார் ரகுபதி. என்ஜின் பின்னால் நகரும் ரயில் பெட்டிகளைப்போல அவரது குடும்பத்தார் கூடவே ஒருவர் பின் ஒருவராக மண்டபத்தை விட்டு வெளியேறி விட அங்கு ஒரு பயங்கர நிசப்தம் நிலவியது.

# 6

நாதஸ்வர கோஷ்டி அயர்ந்து போய்உட்கார்ந்திருக்க சமையற்காரர் மண்டபத்திற்குள் தலையைநீட்டி, விஷயத்தை ஒருவாறு கிரகித்துக் கொண்டு போய்க் கிசுகிசுக்க, 'இதென்ன அக்கிரமம்? இப்படியும் நடக்குமோ?' என்று அதிசயத்தை அசைபோட்ட வண்ணம் கும்பலாக இங்குமங்கும் வந்தவர்கள் நின்று கொண்டிருந்தனர்.

விழித்துக் கொண்டு சுற்றிலும் பார்த்தாள் விமலா. சிவநேசனையும் அவனது குடும்பத்தாரையும் காணவில்லை. வந்த கூட்டம் பாதியாகி விட்டிருந்தது.வசந்தா கூட அவர்கள் பக்கம். அதனால்மாயமாகி விட்டிருந்தாள். ஆனால் பெரியம்மா ஒரு தூணில் சாய்ந்து கொண்டு விம்மி அழுதபடி நின்று கொண்டிருந்தாள். அப்பா மண



மேடையின் படியில் உட்கார்ந்தபடி பிரமித்துப் போய் தன்னையே மறந்தவராகக் காணப்பட்டார். அண்ணன் மட்டும் கூண்டிலடைபட்ட புலியாக மண்டபத்தை வளைய வந்து கொண்டிருந்தான். அம்மா சுவரின் மீது சாய்ந்தபடி கண்களும் முகமும் சிவக்க இன்னமும் அழுது கொண்டே இருந்தாள்.

''அப்படின்னா கல்யாணம் நின்னு போச்சுன்னு அர்த்தமா?'' வயதான ஒரு உறவினர் கேட்டார்.

''யார் சொன்னது? இவன் ஒருத்தன் தான் ஊரிலே நம் பெண்ணுக்கு மாப்பிள்ளையா? இன்னொருத்தன் கிடைக்காமலா போயிடுவான்?'' கோபத்தோடு பேசிய விமலாவின் மாமா வேகமாக அப்பா உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி நடந்தார்.

காதோடு ஏதோ பேசினார். அண்ணாவை ஜாடை செய்து அழைத்தார். மூவரும் சிறிது நேரம் ஏதோ தர்க்கித்தனர். பின்னர் அவர்கள் எல்லோரும் விமலாவிடம் வந்தனர்.

''இப்படி வரியா அம்மா... ஒரு சங்கதி'' என்று அவளை மறுபடி உள்ளே அழைத்துச் சென்றனர்.

மாமா மிகவும் ஆத்திரத்துடன் பேசினார்.

''இவங்க ஜெயிச்சுட்டதாக நினைச்சுக் கொண்டு போக வேண்டாம். இவங்க கலாட்டா செய்ய ஆரம்பிச்சவுடனேயே எனக்கு இந்தக் கல்யாணம் நின்னு போகும்னு தெரியும். ஆனால் நாம் தோத்துப் போகப் போறதில்லைனு முடிவு செய்துட்டேன்!''

விமலா திகைப்புடன் அவரைப் பார்த்தாள். அம்மா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''என்னமா சொல்றீங்க, புரியலையே'' என்றார் அப்பா ஈனமான குரலில்.

"இதே மண்டபத்தில், இதே முகூர்த்தத்தில் விமலாவின் கல்யாணத்தை ஜாம் ஜாம்னு நடத்திடுவோம். ஆனால் ஒரு சிறு மாற்றம். மாப்பிள்ளை வேறு ஒருவன் நான் பேசி முடிச்சுவச்சுட்டேன். உங்களுக்கு ஏற்பட்ட அவமானம் தனக்கு ஏற்பட்டது போலதாக்கினான் அந்தப் பிள்ளை. உங்களுக்கு மான நஷ்டமும் ஏற்படக் கூடாது—ஜோடிச்ச கல்யாணம் நின்று; பொருள் நஷ்டம் ஏற்படக் கூடாது— அதைத் தவிர்க்கத்தான் மாப்பிள்ளையாக மணமேடையில் உட்கார சம்மதிச்சுட்டான்."

"யார் அந்தப் பிள்ளை?" வியப்புடன் விசாரித்தார் அப்பா. அவருக்கு ஆச்சர்யம். அதே சமயம் பயம்.

திடீர் மாப்பிள்ளையை விமலா ஏற்க மறுத்தால்... மான நஷ்டம் என்று அவளை யாருக்காவது பிடிச்சுக் கட்டி வைக்கணுமா என்று விவாதித்தால் என்ற அச்சம்.

"நமக்குத் தெரிஞ்ச பிள்ளைதான். உங்க சிநேகிதர் நடேசன் மகன் கணபதி."

"நடேசன் மகனா!" வியப்புடன் கேட்ட அம்மா மகளை அச்சத்துடன் பார்த்தாள்.

கணபதிக்குப் பொறுத்தமான வயதுதான். ஆனால் அதிகம் படிப்பு கிடையாது. கொஞ்சம் நிறம் கறுப்பு. சிவநேசன் போல அழகன் இல்லை. எல்லாத்தையும்விட அவனுக்கு குழந்தைப் பருவத்தில் வந்த இளம்பிள்ளை வாதத்தினால் இடது கால் ஊனமாகிவிட்டிருந்தது. சற்று தாங்கிக் கொண்டு நடக்கிறவன்... அவனையா மாப்பிள்ளையாக வரிப்பது...? கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டாள் விமலா.

"சொல்லும்மா, உனக்கு இஷ்டமில்லாததை வற்புறுத்த மாட்டோம். இந்தக் கல்யாணம் நின்று போனது என்றால் பலர் பலவிதமாகப் பேசுவாங்க. மறுபடி உனக்கு மாப்பிள்ளை தேடி முடிக்கிறது கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கும். ஆனால் அதுக்கு உன்னை நொந்துக்க முடியுமா? பெத்தவன் என் கடமை. உன்னோட மட்டும் இந்தப் பழி விலகிப் போகாது. உனக்கு அடுத்த படியே நிக்கிறாளே உன் தங்கச்சி, அவளது வாழ்க்கையையும் பாதிக்கும்" அப்பா தளுதளுத்தார்.



தொண்டையைச் செருமிக் கொண்டாள் விமலா.

"என்னால நீங்க எல்லாரும் ரொம்பவே சிரமப் பட்டுட்டீங்க அப்பா. நான் கணபதியைக் கட்டிக்க பூரண சம்மதம் அப்பா. ஆவனசெய்யுங்கோ" என்றாள் வறட்சியான குரலில்.

கணபதிக்கு வயதான தாய் ஒருத்திதான் உயிருடன் இருந்தாள். தந்தை சிலஆண்டுகளுக்கு முன்னர் காலமாகி விட்டிருந்தார். அவர் ஒரு பளிகைக் கடை வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அப்பா விட்டுப் போன சொத்து அந்த வியாபாரம். ஒரு சிறு ஓட்டு வீடு. அவ்வளவு தான்.

பெண்ணின் சம்மதத்தைத் தானே பெற விரும்பி அவளுடன் தனியே பேச வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தான் கணபதி.

அண்ணா உடனே சம்மதித்தார்.

"என்னை பூரண சம்மதத்துடனேதானே திருமணம் செய்துக்க ஒப்புகிறாய்? உன் பெற்றோர்கள் வற்புறுத்தினாங்கன்னுட்டு பின்னாலே வருத்தப்படக் கூடாது."

தலையை அசைத்தாள் மென்மையாக விமலா!

"அப்படின்னா ஒண்ணு நீ செய்யணும். நம்ப கல்யாணம் முடிஞ்சதும் உன் பெற்றோர்கள் போட்ட நகை, வாங்கின பட்டுச் சேலைகள் எல்லாத்தையும் அவங்ககிட்டயே திருப்பித் தந்துடணும்."

"கட்டின சேலையோடு நீ மட்டும் எங்க வீட்டுக்கு மருமகளா வந்தாப் போதும், ஒப்புக் கொள்றியா... உன்

அப்பா அவைகளை வைத்துக் கொண்டு உன் தங்கச்சி கல்யாணத்திற்கு உபயோகிக்கட்டும். என் தாயார் என் வார்த்தைகளை ரொம்ப மதிக்கறவங்க. அதனாலே நீ கவலைப்பட வேண்டாம்.''

கண்களில் நீர் புரளத் தலையை அசைத்தாள். விமலாவின் நெஞ்சில் நன்றி உணர்வு நிறைந்தது.

ஒரு மனிதனை, ஒரு பெண் விரும்பி மணந்துகொள்ள முன்னாலேயே ஏற்பட்டபழக்கமோ, அன்போ, காதலோ அவசியமல்ல. அவனது கருணையான மனதின் மேல் ஏற்படும் மதிப்பும் நன்றியும் போதுமே! காதலித்து மணந்து கொண்டு பின்னர் வாழ்க்கையில் கலைந்து போவதும் உண்டு. கல்யாணம் செய்துகொண்டு, பின்னர் காதலித்து மனமொத்த தம்பதியராக வாழ்நாள் முழுவதும் இணைந்து வாழ்வதும் உண்டு.

அவள் அப்படித்தான் வாழப்போகிறாள். எல்லோர் முன்னாலும் அவமானப் படுத்தப்பட்ட அவளுக்கு வாழ்வளித்து கௌரவிக்கப் போகிற கணவனுக்கு அவள் ஒரு நல்ல மனைவியாக இருக்கப் போகிறாள்! அந்த உறுதியுடன்தான் அவள் மணமேடையில் அவன் பக்கம் அமர்ந்தாள். அவர்களது திருமணம் மாப்பிள்ளை மாற்றமாக, அதே முகூர்த்தத்தில், அதே மண்டபத்தில் வந்திருந்த உற்றார் உறவினர் நண்பர்கள் முன்னிலையில் விமரிசையாக நடந்தேறியது.

கணபதி கேட்டுக் கொண்ட வண்ணம் அவள் கட்டின புடவையுடன் தன்னுடைய சிறு பெட்டி ஒன்றில் சில சாமான்களுடன் கணவனைப் பின் தொடர்ந்து புக்ககம் கிளம்பினாள்.

# 7

''அம்மா!...'' மானேஜரின் குரல் தட்டி எழுப்பவே சிந்தனையினின்று விழித்துக் கொண்டாள் விமலா.

எதிரே அடுக்காக அவள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த அத்தனை ஃபைல்களும் அப்படியே இருந்தன.

கடந்தகாலக் கதையைப் புரட்டிக்கொண்டு சிந்தனை பின் நோக்கி ஓடிக்கொண்டு வேலைக்கு முட்டுகட்டை போட்டிருக்கிறதே...

''நான் இன்னமும் இவைகளைப் பார்வையிடவில்லை.''

''பரவாயில்லை. நீங்க இன்னமும் சாப்பிடலை போலிருக்கே...''

அப்பொழுதுதான் உணர்ந்தாள். பையன் பதிவிசாகக் கொண்டு வந்து ஓசைப்படாது மேஜைமேல் வைத்துவிட்டுப் போன டிபன் செட் திறக்கப்படாது இருந்தது.

''சாப்பாட்டைப் பிறகு பார்த்துக்கலாம். நீங்கவந்த விஷயம்?'' கேட்டாள் அவள்.

''சாப்பாட்டுக்குத்தானே எல்லாரும்உழைக்கிறோம். அதைக் கவனிச்சுக் கொண்டு உடம்பை பத்திரமா வச்சிருந்தால்தானே...வேலை செய்ய முடியுது. சாப்பிடுங்கோ. பிறகு வந்து சொல்றேன்...ஒண்ணுமில்லை. அந்த டெல்லி காண்ட்ராக்ட் பத்திதான் ஒரு சிறு சந்தேகம்.''

''நீங்க சாப்பிட்டு விட்டீங்களா ஸார்?'' கேட்டாள் அவள்.

இல்லை என்று மானேஜர் தலையை ஆட்டினார்—அவர் முகத்திலே கவலை கப்பிக் கொண்டிருந்தது.

டெல்லி காண்ட்ராக்ட் எழுப்பிய கவலையாக அது கட்டாயம் இருக்க முடியாது...என்று எண்ணியபடி...""ஒரு மாதிரி இருக்கீங்களே ஸார். உடம்புக்கு ஏதாச்சும்?'' கனிவுடன் விசாரித்தாள்.

"உடம்புக்கு ஒண்ணுமில்லை. ஆனால் மனசுக்குத் தான் ரொம்ப வேதனை. கடன் உடன்பட்டு பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்தாச்சுன்னு நிம்மதியா இருக்க முடியலை. ஆடிச் சீருக்கு அதுக்குள்ளே ஒருபெரிய லிஸ்ட் அனுப்பியிருக்கிறாங்க சம்பந்தி அம்மா... அத்தோட ஹனிமூன் செலவு எங்களுடையதாம்.'' லேசாக முறுவலித்தாள். அவளுக்கு இது தெரிந்த சங்கதிதான். பெண்ணை கல்யாணம் செய்து கொடுத்து விட்டோம் என்று அமைதியாக பெற்றவர் இருக்கமுடியுமா?

அடுத்தவளுக்குக் கல்யாணம் என்று ஆரம்பிக்கும் போதுகூட மூத்த மருமகன்... தனக்கு நல்ல வேட்டி சட்டை எடுத்துக் கொடுக்கலை. தன் மனைவிக்கு எடுத்த சேலை ரொம்ப திராபை என்று கூத்தடித்துக் கலகம் செய்வதைப்பற்றி நிறையவே கேள்விப்பட்டிருக்கிறாளே.

அக்கௌண்டண்ட் கிட்டே இன்னும் ஒரு ஐந்தாயிரம் கடன் தொகைக்கு ஏற்பாடு செய்கிறேன், கவலைப்படா தீங்க''...என்று அன்புடன் அவரை அனுப்பினுள்.

"நன்றி அம்மா.'' பெரிய கும்பிடு போட்டார் பெண்கள் மூவரைப் பெற்றுவிட்ட மானேஜர்...கண்கள் நீர்த் துளியில் பளபளப்பதைக் கவனிக்காதது போல டிபன் செட்டை இழுத்து அருகில் வைத்துக்கொண்டு திறந்தாள்.

சமையற்கார அம்மா சங்கரி அவளுக்கு பிடித்த மானதைத்தான் எப்பொழுதும் சமைத்தனுப்புவது வழக்கம்,

நசிய வடித்தெடுத்த சாதம்...பருப்பு...மிளகு ரசம்... சுட்ட அப்பளம். கத்தரிக்காய் புரட்டல்... தயிர் என்று எளிய சாப்பாடுதான்.



ஆனால் பசியே இருக்கவில்லை. பழைய சங்கதிகள் எல்லாம் நினைவில் எழுந்தவுடன் பெரும் கனமான பாராங்கல் போல நெஞ்சையும் வயிற்றையும் இறுக்கிக் கொண்டிருந்தது.

ரசத்தைக் குடித்துவிட்டு... காரத்தைக் கழுவத் தயிரைப் பருகினுள்.

டிபன் செட்டை மூடிவிட்டு இருக்கை மீது சாய்ந்து கொண்டாள்.

மறுபடியும் மனம்... அசை போடத் தொடங்கி விட்டது.

கல்யாணத்திற்குப் பின்னர்... கணபதி அவனது பெற்றோரை எந்த விதத்திலும் தொந்திரவு செய்யவேயில்லை.

அதற்கு மாறாக வீட்டின் மருமகன் என்ற தகுதியில் சொந்த மகனைப்போல அந்தக் குடும்பத்திற்கு செய்த உதவிகள்...

ஆனால் அதற்குப் பதில் வட்டியும் முதலுமாகத் தங்கை மாலதியைக் கொடுத்த இடத்தில்...அவர்களை ரொம்பவே படுத்திவிட்டார்கள் சம்பந்தி வீட்டவர்கள்.

கணபதியைக் கல்யாணம் செய்துகொண்டு அவள் நிம்மதியாக வெளியேறிவிட்ட போதிலும் நின்றுபோன கல்யாணத்தினால் அவ்ள் குடும்பம் பெரிதுமே பாதிக்கப் பட்டது உண்மை.

கல்யாணம் முடிந்த சில நாட்களில் அப்பாவுக்கு பாரிசம் தாக்கி... பேச முடியாது, நடக்க முடியாது படுக்கையில் விழுந்துவிட்டார்.

அந்த நிலையில்...மாலதிக்கு வரன்தேட அண்ணன் பாடுபட்டபோது மூத்தவளுக்கு முதலில் நிச்சயம் செய்யப் பட்ட கல்யாணம் ஏன் நின்று போனதென்ற கேள்வி முதல் இடம் பெற்றது.

எத்தனை எடுத்துச் சொல்லியும்...வந்த வரன்கள்... மாயமாகின... நோயாளியான அப்பா... கல்யாணத்திற்குக் காத்து நிற்கும் தங்கை—நின்றுபோன கல்யாணத்தினால் ஏற்பட்ட கடன் சுமை. எல்லாவற்றையும் அண்ணன் தாங்க முடியாது சில ஆண்டுகள் தத்தளிக்க நேர்ந்தது.

ஆனால்... அவளது புக்ககத்தின் நிலைமை வேறு விதமாக...விரைவில் மாயாஜாலம் போல மாறத் தொடங்கியது.

மளிகைக் கடையை விற்று, தன் தாயின் நகைகளையும் விற்று அந்த முதலைப் போட்டுச் சிறியஅளவில் மிகத் துணிவுடன் ஒரு ரெடிமேட் ஆடை தயாரிப்புக் கடையை ஆரம்பித்தார் கணபதி.

இரண்டு ஆண்டு காலத்திலே...அது வேகமாக வளர்ந்துவிடவே ஒரு சிறு தொழிற்சாலையையே துவங்க நேரிட்டது.

ஓட்டு வீட்டை விற்று அடையாறில் ஒரு பழைய பங்களாவை விலைக்கு வாங்கிப் புதுப்பித்துக் கொண்டார்.

கார்...ஆட்கள் என்று வீட்டில் வசதிகள் பெருகின. தொழில் ஓகோவென்று தலை தூக்கி நின்றது. பணம் புரளத் தொடங்கியது.

கணபதிக்குக் கொஞ்சமும் சுயநலமே கிடையாது. மிகத் தாராளமான மனம்.

நோயால் தவித்த மாமனாருக்கு சிகிச்சைக்குப் பணம் தந்து உதவினார்.

அவர்கள் வாழ்ந்துகொண்டிருந்த வீட்டை இடித்துப் புதியதாக வசதியுடன் கட்டக் கடனாக அண்ணனுக்குப் பணம் தந்து உதவினார். எல்லாவற்றையும்விட மாலதிக்கு ஒரு நல்ல வரனைக் கண்டுபிடித்து—தாம் பெற்ற மகளின் திருமணம் போலத் தம் பணத்தைப் போட்டு விமரிசையாக நடத்தி வைத்தார்.



ஆனாலும்...அதற்குப் பலன் இருக்கவில்லை.

மாலதியின் திருமணத்திற்குப் பின்னர்...ஒரு சில நாட்களில் அப்பா மரணமடைந்து போனார்.

இரண்டாவது மருமகன்வந்த அதிர்ஷ்டம்—மாமனார் தலையைப் போட்டுவிட்டார் என்று யாரும் சொல்லவில்லை.

விமலாவின் கல்யாணம் நின்று போனதில் ஏற்பட்ட திகிலில் படுத்தவர் போய்விட்டார் என்று அம்மா அழுது புலம்பினாள்.

வீட்டைப் புதுப்பிக்கக் கொடுத்த கடனை மருமகன் ஜாடையாகத் திருப்பித் தரும்படி கேட்டபோது அண்ணனுக்கு ரொம்பவே கோபம் வந்துவிட்டது.

பணம் அவர்களிடையே பாஷாணமாகியது. எங்கேயோ புரட்டி, அண்ணன் பணத்தைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டான். அத்தோடு பகையும் வளர்ந்தது—மூத்த மருமகனோடு பேச்சு வார்த்தை இன்றி, உறவு முறிந்து போனது. அவளது மாமியார் இறந்துபோன போது...அண்ணன் தலையைக் காட்டிவிட்டு போனவன் தான். பிறகு வந்து சொந்தம் கொண்டாடவேயில்லை.

மாலதிக்காவது நன்றியிருந்ததா? துளிக்கூட இருக்கவே இல்லை.

தன் கணவன் ஆரம்பிக்கவிருந்ததொரு வியாபாரத்திற்குப் பணம் கடனாகத் தந்து உதவவில்லை என்று மனத்தாங்கல்.

ஆடிச் சீர்வரிசையிலிருந்து...இரண்டு குழந்தைகளுக்கு அவள் தாயாகும் வரை...சம்பந்தி வீட்டவர்களைச் சந்தோஷப் படுத்த கணபதி அந்தக் குடும்பத்திற்கு கொட்டியளந்த பணம் எவ்வளவோ!

யாரும் அதையெல்லாம் நினைத்துப் பார்க்கவில்லை. எப்பொழுதாவது தவிர்க்க முடியாது உறவினர்கள் சந்திக்க நேர்ந்துவிட்டால் வார்த்தைகள் தடித்து...... அண்ணனிலிருந்து...தங்கை வரை எல்லோரும் விமலாவின் கல்யாணம் நின்று போனதால் குடும்பம் எப்படித் தத்தளித்தது என்று அவள்மீது பழியைச் சொல்லி வேதனை படுத்துவது வழக்கம்.

அதன் பயனாக கணபதி என்றதொரு நல்ல மருமகன் கிடைத்தான். அவனால் குடும்பம் முன்னுக்கு வந்தது என்ற பேச்சே காதில் விழாது. "போகட்டும், அவங்க என்ன வேணுமானாலும் பேசிக்கொண்டு இருக்கட்டும். எனக்கு நீ கிடைத்தாய்—உனக்கு நான்கிடைச்சிருக்கேன். நமக்கு ஒரு...மகனோ மகளோ கிடைச்சால் போதும்'' என்பார்.

கல்யாணமாகி ஏழு வருஷங்கள் ஆகியும் அவர்கள் எதிர்பார்த்த அந்த மகனோ—மகளோ அவர்களுக்கு கிட்டவில்லை.

விரதம், வேண்டுதல் என்று ஆரம்பித்து வைத்தியப் பரிசோதனையில் முடிந்தபோதுதான் விமலாவுக்கு அந்தத் திடுக்கிடும் தகவல் கிட்டியது.

கணபதியின் உடலில் எந்தவிதக் கோளாறும் இல்லை. அவள்தான் பிள்ளையைப் பெற்று எடுக்க முடியாத நிலையில் இருக்கிறாள் என்ற செய்தி அதிர்ச்சியைத் தந்தது. அழமுடியாது வேதனையில் வெம்பினாள் அவள்.

"இப்போ அதனால் என்ன வந்துட்டது? பாரத நாட்டு ஜனப் பெருக்கத்தை அதிகரிக்க நீயும் பங்குகொள்ளாமல்... ஒதுங்கி விட்டிருக்கிறாய்னு சந்தோஷப்படு''... அவளைத் தேற்றினார் கணவர்.

சிவநேசன் மனைவியாக அவள் இருந்திருந்தால் அந்தப் பணக்கார மாமியார் மலடியான மருமகளை வைத்துக்கொண்டு வாழ விரும்பியிருப்பாளா?



'இந்த நொடியில் இவளை விவாகரத்து செய்துட்டு... வேறே ஒரு பெண்ணை நீ கட்டிக்கணும்' என்று மகனுக்கு உத்தரவு போட்டிருப்பாளே!

"ஏன் கவலைப் படுற... நம் வீட்டில் ஒரு குழந்தை ஓடி விளையாடும் காட்சியை நீ கண்டு களிக்க ஆசைப் பட்டால் ஒரு குழந்தையை நாம் தத்து எடுத்துக்கொள்ளலாமே.''

சங்கதி லேசாகக் காதில் விழுந்ததும் அண்ணன் தன் மனத் தாங்கலை ஒரு பக்கம் வைத்துவிட்டுத் தன் கடைக் குட்டியை அவளிடம் தள்ளிவிட முயன்றான்.

தங்கை மாலதி தன் மூன்றாவது மகளை தத்தெடுத்துக்கொள்ளச் சொல்லி கடிதம் போட்டாள்.

கணவன் பக்கத்து உறவினர்கள் ஆளுக்கு ஒரு குழந்தையை ஏலம் போட அவசரமாக நேரிலே வந்துவிட்டனர்.

உறவினர்கள் குழந்தையே தேவையில்லை என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார் கணபதி.

வேறு எங்கேயாவது ஆசிரமத்திலே அனாதையாக வளரும் ஒரு குழந்தைக்கு நாம் வாழ்வளிப்போம் என்ற போது அவள் ஒத்துக்கொண்டாள்.

மதுரை மீனாட்சியைத் தரிசித்துவிட்டு வரச் சென்றிருந்த சமயம்...அங்கிருந்த பரமேஸ்வரி கருணை இல்லத்திற்குச் சென்று பார்வையிட்ட கணபதி நன்கொடையாக ஒரு கணிசமான தொகைக்கு காசோலையை அலுவலகத்தில் சேர்ப்பித்துவிட்டுத் திரும்பியபோது ஒரு சிறு குழந்தை, மூன்று வயதிருக்கும், மழலை நடையில் வந்து அவரது ஜிப்பாவின் முனையைப் பிடித்துக்கொண்டு அவரைப் பார்த்துச் சிரித்ததும் மகிழ்ந்து போய்விட்டார்.

"விமலா என்ன சொல்றே? இந்தக் குழந்தையை நாம் தத்து எடுத்துக் கொண்டால் என்ன?"

கணவரது எந்த முடிவுக்கும் அவள் மறுப்பு சொன்ன தில்லை. ஏனெனில் கணபதி சிந்தித்துச் செயல்பட்ட எந்தக் காரியமும் நியாயத்திற்குட்பட்டதாகவே இருக்கும்.

"அப்படியே செய்வோம்." அவள் ஆமோதித்தாள்.

உரிய விதிப்படி அந்தக் குழந்தை அவர்களிடம் வளர்த்து ஆளாக்க கொடுக்கப்பட்டது.

கருணை இல்லத்திலே ராஜாத்தி என்று பெயர் கொடுக்கப்பட்டிருந்த அந்தக் குழந்தை அவர்களது வாழ்க்கையை ஒளிமயமாக்கப் போகிறாள் என்ற கருத் தில், விமலாதான் ஜோதி என்று மாற்றி வைத்தாள்.

ஜோதி மாநிறம்தான். அகன்ற கண்கள், எடுப்பான மூக்கு, சுருண்ட கூந்தல். உயரமாகக்கொடிபோல வளர்ந் தாள். படிப்பில் மிகவும் ஆர்வமுள்ளவளாகவும் புத்திசாலியாகவும் இருந்தாள்.

பொறாமையுடைய சொந்தக்காரன் குழந்தைக்கு உண்மையைச் சொல்லி மனதில் அதிர்ச்சி ஊட்டிவிடக் கூடாது என்ற எண்ணத்தில் கணபதி ஜோதியின் பன்னிரண்டாவது வயதில் அவளிடம் அவள் தங்களது வளர்ப்பு மகள் எனும் உண்மையைச் சொல்லிவிட்டிருந் தார். ஜோதி தன் பிறப்பு வரலாற்றைக் கேட்டு அதிர்ச்சி யடையவில்லை. தனக்கு ஒரு அப்பாவும் அம்மாவும் கிடைத்துவிட்டார்களே என்று சந்தோஷப்பட்டாள்.

படிப்பிலே மிகவும் புத்திசாலியாக காணப்பட்ட ஜோதியை ஒரு பட்டதாரியாக்கிவிட வேண்டும்—வியா பார நுணுக்கம் எல்லாம் அறிந்துகொள்ள அவளை எம். பி.ஏ. வாக்க வேண்டும் என்று கணபதி ஆசைப்பட்டார்.



மகளுக்கு வீணை வாசிக்கக் கற்று வைக்க வேண்டும் என்று விமலா விரும்பினாள். ஜோதி — பரத நாட்டியம் பயில ரொம்பவே விரும்பினாள்.

அப்பா அவளை கான்வென்ட் பள்ளியில் சேர்த்து விட்டிருந்தார். அம்மா அவளுக்கு வீணை வாத்தியாரை அமர்த்தி விட்டிருந்தாள். அவள் ஆசைப்பட்ட பரதத் தைக் கற்றுக்கொள்ள அருகிலிருந்ததொரு நாட்டியப் பள்ளியில் அவளை விமலா சேர்த்து விட்டிருந்தாள்.

அவர்கள் இருவரும் ஜோதியைத் தங்கள் உயிராக நேசித்தனர். குழந்தை அவர்கள் இருவரிடம் மிகவும் பாசமாக ஒட்டிக் கொண்டிருந்தாள்.

ஒரு நிறைவான—மகிழ்ச்சி மிக்கதொரு குடும்பமாக அவர்களது வாழ்க்கை இனிமையாக அமைந்து விட்டி ருந்தது.

அப்படிப்பட்ட நேரத்தில் விமலாவின் வாழ்க்கையில் ஒரு பேரிடி விழுந்துவிட்டது.

வியாபாரம் உச்ச நிலைக்கு எட்டி விட்டிருந்த சமயம் வெளிநாட்டு ஏற்றுமதியில் அவர்களது தயாரிப்பு முன்ன ணியில் நின்று கொண்டிருந்த சமயம்... பணத்திலே அவள் புரண்டு கொண்டிருந்த நேரம். ஒரு நாள் மாலை நிறுவ னத்திலிருந்து அவளுக்கு தொலைபேசியில் தகவல் வந் தது. 'கணபதிக்கு மாரடைப்பு வந்து மயங்கி விழுந்து விட்டதால் சேது நர்ஸிங் ஹோமில் அனுமதிக்கப்பட் டிருக்கிறார். உடனே வரவும்.'

எப்பேர்ப்பட்ட அதிர்ச்சி அது? மகளை அழைத்துக் கொண்டு அங்கு உடனே விரைந்தாள்.

கண்களை லேசாகத் திறந்து பார்த்தார் கணபதி... மருந்துகளின் மயக்கத்திலிருந்த போதிலும் அவர் என்ன சொல்கிறார் என்பது அவளுக்குப் புரிந்தது. 'எதுக்கு அழறே? நாமிருவரும் சந்தோஷமாக வாழ்ந்த நாட்களை

நினைச்சுப் பார். ஜோதி நல்ல பெண். உன்னைக் கவனிச்சுப்பா' அதுதான் கடைசியாக அவர் பேசியது.

அந்தப் பேரிழப்பின் துயரத்திலிருந்து அவள் சீக்கிரமே தன்னை விடுவித்துக் கொண்டு சமாதானமடைய வேண்டியிருந்தது. அவர் விட்டுப் போயிருந்த அந்தப் பெரிய வியாபாரத்தை இனி அவள் தானே தொடர்ந்து நடத்த வேண்டும்.

அண்ணனும்—தங்கை மாலதியும் தம் குடும்பத்துடன் வந்திருந்தனர். ''தைரியமா இரு, ஏதாவது வேணும்னா போன் பண்ணு. அருகில் தானே இருக்கிறேன். வேணுமினா நான் என் மூத்த மகனைத் துணைக்கு வந்து படுத்துக்கச் சொல்றேன்'' என்றான் அண்ணன்.

''எத்தனை நாளைக்கு அவன் துணைக்கிருப்பான்? படிக்கிற பிள்ளையை அலைக்கழிக்கக் கூடாது அண்ணா. எனக்கு நானே துணையாக இருக்க முயலப்போகிறேன்.''

''ஒரு பத்துநாள் வேணுமினா நான் வந்து உன்னோட இருக்கட்டுமா...?'' மாலதி கேட்டாள்.

''இது பத்துநாளோட போற சங்கதியில்லை. என் வாழ்நாள் முழுவதும் இந்த வெறுமை என்னைப் பாதித்துக் கொண்டிருக்கப் போகிறது. உன் குடும்பத்தைவிட்டு நீயேன் இங்கே வந்து சிரமப்படணும்? வேண்டாம்...'' என்று மறுத்து விட்டாள்.

இப்படி தனக்குத் திடீரென்று மரணம் நேரும் என்று நினைத்தாரோ என்னவோ, அவள் கணவர் கணபதி கொஞ்ச காலமாக அவளைத் தம்முடன் தொழிற்சாலைக்கு அழைத்துச் சென்று எல்லாவற்றையும் ஓரளவு சொல்லித் தந்துவிட்டிருந்தார்.

''காரை நீயே ஓட்டக் கற்றுக் கொண்டுவிடுவது நல்லது. நீயே வீட்டையும் குழந்தையையும் பார்த்துக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் உதவியை நாடக்



கூடாது.'' அவர் சொல்லியிருந்ததை நினைப்பில் வைத்துக் கொண்டு அவள் தனியாக, துணிவுடன் தலை நிமிர்ந்து தன்னால் வாழமுடியும் என்று வளைய வந்து கொண்டிருந்தாள்.

நாட்கள் வேகமாக ஓடி வருஷங்களாக வளர்ந்து... கணபதி மறைந்து பத்து ஆண்டு காலமாகி விட்டது. ஆனாலும் அன்று நடந்தது போல அந்த மாபெரும் துயரம் அவளை அவ்வப்போது வருத்திக் குலைத்துக் கொண்டிருந்தது உண்மையே.

# 8

கதவு லேசாகத் தட்டப்பட்டது. மானேஜர் புன்முறுவலுடன் உள்ளே வந்தார். ''உங்களுக்கு உடம்புக்கு சுகமில்லாட்டா... நான் நாளைக்கு இந்த ஃபைலை உங்கள் பார்வைக்கு வைக்கிறேன்.''

''வேண்டாம். இப்பவே பார்த்து முடிச்சுடறேன்.'' என்றவள் ஃபைலை வாங்கிக் கொண்டாள்.

''நாங்க்யூ மேடம். உங்க உதவியில்லாட்டி நான் எப படித்தான் சமாளிப்பேனோ தெரியலை'' என்றார் மெல்லிய குரலில்.

என் உதவி ஒருபுறம் இருக்கட்டும். நீங்க கொஞ்சம் கண்டிப்பாக இருக்கணும். முதல் பெண்ணுக்கே பணத்தை வாரி இறைச்சுட்டீங்களே. பின்னால மத்தவங்களுக்கு இதே போலச் செய்ய முடியாம பல பிரச்னைகளுக்குள்ளாவீங்க.'' லேசாக சிரித்தாள்.

இப்படித்தானே அவர்கள் வீட்டு சங்கதியும் ஆயிற்று!

ஏமாந்த ஒரு மூத்த மருமகன்... எல்லாத்துக்கும் தலையாட்டிக் கொண்டிருக்கிறான். அடித்துக் கொண்டு

போன வரை ஆதாயம் என்று மாலதியின் புக்ககத்தில் அவளை... நினைத்த போதெல்லாம் பணத்துக்கு ஏவிக் கொண்டிருந்தனர்.

இரண்டாவது குழந்தை பெற்றபின் அவளைப் புக்ககம் அனுப்பியதும் ஒரு பத்து நாளில் குழந்தையைத் தூக்கிக் கொண்டு அக்கா வீட்டிற்கு வந்து நின்றாள்.

"என் நாத்தனாருக்கு வளைகாப்பு வருகிறது. அதனாலே செலவுக்கு ஒரு மூவாயிரம் கடன் வாங்கிக் கொண்டுவரச் சொன்னார் என் கணவர்."

"உன் நாத்தனார் இந்த வீட்டைச் சேர்ந்தவள் இல்லை. கடன் வாங்கி வளைகாப்பு செய்யத் தேவையில்லை. காப்பியை சாப்பிட்டுட்டு... நேரத்தோட குழந்தையோடு திரும்பி வீட்டுக்குப் போய் விடு" என்று அவள் கண்டிப்பாகச் சொல்லி அனுப்பிவிட்டிருந்தாள். ஒரு தடவை சொல்லி அவர்களுக்கு உரைக்கவில்லை. வீடு கட்டப் பணம் கடனாகக் கேட்டு கணபதி மறுத்ததும் தான் மனத்தாங்கல் ஏற்பட்டது.

மாலை...வேலை முடிந்ததின் அடையாளமாக சங்கு உரக்க ஒலித்தது. திடுக்கிட்டு விழித்துக் கொண்டு எழுந்தாள்.

என்ன இது? ஒரு நாள் பொழுதை... இப்படி வீணாக பல பழைய சங்கதிகளை நினைத்துக் கழித்துவிட்டாளே.

அவள் கணவன் சொல்வார் அடிக்கடி.

'பழையதையெல்லாம் ஏன் நினைத்துப் பார்க்கணும்? கசப்பான சங்கதிகளை மீண்டும் நினைத்துக் கண்ணீர் உகுப்பது எத்தனை அறிவீனம்?

நாம் வாழ்க்கையில் நடந்துபோன பாதையைத் திரும்பிப் பார்த்து... வேதனைப்பட வேண்டுமென்றிருந்தால் நமக்கு முதுகில் கண்களை ஆண்டவன் வைத்திருப்பான்—முகத்தில் எதற்காகக் கண்கள்—நடக்கப்போகும் பாதையை நன்றாகப் பார்த்து முள், கல் இவைகளால் காலுக்கு வேதனை ஏற்படுத்திக் கொள்ளாது சுத்தமான பாதையிலே முன்னேறத்தான்—புரிந்ததா?' பக்கத்திலே நின்றுகொண்டு அவர் சிரிப்பது போன்ற பிரமிப்பில் திரும்பிப் பார்த்தாள். தோள் பையை எடுத்து மாட்டிக் கொண்டு—கார் நிறுத்தத்தை நோக்கி நடந்தாள்.



# 9

வாழ்க்கை தன்னைப் பல விதத்திலும் ஏமாற்றிவிட்டதாக எண்ணியபடி, கனத்த மனத்துடன் மாடிப்படிகளில் மெல்ல ஏறினார் சிவநேசன்.

சென்னையில் அவர்களுக்குச் சொந்தமான ஓட்டுக் கூரை வீட்டில் குடியிருந்தவரை அவரால் வெளியேற்ற முடியவில்லை.

"முன் பக்கத்து ரூமில் நான் தங்கிக்கிறேன்." குடியிருந்தவரை கும்பிடாத குறையாகக் கெஞ்சிப் பார்த்தார்.

"குறித்த காலத்தில் நான் காலி பண்ணிக்கொண்டு போறச்சே நீங்க வீடு முழுசையும் ஆக்ரமிக்கலாமே..." என்றார் அந்த வம்புக்காரர்.

பம்பாயிலிருந்த அவர்களது மதுங்கா ஃப்ளாட்டில் அவரால் மகனுடன் கூடத் தங்கியிருக்க முடியவேயில்லை.

மருமகள் வேலைக்குப் போகிறவள்—கடன்பட்டு ஃப்ளாட்டைக் கொஞ்சம் திருத்தம் செய்து விட்டிருந்தான் மகன்—இரண்டு படுக்கை அறைகள் கொண்ட புதுக் கட்டிடம் போல மாறுதலாகிவிட்ட போதிலும் வராந்தாவிலிருந்து அவரது படுக்கையை உள்ளே கொண்டு வரும் மாறுதல் ஏற்படவேயில்லை.

பனி நாட்களில் கைகால்கள் விறைக்க... அப்பப்பா வராந்தாவில் கிடந்து அவருக்கு ஆர்த்ரைட்டிஸ் நோயே வந்துவிட்டது.

மருமகள் கொஞ்சம் சிடுசிடுப்புக்காரி. வேலையிலிருந்து வரும்போதே படபடவென்று வெடிப்பாள்.

"ஒரு கப் காப்பி சூடா கிடைக்குமா?" என்று அவளிடம் கேட்க அவருக்கு அச்சம்.

அவரது மறைந்துபோன மனைவி மட்டும் கோபத்தில் குறைந்தவள் அல்ல. பெரிய வீட்டுப் பெண் என்ற தகுதியில் சீரும் வரதட்சணையும் கணிசமாகக் கொண்டு வந்தவள் என்று அவள் கொஞ்சம் திமிராகவே நடந்து கொண்டாள். வாய்கிழிய சண்டைபோடத் தெரிந்த அவரது தாய்க்கு அவளை சமாளிக்க முடியவில்லை. அப்போதெல்லாம் வீடு நரகமாகிக் கொண்டு வந்தது. 'அங்கே என்ன?' என்று அப்பா அதட்டல் போட, "ஒண்ணுமில்லை. அத்தைதான் அப்படி உரக்கக் கத்திக் கோவிச்சுக்கிறாங்க' என்று அவர் மனைவி சொல்ல, 'நானா கத்தினேன். நன்றாயிருக்கே நியாயம்' என்று அம்மா கூக்குரலிட... போதும் வாழ்க்கை. அலுவலகத்திலேயே அக்கடா என்று உட்கார்ந்து வேலை பார்த்துக் கொண்டிருக்கலாமே ஒன்று அவர் பலமுறை எண்ணி ஏங்கியவர்.

அம்மா—அப்பா...எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக மறைந்து போனார்கள்.

பிள்ளைகள் தலையெடுத்தனர்—பெண்ணுக்குக் கல்யாணமாகியது. கைக்காசு கரைந்தது, தலை நரைத்து வழுக்கையாகியது. கால்முட்டிகளில் வலி எடுத்தது. அந்த நாளில்கூட மனைவி அவரை அனுசரணையாகக் கவனித்ததேயில்லை.

அவளுக்கு சதா எரிச்சல்...பேசும்போதே கத்தித்தான் பேசினாள். ஏதாவது மூளைக் கோளாறாக இருக்குமோ என்று உள்ளூர அவருக்கு அச்சம் கூட இருந்தது.



மாமியாருடன் போட்ட சண்டைகளில் மீதமிருந்ததை மருமகளுடன் போட்டுத் தீர்த்துவிட்டு அவள் ஒரு நாள் மயங்கி விழுந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவள், ஃப்ளாட்டுக்குப் பிணமாக வந்துசேர்ந்தாள். அவளது காலம் முடிந்துவிட்டது. அனுசரணையில்லாத மனைவி என்றாலும் நாலு தடவைகள் கேட்டால் ஒரு தடவையாவது குடிக்க தண்ணீர் கொண்டுவந்து தந்தாள். மருமகளோ...அவரை முறைத்துப் பார்த்துவிட்டு...அப்பால் நகர்ந்து கொண்டாள்.

"பிரிட்ஜில் தண்ணீர் பாட்டிலில் வச்சிருக்கு. எடுத்துக் குடிக்க என்ன கேடு?' கணவனிடம் அவள் சொன்னது காதில் விழுந்தபோது அவமானத்தில் துடித்துப் போனார் அவர்.

அவளும் மனைவியைப் போல ஒரு உயர்மட்ட அதிகாரியின் மகள்தான். உயரத்திலிருந்து வந்தவர்கள்தான் அந்த இரு பெண்களும்...உயர்ந்த குணமே துளிகூடக் கிடையாதவர்கள்.

பேரன்—பேத்தி இருவரும்போட்ட கூச்சல் போதாது போல இரவு வெகுநேரம் வரை வீடியோவில் சத்தமாக பாப் இசையைக் கேட்டு ரசித்துக் கொண்டு அவர் தூக்கத்தில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தாள்.

தொடர்ந்து அவர்களுடன் 'தங்கினால் பசியடங்கு முன் பைத்தியம் பிடித்துச் செத்துவிடுவார் என்று அஞ்சி மெல்ல மகனிடமிருந்து பிய்த்துக்கொண்டு சென்னைக்கு வந்துவிட்டிருந்தார். வங்கியில் தமக்குள்ள சேமிப்பிலிருந்து வரும் வட்டியில் ஒரு சிறு அறையில் தங்கிக் கொண்டு தனியாக—சுதந்திரமாக வாழமுடியும் என்றுதான் கிளம்பி வந்திருந்தார்.

வந்ததுமே வீடு கிடைக்காத திண்டாட்டம்—சொந்த வீடு இருந்தும் அவர் ஒரு வீட்டின் மாடியறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

உள்ளடங்கிய குளியலறையுடன் வெளியே மாடிப்படிகளுடன் அமைந்த அந்த ஒரு அறைக்கு வீட்டுக்காரி அவரிடம் நானூறு ரூபாய் வாடகையைக் கரந்து கொண்டிருந்தாள். அருகிலிருந்த ஹோட்டலில் காலை, மாலை இரு வேளை சாப்பிட்டுவிட்டு இரவு ஒரு மின் விசை அடுப்பில் கொஞ்சம் நீரைக் கொதிக்கவிட்டு திடீர் பால் பவுடரை அள்ளிப்போட்டு சர்க்கரையுடன் கலக்கிஆற்றிச் சாப்பிட்டுவிட்டுப் படுத்தார். ஆனால் திடீர் என்று மின் விசை துண்டிப்பு ஏற்பட்டால், ஒரு மணிக்கு மேல் விளக்குகள் திரும்ப எரியாது போனால்...அந்த ஒரு வாய் பாலுக்கும் ஆபத்து ஏற்பட்டு விடும்.

சே! இதென்ன வாழ்க்கை—ஒரு தலைவலி—கால் வலி வந்தால்...என்ன என்று கேட்க நாதியற்று... மனம் கசந்து போய்விட்டிருந்தார்.

அந்தக் கல்யாணத்திற்கு அவருக்கு யாரோ... எப்படியோ அழைப்பு விடுத்திருந்தார்கள். கல்யாண வீட்டவர்களின் வெகு தூரத்து உறவுக்காரர் என்ற முறையில் அங்கே வந்திருந்தார்.

காலைவேளை ஹோட்டலுக்கு ஓடவேண்டாம்—கல்யாண வீட்டில் சாப்பாட்டை முடித்துக்கொண்டு விடலாம் என்ற ஆதங்கம்.

'எங்க வீட்டுப் பிள்ளை இன்ஜினீயர் பட்டம் பெற்றவன். ஆள் அழகன். கைநிறைய சம்பாதிக்கப்போகிறவன். வேலை அவனுக்காகத்தான் காத்துக் கொண்டு கிடக்கிறது' என்று அம்மா ஜம்பம் அடித்த காலம் போய் ஒரு தட்டு சோற்றுக்குத் தாளம் போடும் நிலைக்கு வந்து விட்டோமே என எண்ணி அவர் பட்ட வேதனை கொஞ்சநஞ்சமல்ல.

அன்று கல்யாண மண்டபத்தில் விமலாவைப் பார்த்த பின்னர், அவளிடம் பேசிய பின்னர்...அவர் மனம் உணர்ச்சிப் போராட்டத்தில் குமுறியது.



அன்று மாலை...அருகிலிருந்ததொரு ஓட்டலில் காப்பி டிபனை முடித்துக்கொண்டு கிளம்பி விட்டிருந்தார்.

விமலாவின் வீட்டு முகவரி அவரிடம் இருந்தது.

சென்னைக்கு வந்த சில நாட்களிலேயே...அவளது முகவரியை டெலிபோன் டைரக்டரியிலிருந்து எடுத்து ஒரு கடிதத்துண்டில் குறித்து வைத்துக் கொண்டிருந்தார்.

யதேச்சையாக அந்தப் பக்கம் வந்தவர் அவளைப் பார்த்துப் போக வந்ததாகச் சொன்னால் என்ன?

காந்தி நகரில் அவருக்கு ஒரு நண்பன் இருந்தான்—அவனிடம் பேசிவிட்டு...விமலா தொழிற்சாலையிலிருந்து வந்த கொஞ்ச நேரத்தில் போய்ப் பார்க்க வேண்டும். இப்பவே போனால் ஒரு சமயம் அவள் விட்டிலிருக்க மாட்டாள். பலவாறு எண்ணிக் குழம்பிக்கொண்டு புறப்பட்டிருந்தார்.

விமலாவைக் கட்டாயம் அவளது வீட்டிலேயே சந்தித்துப் பேச வேண்டும் என்ற தீவிரம் அவளைப் பார்த்த தினத்திலிருந்து மனதுக்குள் குடைந்து கொண்டிருந்தது.

என்ன பேசுவது? எப்படி ஆரம்பிப்பது...என்று முதல் நாள் இரவு தூங்காது...ஒத்திகை செய்து...படுக்கையில் வெறுப்புடன் சரிந்து கொண்டு—எழுந்து உட்கார்ந்து—அறையை நடையால் அளந்து—இரண்டு தடவை மண் கூஜாவிலிருந்த தண்ணீரைத் தம்ளரில் ஊற்றி வேகமாகக் குடித்து...ரொம்பவே அவஸ்தைப்பட்டு விட்டிருந்தார்.

மாலைப் பொழுது மஞ்சளாகிவிட்ட நேரத்தில் அவர் மெல்ல பஸ்ஸை விட்டிறங்கி அவளது பங்களா இருந்த தெருவிற்குள் புகுந்தார்.

அழகாக, புதிதாகக் கட்டப்பட்டிருந்த பல பங்களாக்களைத் தாண்டி, கடிதத் துண்டிலிருந்த எண்ணைப் படித்துக் கொண்டு நிதானமாக கேட்டருகே வந்து நின்றார்.

சுற்றுச்சுவர் முகப்பிலே பளபளத்த பித்தளைத் தகட்டிலே பளிச்சென்று 'கணபதி' என்ற பெயர் தெரிந்தது. மனிதன் மண்டையைப் போட்டு எவ்வளவு காலமாச்சு. தகட்டை மாற்றவில்லையே விமலா! தனக்குள் எண்ணியபடி கேட்டை நெருங்கினார்.

'நாய்கள் ஜாக்கிரதை' என்ற எச்சரிக்கைப் பலகை காணவில்லை. அவருக்கு சட்டென்று ஞாபகத்திற்கு வந்தது. விமலாவுக்கு நாய்கள் என்றாலே பெருத்த அலர்ஜி. அது மாதிரியான இடங்களில் அவை தேவைப்பட்டன என்றாலும் தனக்குப் பிடிக்காததால் வைத்துக் கொள்ளவில்லை. அதுவும் அவரது நல்லகாலம். இல்லாவிட்டால் உள்ளே நுழைய இவரால் முடியாதே.

அதற்குப் பதில் வாயில்புறம் காவலாக நின்றுகொண்டிருந்த கூர்க்கா 'யார் அது?' என்று இந்தியில் அதட்டிய போது திடுக்கிட்டுப் போனார்.

வடதேசத்திலே வாழ்ந்த பயன் அவருக்கு ஹிந்தி பேசத் தெரிந்திருந்தது. "நான் அம்மாவின் நெருங்கிய உறவினன். அவங்களைப் பார்க்க வந்திருக்கிறேன். ஏற்கனவே வருவதாகச் சொல்லியிருந்தேன். அம்மா வந்துட்டார்களா?" சரளமாக அவர் ஹிந்தியில் பேச கூர்க்கா மரியாதையானான்.

"அம்மா வர நேரம்தான். நீங்க காத்திருக்க முடிஞ்சா உள்ளே போங்க. சின்ன அம்மா இருக்காங்க" என்றான் கூர்க்கா. வெல்வெட் விரித்தாற் போன்ற புல்தரை இடையே ஓடிய கல் பாவிய...நடைபாதை வழியே மெல்ல நடந்தவர் பிரமிப்பிலே அயர்ந்து போய் விட்டார்.

அதிர்ஷ்டம் என்றால் இப்படியல்லவா அடிக்க வேண்டும்!

மிகச் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவள் விமலா.

இப்போது...பணக்காரர் கோஷ்டியிலே சேர்ந்துவிட்டாளே. சின்ன மளிகைக்கடை வைத்துக்கொண்டு உப்பு—



பருப்பு—புளி என்று விற்றுக்கொண்டிருந்த கணபதி பிரபல தொழிலதிபராகிப் பணத்தை வாரிக் கொட்டி வசதியாக வீட்டைக் கட்டிக்கொடுத்து...

மேலே அவர் சிந்திக்குமுன், "யாரது?" என்ற இனிய குரல் கேட்க நிமிர்ந்து பார்த்தார்.

பதினாறு வயதிருக்கும். ஒரு இளம் பெண்—மாக்ஸி உடையில் புன்முறுவலுடன் வெளியே வந்து எட்டிப் பார்த்தாள்.

"என் பெயர் சிவநேசன்—அம்மாவுக்கு ரொம்பத் தெரிஞ்சவன். அவர்களைப் பார்க்க வந்திருக்கேன்." தயக்கமாகப் பளிங்கு பரவிய வராந்தாவிலே நின்றார்.

"வாங்கோ, உள்ளே வந்து உட்காருங்கோ. அம்மா வரும் நேரந்தான்" உபசரித்தாள் அவள்.

"உன் பெயர் என்னம்மா?" கனிவுடன் கேட்டுக் கொண்டு ஒரு சோபாவில் சாய்ந்து கொண்டார்.

"நான்தான் அவங்க மகள்—பெயர் ஜோதி—சித்த முன்தான் நான் காலேஜிலிருந்து வந்தேன். இருங்கோ வந்துட்டேன்" என்று உள்ளே விரைந்தாள்.

வரவேற்பறையின் அலங்காரத்தை வைத்த விழி வாங்காது பார்த்தார். கண்கள் வியப்பில் விரிந்தன.

காலின் கீழ்கிடந்த பாதம் புதையும் ரத்ன கம்பளத்திலிருந்து, ஜன்னல் திரைச்சீலைகளிலிருந்து... சுவரில் தொங்கிய படங்கள்... தலைக்கு மேல் தொங்கிய சர விளக்கு, மரத்தடுப்பு, அதன் படிகளில் வைக்கப்பட்டிருந்த அலங்காரப் பொருள்கள் எல்லாமே ரசனையுடன் பொறுக்கி எடுத்தவைகளாக அவருக்குத் தோன்றின. விமலாவுக்குக் கலை பொருள்கள் மீது ரொம்ப ரசனை. வசதி கிட்டியதும் அவள் வரவேற்பறையை ஒருபொருள்காட்சி அறையாக மாற்றி விட்டிருக்கிறாள்.

சாயான்களை வாங்கிவிட முடியும். அவைகளை ஜாக்கிரதையாகப் பாதுகாக்கத் தெரிய வேண்டாமா... விமலா ரொம்பக் கெட்டிக்காரி.

துளி தூசி—அழுக்குப் படாது... படுசுத்தமா வைத்திருக்கிறாளே. இந்த அறையிலே உட்கார்ந்து கொண்டு கொஞ்ச நேரம் தொலைக் காட்சியைப் பார்த்தாலே போதும். மனதிற்கு ரொம்பவே இதமாக இருக்கும் போலருக்கே.

வரவேற்பறையைத் தடுத்த தேக்கு மரத் தடுப்புக்கப்பால் அவரது பார்வை ஓட முயன்றது.

எங்கு திரும்பினாலும் செல்வத்தின் வசதி அவரது கண்களைக் கவ்வியது. வியப்புடன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தவர் தொலைபேசி கிணுகிணுப்பதைக் கண்டு திரும்பினார். உள்பக்கமிருந்த இணைப்பை எடுத்து ஜோதி பேசுவது கேட்டது. என்ன ஏது என்று தெளிவாகப் புரியவில்லை.

சிறிது நேரத்தில் அங்கு வந்த ஜோதி மென்மையாக முறுவலித்து விட்டு, "ஸார், அம்மா தொழிற்சாலையிலிருந்து ஏதோ காரியமாக அண்ணாசாலை வரை போயிருக்காங்களாம். வர நேரமாகுமாம்."

"அம்மாவா தொலைபேசியில் இப்போ கூப்பிட்டாங்க?" ஆவலுடன் கேட்டார்.

"இல்லை தொழிற்சாலை மானேஜர் அம்மா சொல்லச் சொன்ன தகவலைக் கூறினார். நீங்க எதுக்கும் அம்மாவுக்கு போன் பண்ணிட்டு வந்தா நல்லா இருக்கும்" என்றாள்.

தடுப்பின் மறு பக்கத்திலே லேசாகக் காலடி ஓசை கேட்டதும் ஜோதி வேகமாக நகர்ந்து சங்கரி நீட்டிய மரத் தட்டை வாங்கிக் கொண்டாள்.



"ரொம்ப தூரம் தேடிக் கொண்டு வந்தாற்போலக் களைச்சுக் காணப்படுறீங்க. குளிர் பானம் சாப்பிட்டுட்டுப் போகலாம்" என்று கண்ணாடி டம்ளர் நிறைய ஆரஞ்சுப் பழரசத்தை அவரிடம் நீட்டினாள்.

சிவநேசனுக்குத் தாகமாகத்தானிருந்தது. சட்டென்று டம்ளரை எடுத்து வேகமாகக் குடித்துவிட்டு அருகிலிருந்த முக்காலிமீது காலி டம்ளரை வைத்தார். கைக்குட்டையால் வாயைத் துடைத்துக்கொண்டே எழுந்திருந்தார்.

'தாங்க்யூ மிஸ் ஜோதி. நான் வந்ததை அம்மா கிட்டே சொல்லும்மா. எந்தக் காலேஜில் படிக்கிறே? என்ன பாடம் எடுத்துக்கொண்டிருக்கே? உனக்கு வீணை வாசிக்கத் தெரியும் போலிருக்கே. வீணை அங்கே வச்சிருக்கிறதைப் பார்த்தேன்' என்று பலவும் விசாரித்துக் கொண்டு போக மனமில்லாது சிறிது நேரம் நின்றுவிட்டு விடை பெற்றுக் கொண்டார்.

பொழுது அமிழ்ந்து இருட்டத் தொடங்கியபோது தான் விமலா வீட்டுக்கு வந்தாள்.

மாத்துடை அணிந்து கொண்டு காப்பி டம்ளருடன் வரவேற்பறை சோபாவில் அவள் சாய்ந்து கொண்ட பின்னர்தான் சங்கதியைச் சொன்னாள் ஜோதி.

"உங்களைப் பார்க்க சிவநேசன் என்கிறவர் வந்திருந்தார்." திடுக்கிட்டு நிமிர்ந்து மகளைப் பார்த்தாள் விமலா.

"நீங்க வர நேரமாகும்னு தொலைபேசியில் தகவல் கிடைச்சதும் அவருக்குக் குளிர்பானம் கொடுத்து அனுப்பினேன். என்னம்மா அப்படிப் பார்க்கிறீங்க? நான் செய்தது தப்பா?"

"இதைப் பொறுத்தவரை இல்லை. ஆனால் நான் இல்லாதபோது நீ யாரையும் வீட்டுக்குள் விடக் கூடாதுன்னு சொல்லியிருக்கேன் இல்லை."

விமலாவின் குரலில் தொனித்த கோபம் மகளைத் திகைக்கச் செய்தது. ''ஸாரி அம்மா...இனிமேலே நான் எச்சரிக்கையோட இருப்பேன்.'' முனகிவிட்டு...மெல்ல பின்பக்கம் மறைந்து போனாள்.

அதற்குப் பின்னர் விமலாவுக்கு மூச்சு விடக்கூட நேரம் இருக்கவில்லை.

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு வெளிநாடுகளுக்கு ஏற்று மதியாக வேண்டிய தயாரிப்பு ஆடைகளை விரைவாகத் தைத்து குவிக்கவேண்டிய நிர்பந்தத்தில் அவளது நிறுவனம் திணறிக் கொண்டிருந்தது.

ஊழியர்கள் யாவரும் வேலையில் மும்முரமாகி விட்டிருந்தனர். அதிக நேர வேலையில்கூடச் சிலர் செயல் பட வேண்டியிருந்தது.

அதன் பயனாக அவள் காலையில் வெகு சீக்கிரம் கிளம்பிச் சென்று பொழுது அமிழ்ந்த பின்னரேதான் வீட்டுக்குத் திரும்பினாள்.

தனியாகத் தானே திறமையுடன் ஒரு தொழிற்சாலையை நடத்தி வியாபாரத்தை வெற்றிகரமாகக் கொண்டுசெல்ல வேண்டியிருந்ததால் அவளிடம் சில பழக்க வழக்கங்கள் தானே குடிகொண்டு விட்டிருந்தன.

தொழிற்சாலையில் வேலை மும்முரத்தில் யாராவது அவளைத் தொந்தரவு செய்தால் அவளுக்கு எரிச்சல் மண்டிக் கொண்டு வரும்.

அதேபோல் களைப்புடன் வீட்டுக்குத் திரும்பும்போது அவள் ஜோதியிடம்கூடப் பேசமாட்டாள்.

நேரே தன் அறைக்குள் சென்று குளியலறைக் கதவை மூடிக்கொண்டு விடுவாள்.

நீண்ட நேரம் அவள் வெந்நீரில் குளித்து உடலின் களைப்பைப் போக்கிக்கொள்ள முயலுவாள்.



பின்னர் மாற்றுப் புடவையணிந்து முடியை வாரிக் கொண்டையிட்டுக் கொண்டு நெற்றியில் வழக்கமாக அவள் அணியும் கருப்புச் சாந்துப் பொட்டை வைத்துக் கொண்டு பூஜையறையில் போய்ச் சிறிது நேரம் அமர்ந்திருந்து விட்டுப் பின்னர்தான் வெளியே வருவாள். அம்மாவின் பழக்கங்களை நன்றாக அறிந்துகொண்டிருந்த ஜோதி அவளுக்குக் குடிக்க காப்பியோ—தேநீரோ எடுத்துக்கொண்டு வந்து நிற்க மாட்டாள்.

மிக அதிக அலுப்பாகவோ—சோகமாகவோ அவள் தென்பட்டால்தான் அவள், ''என்னம்மா ஆச்சு!'' என்று விசாரிப்பாள்.

அன்று பகல் தங்கை மாலதி அவளை தொழிற்சாலை போனில் கூப்பிட்டாள். மானேஜருடன் அவள் வியாபாரம் சம்பந்தமாக ஆலோசனை நடத்திக்கொண்டிருந்த சமயம்.

''யார் கூப்பிட்டாலும்...நான் ரொம்ப பிஸி என்று சொல்லி விடு'' என்று ரிஸப்ஷன் பெண்ணுக்குச் சொல்லியிருந்தும் மாலதியின் வற்புறுத்தலை சகிக்காது தொலைபேசிக்கு இணைப்பு தந்துவிட்டாள். ''அக்கா இன்னிக்கு சாயங்காலம் நான் என் நாத்தனார் மகள் ஷீலாவோட உங்க பங்களாவுக்கு வர இருக்கிறேன்.''

''நான் வீட்டுக்குப் போக நேரமாகுமே.''

''பரவாயில்லை. காத்திருந்து பார்த்துட்டுப் போகிறோம். காட்டிலேயா இருக்கப் போறோம்? உங்க வீட்டிலே காத்துக்கொண்டிருக்க எனக்கு மறுப்பு இல்லை.''

''மாலதி எனக்கு மறுப்பு இருக்கு, நான் ரொம்பக் களைச்சுப் போய் வீட்டுக்கு வர சமயம் விசிட்டர்ஸ் எதுக்கு?''

"என் நாத்தனார் பெண் நாளன்னிக்கு மதுரைக்குப் போகப் போகிறாள். அதுக்கு முன்னாடி உங்களைப் பார்த்துட்டு..."

தாடை இறுகிப் போனாள் விமலா. பொங்கி வந்த கோபத்தை அடக்க உதட்டைப் கடித்துக்கொண்டாள்.

"ஷீலாவுக்கு இப்போ என்னை அவசியம் பார்க்கணுமா?"

"ஆமாம் அக்கா. அவள் புரசைவாக்கத்திலே ஒரு பொட்டீக் ஆரம்பிக்கப் போறா. புது தினுசா தைச்சிருக்கிற சில ரெடிமேட் உடைகளைப் பார்க்கணுமாம். அதைப்பத்தி உங்ககிட்ட பேசணுமாம்."

"அதுக்கு வீட்டுக்கு வந்து என்ன பண்ணப் போறா? எங்க அண்ணாசாலைக் கடையிலே போய் பார்க்கட்டும்."

"அவளும் இதே போல ஒரு ரெடிமேட் ஆடைத் தயாரிப்பு நிறுவனத்தை ஆரம்பிக்கத் திட்டம் போட்டிருக்கா."

"ஆரம்பிக்கட்டும். ஐ விஷ் ஹர் ஆல் தி பெஸ்ட்..."

"எத்தனை முதல் போடணும், எத்தனை மிஷின்களை வாங்கணும்னு உங்ககிட்ட ஆலோசனை கேட்கவும் தான் வரப் பிரியப்படறா."

"மாலதி உன் நாத்தனார் மகள் பிரியப்படலாம். அவளைப் பார்த்துப் பேச எனக்கு இப்போ நேரம் இல்லே. என்னைவிட இந்தத் தொழிலில் இன்னும் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறவங்க பலர் இருக்காங்க. அங்கே போய் பார்க்கட்டும்."

"அக்கா அப்படியே உங்க வீட்டு முன்னறையில் வச்சிருக்கிற அலங்காரப் பொருள்களில் முக்கியமா அந்த கிரிஸ்டல் பூனையைக் காட்டணும்னு ஆசைப்படறேன். பார்த்துப் பிரமிச்சுப் போயிடுவா."



"மாலதி என் வீடு மியூசியம் இல்லே. நான் அமைதியா இருக்க விரும்பற ஒரு தங்குமிடம். உன் நாத்தனார் பொண்ணே நேரே வரலாம். நேரம் வசதியா இருக்கும்போது வரலாம். ஓ.கே." சொல்லிவிட்டு எரிச்சலுடன் போனை வைத்தாள்.

மாலதி ஒரு பெரும் தற்பெருமைக்காரி. தன் அக்கா வாழாது வாழ்கிறாள். பெரிய தொழில் நிறுவனத்தை நடத்திக்கொண்டு போகிறாள் என்று புக்ககத்து மனிதர்களிடம் தம்பட்டம் அடிக்கத்தான் இந்த ஏற்பாடு.

"என் அக்காவைக் கேட்டுப் பார். அவள் வியாபார நுணுக்கங்களை சொல்லித் தருவாள். அப்பாயிண்ட்மெண்டாவது மண்ணாங்கட்டியாவது. என் அக்கா வீட்டுக்கு நான் நினைச்சபோது போக முடியாதா என்ன?" என்று பெருமை பேசியிருப்பாள்.

இப்போது மூக்குடைந்து போய்விட்டதென்ற கோபத்தில் இன்னும் சில மாதங்கள் மனத்தாங்கலுடன் இருப்பாள்.

பின்னர்...மாமியார் அவளைப் பார்க்க விரும்பினால் 'ஒரு ரெண்டு நாள் உங்கள் வீட்டில் இருக்கப் பிரியப் படுகிறாள்' என்பது போல ஏதோ கதை சொல்லிக் கொண்டு தொலைபேசியில் தொடர்பு கொள்ளுவாள். மனத்தாங்கல் பட்டுக்கொண்டு விட்ட அண்ணனைப் போல் அழுத்தலாக ஒதுங்கிக் கொண்டு, விலக்கமுடியாத சந்தர்ப்பங்கள்போது ஹலோ என்று மட்டும் சொல்லி விட்டுப் பட்டும் படாமலிருக்க மாலதிக்குத் தெரியாது. மல்லுச் சண்டை போட்டுவிட்டு ஒரு மூச்சுக் கண்ணீர் உகுத்து, 'இனி நான் இந்தப்பக்கம் தலை வச்சுப் படுக்க மாட்டேன்' என்று சபதம் செய்துவிட்டுப் போகிறவள், அடுத்த சில நாட்களுக்குப் பின்னர் தொலைபேசியில் தொல்லை கொடுப்பாள்.

மாலதி ஒரு ஒட்டாம்புல்.

தங்கையின் குறுக்கீட்டில் சிந்தனை சிதறிப் போன விமலா தன் கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு மேலே வேலையைக் கவனிக்கலுற்றாள்.

# 10

அன்று அவள் வீடு திரும்ப நேரமாகி விட்டது.

கார் தெருவுக்குள் புகுமுன்பே சாலை விளக்குகள் பளிச்சிடத் தொடங்கி விட்டிருந்தன.

வேகமாக இருள் பரவிக் கொண்டு வந்ததால் கேட்டருகே கம்பத்தில் நின்ற முட்டை விளக்குகளும் தோட்டத்து விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன.

ஜோதி வராந்தா அருகே நின்று எட்டிப் பார்த்தாள்.

காரை கராஜிற்குள் நிறுத்திக் கதவை மூடிப் பூட்டி விட்டுப் படிகள் ஏறி வராந்தாவை மெல்லத் தாண்டி வந்த போது தொலைபேசி கிணு கிணுத்தது.

மறுபடியும் மாலதியா? அவள் பிடிவாதக்காரி. மண்டையிலடிப்பது போலச் சொல்லாவிட்டால் விடமாட்டாள் என்று கோபத்துடன் மகள் அதை எடுக்கு முன் தானே கையில் எடுத்துக் கொண்டாள்.

''ஹலோ எப்படி இருக்கீங்க? உங்களை நான் இப்போ வீட்டில் பிடிச்சுட்டேனே.இன்று பகலும் உங்கள் தொழிற்சாலைக்குப் போன் செய்தேன். கனெக்ஷன் கிடைக்கலை. நீங்க ரொம்ப வேலையாக இருப்பதாகச் சொன்னாள் அந்தப் பெண்.'' சிவநேசன் சிரித்தார் மறு பக்கத்தில்.

''ஆமாம். நான் ரொம்ப பிஸியாகத்தான் இருந்தேன்.'' பற்களைக் கடித்துக் கொண்டாள் அவள்.



''பிஸியாகவே இருந்தா நாம மறுபடி எப்போ சந்திக்கிறது? பேசறது? நான் உங்களைப் பார்க்க ரொம்ப ஆவலா இருக்கேன். சில முக்கிய விஷயங்களைப் பேசப் பிரியப்படறேன்.''

''நாமதான் பார்த்தோமே. பேசினோமே.''

''விமலா! நீங்க பிடி கொடுக்காம பேசினா...நான் ஒத்துக்க மாட்டேன். உங்களோடு மனம்விட்டுப் பேச நான் விரும்பறேன். நீண்ட நாட்களாகக் கேட்காது ஒத்திப் போட்ட மன்னிப்பு மனசை நெருடுகிறது.''

''பழைய கதையெல்லாம் எதுக்கு?''

இது பழைய கதையல்ல. எப்பொழுதும் புதிதாக இருந்துகொண்டு மனதை வேதனைப் படுத்தறதே. நான் இந்த ஞாயிற்றுக்கிழமை காலையில் வரலாமா?''

உதட்டைக் கடித்துக்கொண்டாள் விமலா. இதென்ன இது காலைச் சுற்றின பாம்பு போல... ''வாங்கோ அப்படியே சாப்பிட்டு விட்டுப் பேசலாம். ஞாயிற்றுக் கிழமைகளில் நாங்க பத்து மணிக்கே சபப்பிட்டு விடுகிறது. உங்களுக்கு சரிதானே...''

''நானும் ஞாயிற்றுக்கிழமைகளில் சாப்பாட்டை காலையிலேயே முடிச்சுக்கிறது பழக்கம். என்னைப் போலவே நீங்களும்...ஹி...ஹி...'' உறக்கச் சிரித்தார் சிவநேசன்.

''சரி... நாளை ஞாயிற்று கிழமை கொஞ்சம் முன்னதாகவே நீங்க வந்துடுங்கோ'' போனை வைத்தாள்.

தாயின் முகத்தைக் கவலையுடன் பார்த்தாள் ஜோதி.

''அந்த மனிதர் இரண்டு தடவைகள் போன் செய்து விட்டார். நீங்க வர நேரம் பிடிக்கும்னு சொல்லியும் கேட்கலை!''

"பரவாயில்லை! அவர் இந்த ஞாயிற்றுக்கிழமை நம்ம வீட்டுக்கு சாப்பிட வரார். ஜோதி...உன் சமையல் திறனைக் காட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பம். சங்கரி அம்மாளுக்கு நீ கூடக் கொஞ்சம் ஒத்தாசை செய்யணும்."

"பாயாசம்வடையோடசாப்பாடு தயாரிக்கணுமா?"

"ஆமாம். ஜம்முனு சமைச்சுடு பார்க்கலாம்" லேசாகச் சிரித்தபடி மாடிக்கு விரைந்து விட்டாள் விமலா.

ஜோதிக்குக் கொஞ்சம் வியப்பாகத்தானிருந்தது.

அன்று அவள் குளிர்பானம் கொடுத்து அவரைக் கொண்டாடியதற்கு கோபித்துக் கொண்ட அம்மா இப்போ விருந்து படைத்து அவரைக் கௌரவிக்க விரும்புகிறாளே...ஏன்?

## 11

விடிவிளக்கு லேசாக ஒளியை உமிழ்ந்துகொண்டிருந்தது.

உறக்கம் வராது படுக்கையில் புரண்டு கொண்டிருந்த விமலா எழுந்து உட்கார்ந்தாள். மேஜைமேல் சாய்வாக வைக்கப்பட்டிருந்த அவளது கணவரின் புகைப்படத்தில் பார்வை ஊன்றியது.

கணபதி அவளைப் பார்த்து முறுவலிப்பது போன்றதொரு மிரட்சி.

"நான் சொன்னபடிதானே எல்லாம் நடக்கிறது?" காதருகில் அவர் கிசுகிசுப்பது போன்ற உணர்வில் மெய் சிலிர்த்துப் போனாள்.

நெற்றிமீது புரண்ட கூந்தலைத் தள்ளிக்கொண்டு போர்வையைத் தலைமீது வழிய விட்டபடி படுக்கையில் சாய்ந்துகொண்டாள்.



அன்று அவள் செய்த வேலையினால் ஏற்பட்ட களைப்பிற்கு—சாப்பாட்டிற்குப் பின்னர் அடித்துப் போட்டது போல அவள் தூங்கியிருக்க வேண்டும்.

ஆனால் மனதில் அலைபாய்ந்த சிந்தனைகள்- கடந்த காலத்திற்குள் மூழ்கிப் புரண்டுகொண்டு... உறக்கத்தை விரட்டி விட்டிருந்தன.

எத்தனை முயன்றும்...அட்டையைப் போல ஒட்டிக் கொண்டு விட்ட அந்த...கடந்த காலத்து நிகழ்ச்சிகளை அவளால் உதறிவிட இயலவில்லை.

கல்யாண மண்டபத்திலிருந்து...பிள்ளை வீட்டவர்களுடன் அன்று மறைந்து போன வசந்தாவை அவள் மறுபடி....சில ஆண்டுகளுக்குப் பின்னர் யதேச்சையாகச் சந்தித்தாள்.

அவள் கணவர் ரெடிமேட் ஆடை தயாரிப்புக் கடையை ஆரம்பித்துச் சில மாதங்களே ஆகியிருந்தன.

கணபதி கடும் உழைப்பாளி. தீபாவளி போன்ற பண்டிகை நெருக்கத்திலிருக்கும்போது...அவரது கடையில் ஆட்கள்...இரவு பகலாக ஆடைகளைத் தைப்பதில் மும்முரமாகி விடுவார்கள். அவர் வீட்டுக்கே வராது கடையில் அவர்களை மேற்பார்வையிட்டுக் கொண்டு—புது வித ஆடைகளைப் பற்றிய விவரங்களுக்குக் குறிப்பெடுத்துக் கொண்டிருப்பார். எத்தனையோ நாட்கள் அவளும் அவர் கூடவே கடையில் துணையாக உட்கார்ந்திருப்பது உண்டு.

இன்று அவள் ஓகோ என்று வாழ்கிறாள் என்று உறவினரும் நண்பர்களும் நினைத்தால்...அது சும்மா வந்த சுகபோகமல்ல.

கணபதியின் கடும் உழைப்பு...நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த செய்த வேலை.

''எத்தனை நாழி முழிச்சுகிட்டிருப்பீங்க? சாப்பிட வேண்டாமா? தூங்க வேண்டாமா?'' என்று அவள் கடிந்து கொள்வது உண்டு.

''எனக்கு திடீர்னு ஏதாச்சும் நேர்ந்துட்டா...அதிகப் படிப்பில்லாத கால் ஊனமானவனை அவசரப்பட்டுக் கட்டிகிட்டாள். இப்போ அம்போன்னு நிக்கிறாள்னு யாரும் உன்னை நிந்திக்கக் கூடாதுன்னு...உழைக்கிறேன். இந்தத் தொழிலை ஒரு உன்னத நிலைக்குக் கொண்டு வந்து விடணும்னு எனக்கு ஓரே வேகம்'' என்பார்.

அவள் கணவர் எப்பொழும் அவளது வருங்காலத்தை யும்-நலமிக்க வாழ்க்கையையும் பற்றித்தான் சிந்தித்தார்.

சுயநலம் சிறிதும் இல்லாத அன்புமிக்க மனிதர் அவர்.

லேசாக இமை ஓரங்களை சுட்ட கண்ணீரை விழுங் கிக் கொண்டாள்.

அவளது வாழ்க்கையில் ஏற்பட்ட இந்தத் திருப்பத் திற்குக் காரணமானவர்களை அவள் மீண்டும் சந்தித்து விட்டாள்.

ஒவ்வொருவரையும் ஒவ்வொரு நிலையில்.

''வண்டி ஓடத்தில் ஏறும்...ஓடம் வண்டியிலும் ஏறும் காலம் வரும்'' என்று அடிக்கடி அவர் சொல்லுவார். அது முற்றிலும் உண்மை என்பதை அந்த மூவரும் நிரூபித்துவிட்டனரே!

பங்களூர் பெரியம்மாவின் நினைப்பு நெஞ்சை கனமாக அடைத்தது. கல்யாணம் நின்று போய் விட்டபோது... பெரியம்மாதான் அவளைவிடத் துயரம் தாங்க முடியாது குமுறி அழுதாள். அவள் மீது விமலாவுக்கு மன வருத் தமே கிடையாது. தன் வீட்டில் வைத்துச் சீராட்டி—நல்ல வரனைப் பார்த்து அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்க உதவ வேண்டுமென்ற நல்ல நோக்கம்தான் பெரியம்மா வுக்கு.



தன் காசைச் செலவழிக்க மனமின்றிப் பூட்டி வைத் துக் கொண்டிருந்தாள். அதைப்பற்றியும் அவள் மீது வருத்தப்பட நியாயமில்லை.

கணபதி எப்பொழுதும் அவளிடம் ஒன்று சொல்வ துண்டு.

''கணவனை இழந்துவிட்ட பெண்கள்... தம் கைக் காசைப் பத்திரமாக வைத்துக் கொண்டு வாழ முயல வேண்டும். உறவினருக்கு வாரி இறைத்துவிட்டு நடுத் தெருவில் நின்று அழுவதில் லாபமில்லை. உன் பெரியம்மா தனது கணவர் விட்டுப் போன காசைக் கைக்குள் அடக்கி வைத்துக் கொண்டிருப்பதைப் பற்றித் தப்புக் கண்டு பிடிக்க முடியாது... நியாயம் அது'' என்று அவளுக்குப் பரிந்து கொண்டு பேசுவார்.

அதற்குப் பின் பெரியம்மா அவர்களுடன் அதிக தொடர்பே வைத்துக் கொண்டதில்லை.

சிறிதளவில் ரெடிமேட் ஆடைத் தயாரிப்புத் தொழிற் சாலையை நிறுவி மிகவும் உற்சாகமாக அவள் கணவன் நடத்திக் கொண்டு வந்த சமயம் அது.

அடையாறிலிருந்ததொரு பழைய பங்களாவை விலைக்கு வாங்கி அவர்கள் குடியேறிவிட்டிருந்த சமயம்.

ஒரு நாள் மாலை வீடு திரும்பிய கணபதி அவளை அவசரமாகக் கிளம்பச் சொல்லி... காரை வாசலில் கொண்டு நிறுத்தினார்.

''இப்பத்தான் தொழிற்சாலையிலிருந்து வந்தீங்க. களைப்புத் தீர காப்பி கூடச் சாப்பிடாமல் உடனே எங்கே புறப்படணுமாம்?'' கேட்டாள் அவள்.

''புறப்படு. பிறகு பேசலாம்'' அவசரப்படுத்தினார்.

தங்கம் நர்ஸிங் ஹோமில் பெண்கள் வார்டுக்குள் நுழையும் வரை அவளுக்கு எல்லாம் ஓரே மர்மமாகத் தான் இருந்தது.

வார்டின் கடைசியில்...கட்டிலின் மீது கயிறு போலக் கருத்துச் சுருண்டு கிடந்த உருவத்தை அவள் சட்டென்று அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

''பெரியம்மாவா? என்ன இது...உடம்புக்கு என்ன?'' என்று அவள் ஆதங்கத்துடன் கேட்டபோது பெரியம்மா சிரமப்பட்டுத் தலையணை மீது கைகளை ஊன்றி எழுந்து உட்கார்ந்து கொண்டாள். கண்களில் புரண்ட கண்ணீர் மாலையாகக் கன்னங்களில் வழிந்தோடியது.

''இருதயம் ரொம்பப் பழுதாகிவிட்டதாம். இங்கே ஒரு பிரபல நிபுணர் இருக்கார்னு அவர் கிட்டே வைத்தியம் செஞ்சுக்க வந்திருக்கேன். ரொம்பப் பணச் செலவாகிறது. நான் முன் போல இல்லே... பணத்தைப் பிடிச்சு வச்சுக்கத் தெரியாம... உன் பெரியப்பாவோட உறவுக்காரப் பிள்ளையை நம்பிக் கடன் கொடுத்து...'' மேலே பேச முடியாது விம்மினாள்.

மனம் கரைந்து போய் விமலா அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டாள்.

''கவலைப் படாதீங்க...நாங்க இருக்கோம். பார்த்துக்குவோம்...'' ஆறுதல் சொன்னாள்.

''எனக்கு என்ன சொல்வதுன்னு தெரியலை. சில நாளைக்கு முன் உன் கணவர் இங்கே யாரையோ பார்க்க வந்தவர் என்னை அடையாளம் கண்டு கொண்டுட்டார். நான் இந்த வாரம் டிஸ்சார்ஜ் ஆகிப்போக வேண்டியவ. இந்த நர்ஸிங் ஹோமுக்குச் செலவழிக்க என் கையில காசு கிடையாது. உன் கணவர் அதைப் புரிஞ்சு கொண்டு தான் உதவி செய்வதாக வாக்குக் கொடுத்து என்னை இங்கேயே தங்க வச்சிருக்கார்.

என் சொத்தையெல்லாம் கட்டிக் கொண்ட பெரியப்பா உறவுக்காரன்—அந்த நாகமணி என்னை வந்து எட்டிப் பார்க்கலை. பாவம்... இவர் உன் கணவர். எனக்கு முன்பின் அதிகம் தெரியாதவர். வந்து உதவி



செய்து போன வாரத்து பில்லை தாமே கட்டிட்டு எனக்கு தைரியம் சொல்லிட்டுப் போனார். உன்னைப் பார்க்க ஆசைப்பட்டேன். அழைச்சுக் கொண்டு வந்திருக்கார்.''

விமலா நெஞ்சுருகிப் போனாள், அவள் கணவன் சொன்னபடி விதவையாகி—தனியாகிவிட்ட அவள் பெரியம்மா விவேகம் இல்லாது பணத்தைப் பறிகொடுத்து விட்டுப் பரிதவிக்கிறாள்.

ஆனால் அவள் நிலைக்குப் பரிதாபப்பட்டு அவள் கணவன் அவளிடம் கூடக் கேட்காது தாமே முன் வந்து உதவியிருக்கிறார்...

''பெரியம்மா உங்க வீட்டில நான் எவ்வளவு நாள் தங்கி சாப்பிட்டிருக்கேன்? அந்த உப்பைத் தின்னுட்டு உங்களை மறந்துட முடியுமா? கவலைப்படாதீங்க. உங்க உடம்பு பூரண குணமாகிற வரை நாங்க பார்த்துக் கறோம்.'' அவளது கைகளைப் பிடித்துக்கொண்டாள். கண்கள் பனித்துப் போயின!

பெரியம்மா அதற்குப் பின்னர் நீண்ட நாட்கள் உயிருடன் இருக்கவில்லை. அவளது இறுதிக் கடனுக்கு ஆகவேண்டிய செலவு அத்தனையும் கணபதிதான் முன் வந்து ஏற்றுக்கொண்டார். அவளது சொத்தை விழுங்கி விட்ட நாகமணியைத் தேடிக் கொண்டுவந்து அவளுக்குக் கொள்ளி போட வைக்க அவர் பட்ட பாடு - அது ஒரு தனிக் கதையாகும்.

ஆனால் வசந்தாவை அவள் மீண்டும் சந்தித்தது வேறு ஒரு நிலையில்.

இப்படித்தான் ஒரு சில மாதங்களுக்கு முன்னர் அவள் ஒருநாள் மிகவும் களைப்புடன் வீடு திரும்பியிருந்தாள்.

குளித்து முடித்துவிட்டு பூஜையறையினின்று வெளிப்பட்டவள், சங்கரி கொண்டுவந்து தந்த காப்பியை ஒரு

வாய் பருகுமுன் - வாயில் அழைப்பு மணி ஆங்காரமாக ஒலிப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள்.

இருட்டத் தொடங்கிவிட்டது. வராந்தா விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

கதவில் பதித்திருந்த கண்ணாடி வழியே பார்த்தாள்.

வயதானதொரு பெண்மணி—மூக்கின்மேல் நழுவிக் கொண்டிருந்த கண்ணாடியைச் சரிப்படுத்தியபடி நின்று கொண்டிருந்தாள்.

யார் இந்த வேளையில்—அவளைத் தேடிக்கொண்டு வந்திருப்பது...ஆவலுடன் கதவைத் திறந்தாள்.

''விமலாதானே! அப்படியே இருக்கியே அம்மா! என்னைத் தெரியலையா?'' படபடவென்று வினவியபடி வந்தவள் அவளைத் தாண்டிக்கொண்டு உள்ளே வந்து விட்டாள்.

''உட்காருங்கோ...எனக்கு ஒரே குழப்பமா இருக்கு'' என்று முறுவலித்தாள் விமலா.

''பல வருஷங்களாயிட்டது பார்த்து. நான் வயசிலே ரொம்ப ஒடுங்கிப் போயிட்டேன்'' சூள் கொட்டினாள் வந்தவள். ''இன்னும் தெரியலையா? நான்தான் வசந்தா. பெங்களூரில் வசித்த வசந்தா. இப்போ சென்னை வந்துட்டேன்.''

திகைப்புடன் விமலா தன் கண்களை அவள்மீது ஓட விட்டாள். அவளால் நம்பவே முடியவில்லை. காது களிலும் மூக்கிலும் வைரங்கள் மின்ன, காஞ்சிபுரப் பட்டுச்சேலை இடையில் கம்பீரம் கட்ட—கனகச்சித மாக—பணக்காரத்தனமாக இருந்த வசந்தாவா...

''என் கணவர் காலமாகிவிட்டார். உனக்குத் தெரிய நியாயமில்லை. அவர் நடத்தி வந்த பிஸினஸ் முழுகிப் போய், ரொம்ப நஷ்டமேற்பட்டு வீட்டைக்கூட விற்க நேர்ந்தது. அந்த வருத்தம் அவரைக் கொண்டு



போயிட்டது. அங்கே தொடர்ந்து இருக்கமுடியாமல் கொஞ்ச நாள் என் ஓரகத்தி மகனோட போய் பம்பாயில் இருந்தேன். சொந்தப் பிள்ளைகளே கவனிச்சுக்க மாட்டேன்னு சொல்ற காலம்—ஓரகத்திப் பிள்ளைக்குத் தலையெழுத்தா என்னை வச்சுக்கொண்டு அவதிப்பட... மெதுவா அங்கிருந்து கிளப்பிட்டான். இங்கே வந்து நான் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தனியா வாழறேன். உன் நினைப்பு வந்தது. உன்னைப் பார்த்துட்டு...'' அவள் முடிக்கவில்லை. ஆனால் சட்டென்று விமலா புரிந்துகொண்டாள். கல்யாணம் நின்று போனதும் அந்த அவமானத்தைத் தாங்கிக் கொள்ள விருப்பம் இன்றி உடனடியாக சிவநேசன் குடும்பத்துடன் மறைந்து போனவள் இந்த வசந்தா!

கல்யாணத்திற்கு முன்னர் அம்மாவை ஆட்டிப் படைத்து வேறு விலையுயர்ந்த சேலை வாங்கச் சொல்லி ஆர்ப்பாட்டம் செய்தவளுக்கு பிள்ளை வீட்டவர்களை அடக்கி—சமாதானம் செய்யத் தெரியாது ஓடி மறைந்து போன கோழை.

''முதல்லே சாப்பிடுங்கோ — பிறகு நாளைக்கு நிதானமா மத்ததெல்லாம் பேசிக்கலாம்'' உபசரித்தாள்,

அன்று வசந்தா அவர்களுடன் தங்கியிருந்தாள்.

மறுநாள் காலை விமலா கிளம்புமுன் தான் வந்த காரியத்தை மெல்லச் சொல்லிவிட்டாள் வசந்தா.

''எனக்கு வயசாயிட்டது. ஓடியாடி ஏதும் செய்ய முடியலை. அதனால வீட்டோட ஒரு சிறு கடை வைக்க யோசனை. அப்பளம் வடகம் இத்யாதிகளை வாங்கி வியாபாரம் செய்யணும்னு திட்டம். முதல் தேவைப் படுகிறது. ஒரு பத்தாயிரம் நீ கொடுத்து உதவினால்... ரொம்ப உபகாரமாக இருக்கும்.''

ஒரு கணம் மௌனமாக இருந்தாள் விமலா.

"உங்களுக்கு எப்போ வரணும்னு தோணுகிறதோ அப்போ வாங்கோ. கொஞ்ச நேரம் இருந்து பேசிட்டு சாப்பிட்டுவிட்டு போங்கோ. எனக்கு மறுப்பு இல்லே. உங்க வீட்டிலே நான் பலதடவைகள் சாப்பிட்டிருக்கேன். ஆனால் கடன் கொடுப்பது என்பது முடியாத காரியம்.

நான் யாரிட்டேயும் கடன் வாங்குகிறதில்லை. யாருக்கும் கொடுக்கறதில்லை. அப்படி ஒரு கொள்கை."

அதற்குப் பின் அந்த வசந்தா அவர்கள் வீட்டுப் பக்கம் வரவேயில்லை. விமலாவின் தாயார் காலமான சில மாதங்களுக்குப் பின்னர் வசந்தாவும் இறந்து போனாள் என்பதைக் கேள்விப்பட்டாள்.

அவளுக்கு உதவவில்லையே என்று ஒரு நாளும் அவள் மனச்சாட்சி அவளை வருத்தவில்லை.

இப்பொழுது மூன்றாவது நபரான சிவநேசன் அவளைப் பார்க்க வரப்போகிறார். என்னவோ பேச வேண்டும் என்று மனிதர் பூடகமாகச் சொல்கிறார்.

வசந்தாவைப் போல அவரும் பணம் கடன் கேட்கத் தான் புறப்பட்டு வருகிறார்.

இல்லை என்றால்...வேறு...மேலே சிந்திக்க மனம் கூசி அவள் கண்களை இறுக்க மூடிக் கொண்டாள்.

கீழே முன்னறையிலிருந்த அந்தப் பெரிய கடிகாரம்—டாண் டாண் என இரண்டு முறை அடிக்க திடுக்கிட்டுப் போனாள்.

உகும்...மணி இரண்டாகி விட்டது. தூங்க வேண்டும் என்று தன்னையே கடிந்து கொண்டாள்.

# 12

அந்த ஞாயிற்றுக்கிழமை காலை விடியலுக்குமுன்பே சிவநேசன் எழுந்து விட்டார்.

இரவெல்லாம் ஒரு இனிய எதிர்பார்ப்பில் மனம் பரபரத்ததில் சரியான உறக்கமே இருக்கவில்லை.

கீசர் வசதியில்லாத குளியலறை. மின் விசை அடுப்பில் நீரைச் சூடாக்கிக் குளிக்க அவருக்குப் பொறுமை இருக்கவில்லை.

சில்லென்று மண்டையைத் தாக்கிய பச்சைத் தண்ணீரில் தலை முழுகினார்.

அவரது துன்பங்களுக்கும், தொல்லைகளுக்கும் பெரிய முழுக்குப் போட்டுவிட்டது போன்று அவர் மனம் லேசாகிப் போனது.

வேலையினின்று ஓய்வடைந்த பின்னர் அவரது சேமிப்பு நிதியிலிருந்து வந்த வட்டியினின்று தன் தேவைகளைப் பார்த்துக்கொண்ட நாளிலிருந்து அவர் அலங்காரமான ஆடைகளுக்கு விடுதலையளித்து விட்டிருந்தார்.

சாதாரணமாக வீட்டில் இருக்கையில் வேட்டியும் சட்டையும் அணிந்து கொண்டார்.

வெளியே செல்லும்போது வேட்டி. மல் ஜிப்பா என்ற அலங்காரம். முக்கியமான இடங்களுக்குப் போக ஜரிகை வேட்டி மீது சில்க் ஜிப்பாவை அணிந்து கொண்டார்.

அவரிடம் தற்சமயம் உபயோகத்திற்கு இருந்தது, இரண்டே சில்க் ஜிப்பாதான், ஒன்றுமிகவும் பழையதாகிக் கழுத்தோரம் நூல் பிரிந்துகொண்டு அசிங்கமாகத்

தெரிந்தது. இன்னொன்று...பரவாயில்லை என்றளவுக்கு பழையதாகிக் கொண்டு வந்தது.

பெட்டியின் அடியில்...இஸ்திரி மடிப்பில் பத்திரமாகக் கிடந்த அந்த இரண்டாவது ஜிப்பாவை எடுத்து அணிந்து கொண்டார்.

சலவையினின்று எடுத்த வேட்டி, சில்க் ஜிப்பா, இடது தோளில் பெரியதொரு துண்டு...என்ற அலங்காரத்தில் எட்டு மணி அளவிலேயே வழியில் இரண்டு ஆப்பிளை வாங்கிக்கொண்டு வேகமாகக் கிளம்பினார்.

ஆட்டோவினின்று இறங்கியவர் சலாம் அடித்த கூர்க்காவுக்குத் தலையை அசைத்துவிட்டு உற்சாகத்துடன் உள்ளே புகுந்தார். வரவேற்பறை வாயிற்படியருகில் விமலா நின்று கொண்டிருந்தாள்.

"வாங்கோ...சரியான நேரத்துக்குத்தான் வந்திருக்கீங்க...உட்காருங்க" என்ற புன்முறுவல் பூத்தாள். "இந்தாங்க..." என்று தான் கொண்டு வந்த ஆப்பிள் பழங்களை அவள் கரத்தில் வைத்தார்.

பிரிண்ட்டட் சில்க் புடவை யொன்றில் கொடியாக நின்ற அவள் முகத்திலே இன்னமும் கொஞ்சம் இளமை ஒட்டிக் கொண்டிருப்பதை வியப்புடன் பார்த்தபடி சோபாவில் சாய்ந்து கொண்டார்.

அவர் வரவிற்காக அலங்கரிக்கப்பட்டது போல வரவேற்பறையிலிருந்த மேஜைமேல் பளபளத்த ஜெய்பூர் பித்தளை பூச்சாடியில் தோட்டத்து ரோஜாவும், சாமந்தியும் அலங்காரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவரது பார்வை அதன் மேல் படிவதைக் கண்ட விமலா சிரித்துக்கொண்டே சொன்னாள்: "வீட்டுக்கு நீங்க விருந்து சாப்பிட வரப் போறீங்கன்னதும் ஜோதி உற்சாகத்தோட பூச்சாடியை ஜோடித்திருக்கிறாள். சமையல் கூட அவளுடையதுதான். நன்னாவே சமைப்பாள்.



வரவேற்பறையின் அலங்காரம் அவரை பிரமிக்கச் செய்தது. உள்ளேயிருந்து பூஜையறையில் கொளுத்தி வைக்கப்பட்டிருந்த ஊதுவத்தியின் நறுமணம் முகத்தில் சுகமாக மோதியது.

"கல்யாண வீடு போலக் களையா இருக்கு" என்று முறுவலித்தார்.

"அப்படித்தான் இருக்கணும்னு நான்விரும்பறேன்."

சோபாவில் அவர் இன்னும் கொஞ்சம் அவள் அருகே நகர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

"என்னைப் பற்றி நான் கொஞ்சம் விவரமாப் பேச விரும்பறேன், மறுப்பு இல்லையே."

"பேஷா...பேசலாமே..." சிரித்தாள் அவள்.

"ரொம்ப நாளா நான் உங்ககிட்டே ஒரு உண்மையை ஒத்துக்கொண்டு மன்னிப்பு கேட்கணும்னு துடிச்சுக் கொண்டிருந்தேன். சந்தர்ப்பம் கிடைக்கலை. அதைச் சொல்லி மன்னிப்புக் கேட்காவிட்டால் எனக்கு மனச்சாந்தியே கிடைக்காது என்பது உண்மை."

"சொல்லுங்க கேட்கத் தயாரா இருக்கேன்."

"நம்ம கல்யாணம் நின்றுபோக ஒரு மொட்டைக் கடிதம் காரணமா இருந்ததில்லையா?"

தலையை அசைத்தாள் விமலா.

"அந்தக் கடிதத்தை என் தந்தை தமது நண்பர் ஒருவரை விட்டு எழுதச் சொல்லியிருந்தாராம். பின்னால் என்னிடம் உண்மையைச் சொல்லிவிட்டார். எப்படியாவது கல்யாணத்தை நிறுத்தி, எனக்கு வேறு ஒரு தெரிந்த இடத்தில் பெண் பார்த்து முடிக்கணும்னு திட்டம்."

மெளனமாகத் தலை அசைத்தாள் விமலா மீண்டும்.

"என் தந்தையின் குரூரமான செய்கை என் வாழ்க்கையை எப்படி நாசப்படுத்தி விட்டது என்பதை நான் விவரமாச் சொன்னால்தான் புரியும். பெற்றவங்களின் பாவம் பிள்ளைகளின் தலையில் என்பாங்க. அது என் விஷயத்தில் உண்மையாகிவிட்டது. பெரிய இடத்திலிருந்துதான் பெண் எடுத்தார்கள் என் பெற்றோர்கள். ஆனால் நான் நிம்மதியாக, ஆனந்தமாக வாழ்ந்தேன்னு சொல்ல முடியாது. எனக்கும் என் மனைவிக்கும் இடையே மனதளவிலே ஒற்றுமையே சிறிதும் கிடையாது" என்று ஆரம்பித்துத் தமது வாழ்க்கைச் சரித்திரத்தை ஒரு வழியாக கூறி முடித்தார்.

"கேட்க ரொம்பப் பரிதாபமாக இருக்கு." சூள் கொட்டினாள் விமலா.

மேஜை மேலிருந்ததொரு பித்தானை அமுக்கியதும், பூவேலை செய்த அழகான நீலவண்ண சல்வார் கம்மீஸ் அலங்காரத்தில் ஒரு மரத்தட்டில் இரண்டு கிறிஸ்ட்டல் கண்ணாடி டம்ளர்களில் குளிர்பானத்தை எடுத்துக் கொண்டு முழுவதும் புன்னகையாக வந்தாள் ஜோதி.

"தாகத்துக்கு முதலில் இதைச் சாப்பிடுங்க. கொஞ்ச நேரத்தில் இலை போட்டுடறேன்" என்றாள்.

"இலையிலே சாப்பாடா? பலே பலே..." என்று உற்சாகமாகச் சிரித்தபடி குளிர் பானத்தைக் கையில் எடுத்துக் கொண்டார்.

அவரது துயரமான வாழ்க்கையைப் பற்றிக் கேட்டு மனம் நெகிழ்ந்துவிட்டாள் போலிருக்கிறது விமலா. அதுதான் மெளனமாகத் தரையைப் பார்த்த வண்ணம் இருக்கிறாள். என்ன இருந்தாலும் ஒரு காலத்தில் அவரை அவள் நேசித்தவள் அல்லவா! நீறுபூத்த நெருப்பாக உள்ளத்தின் மூலையில் அந்தப் பழைய காதல் இருக்காமல் போகுமா? இரும்பு சூடாக இருக்கும்



போதே சம்மட்டியால் தாக்கி விடவேண்டும். இன்றே சொல்ல வந்ததைச் சொல்லி அவள் சம்மதத்தைக் கேட்டு முடித்திடவேண்டும். சூழ்நிலையும் மனதிற்கு ரம்யமாக இருக்கிறது. விமலாவுக்கு மனதில் வெறுப்பு துளி இருந்தாலும் இந்தப் பலத்த வரவேற்பு கொடுத்திருப்பாளா?

என்ன இருந்தாலும் அவள் பெண், வெளிப்படையாகச் சொல்லத் தெரியாது. சூசகமாக ஒரு கோடு காட்ட, இப்படி ஒரு விருந்து கொடுத்து அவரைக் கௌரவிக்கிறாள். இது கூடவா அவருக்குப் புரியாது?

சாப்பாடு மிகவும் பிரமாதமாகத்தான் இருந்தது. வடை—பாயசம் இரண்டையும் அவர் அளவுக்கு மீறி ஒரு கை பார்த்துவிட்டார். "இன்னும் கொஞ்சம் போட்டுக்கோங்கோ" என்று விமலாவின் உபசரிப்பு பாயசத்திற்கு மேல் அவருக்கு இனித்தது.

மனதார தமது துன்பங்களைச் சொல்லிவிட்டு, வயிறாரச் சாப்பிட்டுவிட்டு, வெற்றிலை பாக்குத் தட்டு முன் வரவேற்பறையில் உட்கார்ந்து கொண்டபோது அவருக்குத் துணிவும் உற்சாகமும் தாங்க முடியவில்லை.

ஜோதி பின்கட்டில் வேலையாக இருந்தாள். அவரும், அவளும் தனியே வரவேற்பறையில் அமர்ந்திருந்தனர்.

"விமலா, நான் முன்போல ஒருமையிலேயே உரிமையோட பேச விரும்பறேன். உனக்கு நான் செய்த துரோகத்துக்கு ஈடு செய்ய ரொம்பவே ஆசைப்படறேன். நான் ரொம்ப பரந்த நோக்கமுடையவன். அதனாலே அழுத்தமாகவே சொல்லிடறேன். உன்னை இப்போது, இந்த நிலையில் நான் கல்யாணம் செய்து கொண்டு உனக்கிழைத்த துயரத்தைத் துடைக்கத் தயாராக இருக்கிறேன். இந்த வயதில், தனியாகத் தவிக்கும் உனக்கு ஒரு ஆண்பிள்ளையின் துணை தேவையாக இருக்கும். அதனால் உனக்கு உன் ஆயுள்வரை நல்லதொரு துணை

வனாக, நண்பனாக இருக்க, நான் மனம் உவந்து உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பறேன். உன் சம்மதம் கிடைச்சுட்டதும் நாம் சீக்கிரமாகப் பதிவுத் திருமணம் செய்து கொள்ளலாம்.''

சொல்லி முடிப்பதற்குள் நெஞ்சு படபடத்து வியர்த்து விறுவிறுத்துப் போனார் அவர்.

விமலா அவர் பக்கம் திரும்பி, லேசாகச் சிரித்தாள்.

''என்னிடம் பேச வேணும் என்று துடியாக நீங்க துடித்தது இதற்குத்தானா?''

''இது நம் வாழ்க்கையின் பெரிய பிரச்னை யில்லையா?''

''என் வாழ்க்கையில் எந்தவிதமான பிரச்னையும் கிடையாது. உங்களைப் போல எனக்குத் துயரமான வாழ்க்கை அமையவில்லை. என் கணவர் ரொம்ப நல்லவர். நாங்க மனமொத்த தம்பதிகளாக சுகமாகவே வாழ்ந்தோம். அவர் மறைஞ்சு போயிட்டார். அதனாலே எந்தக் குறையும் வச்சுட்டுப் போகலை. ஏகப்பட்ட சொத்து சுகங்களை வச்சுட்டுதான் போயிருக்கார்.''

''கால் ஊனமான, படிப்பு அதிகமில்லாத ஒருத் தனுக்கு உன்னை உடனடியாகக் கட்டிக் கொடுத்தாங் கன்னு நான் கேள்விப்பட்டபோது துடிச்சுப் போனேன் விமலா.''

''கால் ஊனமானவர்தான் அவர். ஆனால் மனம் ஊனமானவர் இல்லே. காதலித்துக் கைவிடப்பட்ட பெண் என்று சபையிலே நான் தலை குனிஞ்சு நின்னப்போ, துணிவோட என்னைக் கல்யாணம் செய்து கொண்டு கௌரவிக்க முன்வந்தார்.

படிப்பு? கல்லூரிப் படிகளில் ஏறினவர் இல்லே!

ஆனால் பண்பானவர். அறிவு ஜீவி.



படிப்பு, அந்தஸ்து, அழகு இவை இல்லாவிட்டாலும் ரொம்ப அன்பான மனிதர். நம்பிக்கைக்கு உகந்தவர். கல்யாண மண்டபம் வரைக்கும் வந்து விட்டுத் தாயார் தலைப்பைப் பிடித்துக் கொண்டு ஓடும் கோழையல்ல!

ஒரு அன்பான கணவரோட வாழ்ந்துட்டு பிறகு நான் ஏன் போய் ஒரு சாக்கடையில் சறுக்கி விழணும்? எதுக்காக...

என்னைக் கல்யாணம் செய்துக்கோன்னு கேட்க உங்களுக்கு ரொம்பவே துணிச்சல்தான்.

யாரோ ஒருவன் சம்பாதிச்சு வச்சுட்டுப் போயிருக்கிற சொத்தை சாப்பிட்டுக் கொண்டு சுகமாக இருக்க லாம்ன்னு நினைச்சு பழைய கதையை நினைச்சுப் புலம்பிக் கொண்டு வர உங்களுக்கு வெட்கமாயில்லை?

உலகத்திலேயே உங்களைத் தவிர ஆண்பிள்ளையே இல்லாது போய்விட்ட போதும் மானமுள்ள எந்தப் பெண்ணும் உங்களைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாள் தெரிஞ்சுக்கோங்க.

கணபதி முன்வந்து அன்னிக்கு என்னைக் கல்யாணம் செய்துக்காது போய் நான் வாழ்க்கையில் அவமானப் பட்டுத் தனியாக நின்னுவிட்டிருந்தாலும் உங்கள் பக்கம் மீண்டும் திரும்பிப் பார்த்திருக்க மாட்டேன்.

உங்களைப் போலப் படிச்ச பெரிய மனிதனுக்கு இது மாதிரியான ஆல்ப ஆசை வந்திருக்கக் கூடாது. அதை இப்படி அசட்டுத்தனமா வெளியே சொல்லியிருக்கவும் கூடாது.

அவமானத்திலிருந்து என்னைக் காத்து—எனக்கு வாழ்வு தந்து கௌரவித்த அந்த நல்ல மனிதரின் ஞாபகமாக நான் என் வாழ்நாளை நல்லபடியா கழிக்க விரும்பறேன். உங்களை மீண்டும் சந்திக்கவோ, பழைய குப்பைகளை நீங்க கிளறுவதைக் கேட்கவோ நான் விரும்பலை. நன்றாகத் தெரிஞ்சுக்கோங்க.

'வடை பாயசத்தோட சாப்பாடு போட்டியே எதுக்கு?"என்னு கேட்பீங்க. நியாயந்தான்.

நடந்து போனதுக்கு என்னிடம் மன்னிப்பு கேட்கணும்னு உங்க மனசிலே ரொம்ப நாளா ஒரு உறுத்தல் இருந்து கொண்டேயிருந்ததுன்னு சொன்னீங்களே. அது போல என் மனதின் ஒரு மூலையிலே ஒரு ஆசை இருந்தது.

கல்யாண மண்டபத்திலே கண்ணீரும் கம்பலையுமா நிறுத்திட்டுப் போனாலும் எனக்கு அதே முகூர்த்தத்திலே கல்யாணமாகி நானும் சுகப்பட்டுட்டேன்னு சொல்லிக் காட்டணும்னு ஒரு ஆசை. அன்னிக்கு உங்க அம்மா பின்னாடி ஓடாம இருந்திருந்தா எங்களது கல்யாணச் சாப்பாட்டை நீங்க சாப்பிட்டிருப்பீங்க இல்லையா?

அந்த நிறைவுக்காக இன்னிக்கு உங்களுக்கு எங்களது கல்யாணச் சாப்பாடாக விருந்து.

மிஸ்டர் சிவநேசன்! இனிமேலே இந்த வீட்டுக்குள்ள வந்தீங்கன்னா...'' உறுத்துப் பார்த்தாள்.

பத்திரகாளி போல் அப்பப்பா...என்ன பார்வை அது...? மிரண்டு போனார் சிவநேசன். உடல் முழுவதும் வியர்வை ஆறாகப் பெருகியது. நெஞ்சு தீவிரமாகத் துடித்தது. வாயும் நாக்கும் காய்ந்து போக... மெல்ல எழுந்தார்.

''ஜோதி!...'' உரக்கக் கூவினாள் விமலா.

''என்னம்மா!'' என்று ஓடிவந்தாள் மகள்.

''கதவைத் திறந்து வை, உள்ளே ரொம்பப் புழுக்கமா இருக்கு'' என்றாள்.

வாயிற் கதவை ஜோதி திறந்து வைத்தாள்.

''வெளியே போ'' என்று சொல்லாமல் சொன்னதை அவர் புரிந்து கொண்டு விட்டார்.

வசந்த கால மேகம் போல அவரது வாழ்க்கையில் தென்றல் வீசப்போகிறது என்ற கனவுடன் வந்தவருக்கு...

கோடையிடி போன்ற பயங்கரமான அவமானம்!

பழிக்குப் பழி வாங்கிக் கொண்டு விட்டாள்.

'விமலா ரொம்பவே கெட்டிக்காரி...' என்று எண்ணியபடி திரும்பிப் பாராது அவர் வெளிநடப்புச் செய்தார்.

—முற்றும்—

# அசோக மரம் பூக்கவில்லை

## 1

வீடு திரும்புவதற்குள் மாலை நேரத்து இருள் நன்கு கவியத் துவங்கி விட்டிருந்தது. மழைக்காலம் மாறி குளிர் விழுகிற மாதம். ஸவிதா, அவசரமாகப் பஸ்ஸை விட்டிறங்கி, பிரதான சாலையைக் கடந்தாள். அலுவலகத்திலிருந்து ஒரு மணி நேர பர்மிஷன் வாங்கி, அதே வேகத்தில் டாக்டர் ரேவதியின் கிளினிக் போய் திரும்புவதற்குள் நேரமாகி விட்டது. வீட்டில் மாமியார் கிருஷ்ண வேணி அம்மாளின் முகம் கடுகடுவென்று இருக்கும்.

ஸவிதா பெருமூச்சு விட்டாள். மாமியாரைக் குறை கூறிப் பயனில்லை. பெரிய ஓரகத்தி நீலா, சமீபத்தில்தான் இரண்டாவது குழந்தையுடன், புக்ககம் திரும்பி இருந்தாள், முதல் குழந்தைக்கு மூன்று வயது கூட நிறைய வில்லை, அருகிலிருந்த தனியார் நர்ஸரிப் பள்ளிக்கு அவனை அனுப்ப வேண்டும். கைக்குழந்தை, வீட்டு வேலை என்று சகல பொறுப்புகளையும் சுமக்க முடியாமல் தத்தளிப்பாள்.

வீட்டின் கடைக்குட்டி-செல்லப்பெண் பானுமதி, கல்லூரியில் எம். ஏ. படிப்பவள். பரதநாட்டியம், சங்கீதம் என்று அதிகப்படி சகலகலா வல்லியாக மாற முயன்று கொண்டு, வெளியே திரியும் நாகரிகயுவதி. வீட்டில் இருக்கும் சிறிது நேரம் கூட, விரல் நகத்தைக் கடித்தபடி, "மில்ஸ் அண்ட் பூன்ஸ்" நாவல்களைக் கொரிக்கும் பெண். அவள் எது பேசினாலும், மேதாவித்தனமான

'வடை பாயசத்தோட சாப்பாடு போட்டியே எதுக்கு?'ன்னு கேட்பீங்க. நியாயந்தான்.

நடந்து போனதுக்கு என்னிடம் மன்னிப்பு கேட்கணும்னு உங்க மனசிலே ரொம்ப நாளா ஒரு உறுத்தல் இருந்து கொண்டேயிருந்ததுன்னு சொன்னீங்களே. அது போல என் மனதின் ஒரு மூலையிலே ஒரு ஆசை இருந்தது.

கல்யாண மண்டபத்திலே கண்ணீரும் கம்பலையுமா நிறுத்திட்டுப் போனாலும் எனக்கு அதே முகூர்த்தத்திலே கல்யாணமாகி நானும் சுகப்பட்டுட்டேன்னு சொல்லிக் காட்டணும்னு ஒரு ஆசை. அன்னிக்கு உங்க அம்மா பின்னாடி ஓடாம இருந்திருந்தா எங்களது கல்யாணச் சாப்பாட்டை நீங்க சாப்பிட்டிருப்பீங்க இல்லையா?

அந்த நிறைவுக்காக இன்னிக்கு உங்களுக்கு எங்களது கல்யாணச் சாப்பாடாக விருந்து.

மிஸ்டர் சிவநேசன்! இனிமேலே இந்த வீட்டுக்குள்ள வந்தீங்கன்னா...'' உறுத்துப் பார்த்தாள்.

பத்திரகாளி போல் அப்பப்பா...என்ன பார்வை அது...? மிரண்டு போனார் சிவநேசன். உடல் முழுவதும் வியர்வை ஆறாகப் பெருகியது. நெஞ்சு தீவிரமாகத் துடித்தது. வாயும் நாக்கும் காய்ந்து போக... மெல்ல எழுந்தார்.

''ஜோதி!...'' உரக்கக் கூவினாள் விமலா.

''என்னம்மா!'' என்று ஓடிவந்தாள் மகள்.

''கதவைத் திறந்து வை, உள்ளே ரொம்பப் புழுக்கமா இருக்கு'' என்றாள்.

வாயிற் கதவை ஜோதி திறந்து வைத்தாள்.

''வெளியே போ'' என்று சொல்லாமல் சொன்னதை அவர் புரிந்து கொண்டு விட்டார்.

வசந்த கால மேகம் போல அவரது வாழ்க்கையில் தென்றல் வீசப்போகிறது என்ற கனவுடன் வந்தவருக்கு...

கோடையிடி போன்ற பயங்கரமான அவமானம்!

பழிக்குப் பழி வாங்கிக் கொண்டு விட்டாள்.

'விமலா ரொம்பவே கெட்டிக்காரி...' என்று எண்ணியபடி, திரும்பிப் பாராது அவர் வெளிநடப்புச் செய்தார்.

—முற்றும்—

# அசோக மரம் பூக்கவில்லை

## 1

வீடு திரும்புவதற்குள் மாலை நேரத்து இருள் நன்கு கவியத் துவங்கி விட்டிருந்தது. மழைக்காலம் மாறி குளிர் விழுகிற மாதம். ஸவிதா அவசரமாகப் பஸ்ஸை விட்டிறங்கி, பிரதான சாலையைக் கடந்தாள். அலுவலகத்திலிருந்து ஒரு மணி நேர பர்மிஷன் வாங்கி, அதே வேகத்தில் டாக்டர் ரேவதியின் கிளினிக் போய் திரும்புவதற்குள் நேரமாகி விட்டது. வீட்டில் மாமியார் கிருஷ்ண வேணி அம்மாளின் முகம் கடுகடுவென்று இருக்கும்.

ஸவிதா பெருமூச்சு விட்டாள். மாமியாரைக் குறை கூறிப் பயனில்லை. பெரிய ஓரகத்தி நீலா, சமீபத்தில்தான் இரண்டாவது குழந்தையுடன், புக்ககம் திரும்பி இருந்தாள், முதல் குழந்தைக்கு மூன்று வயது கூட நிறைய வில்லை, அருகிலிருந்த தனியார் நர்ஸரிப் பள்ளிக்கு அவனை அனுப்ப வேண்டும். கைக்குழந்தை, வீட்டு வேலை என்று சகல பொறுப்புகளையும் சுமக்க முடியாமல் தத்தளிப்பாள்.

வீட்டின் கடைக்குட்டி-செல்லப்பெண் பானுமதி, கல்லூரியில் எம். ஏ. படிப்பவள். பரதநாட்டியம், சங்கீதம் என்று அதிகப்படி சகலகலா வல்லியாக மாற முயன்று கொண்டு, வெளியே திரியும் நாகரிகயுவதி. வீட்டில் இருக்கும் சிறிது நேரம் கூட, விரல் நகத்தைக் கடித்தபடி 'மில்ஸ் அண்ட் பூன்ஸ்' நாவல்களைக் கொறிக்கும் பெண். அவள் எது பேசினாலும், மேதாவித்தனமான

பேச்சு என்று வியந்து பாராட்டுப் பெறுபவள். துரும்பைக் கூட விரலால் தூக்கிப்போட நேரம் இல்லை என்றுபேசும் கர்வம். அவளால் வீட்டிற்கு எந்தவிதமான உபயோகமும் இல்லை.

மந்தைவெளி பஸ் நிலையத்தைத் தாண்டி, அவசரமாக அந்தப் புதிய குடியிருப்புப் பகுதிக்குள் நுழைந்தாள் ஸவிதா. பத்துப் பதினைந்து ஃப்ளாட்டுகள் கொண்ட குடியிருப்புப் பகுதி. கணவர் மறைவிற்குப் பிறகு, மிச்சம் மிகுதி இருந்தவற்றைப் போட்டு, முதல் மாடிப் பகுதியை வாங்கி விட்டிருந்தாள் கிருஷ்ணவேணி அம்மாள். மூத்தவன் தாமோதரன், இளையவன் ஆனந்தன் உட்பட அவர்கள் குடும்பம் பெரிதுதான்.

தெருமுனைக்கு வந்ததும், வேகத்தைக் குறைத்துக் கொண்டாள். அவர்களது படுக்கை அறை ஜன்னல் வழியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த "மணி ப்ளாண்ட்" அவளை வரவேற்பது போல காற்றினூடே தலையசைத்துக் கொண்டிருந்தது.

'நீதான் என்னை வரவேற்க வேண்டும். அல்லாமல் இந்த வீட்டில், வேறு யார் என்னை வரவேற்கப் போகிறார்கள்?' துயரம் அவள் நெஞ்சைக் கவ்வியது.

மெல்லப் படியேறி, ஓசைப்படாமல் வாயிற் கதவின் முன் நின்றாள். கதவு மூடி இருந்தது. உள்ளிருந்து வெங்காய பஜ்ஜியின் மணம், கடலை எண்ணையுடன் மூக்கைத் துளைத்தது. அழைப்பு மணியை, அழுத்தப் போனவள் சட்டெனக் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்.

"என்ன, உன் சின்னராணியம்மா, இன்னமும் வீடு திரும்பலே? பாங்க்ல மூணுமணி வரைதானே வேலை?" நாத்தி பானுமதியின் அட்டகாசமான குரல் கேட்டது.

"அப்படியே டாக்டர் ரேவதிகிட்ட போய் கேட்டுட்டு வரேன்னு சொன்னா. ஒரு வேளை நேரமாகலாம்" மாமியார் சூள் கொட்டினாள்.



"ஆமா ரெண்டு வருஷமா டாக்டர் ரேவதியை முழுங்க, முழுங்க பார்த்துக்கிட்டுத்தான் வராங்க. என்ன ஆச்சு?" பானுமதி குத்தினாள்.

"அண்ணிக்கு ரெண்டாவது குழந்தை பிறந்துதே!" கரகரத்த குரலில் அண்ணன் தாமோதரன் 'ஜோக்' அடிக்கவும் ஒரே சிரிப்பு!

"ராமேஸ்வரத்திலே போய் ஒரு புருஷன் பெண்டாட்டி குளிச்சாங்களாம். கூடப்போன ஜோடிக்குக் குழந்தை பிறந்திச்சாம்னு கதை சொல்வாங்க."

கிருஷ்ணவேணி முடிக்கு முன், "இங்கே நிசமாவே நடந்திருக்குது!" என்று ஆர்ப்பரித்தாள் பானுமதி.

"ஏன் பானு, நீ சும்மா இருக்கமாட்டே. சும்மா ஏதாச்சும் "கமெண்ட்' அடிச்சு எங்களைச் சிரிக்க வக்கறே!" என்று அண்ணி நீலா பெருமை பொங்கக் கூறுவது கேட்டது.

"கல்யாணம் ஆகி, ஏதோ ரெண்டு வருஷம் போறது இந்தக் காலத்தில சகஜம்னு விடலாம். வருஷம் நாலாகப் போவுது. அவங்க கல்யாணம் ஆன வருஷம்தானே, பெரிய பேரனை உண்டாயிருந்தே. இப்ப அடுத்து, பேத்தி வந்து குதிச்சாச்சே!" மாமியாரின் சுடு சொற்களைக் கேட்டு ஸவிதா துடித்துப் போனாள்.

எதிரே இருந்த பங்களாவின் வாயிற்புரத்துச் சுவர் மீது ஒரு சிவப்பு முக்கோணம் பளீரிட்டது. 'அதிகம் பெறாதீர் அவதிப்படாதீர்!' இங்கே குழந்தை பெறாமலே அவதிப்படுகிறவர்களும் உண்டு என்பதை ஏன் மறந்து போனார்கள்? அதை ஒரு மாபெருங் குற்றமாகக் கருதுபவர்களும் உண்டு என்பதை ஏன் மறந்து போனார்கள்?

ஸவிதாவின் கண்களில் நீர் முட்டியது. பெண் என்று வரும் போது, அவளது படிப்பு, உழைப்பு யாவற்றிற்கும்

மதிப்புக் கொடுப்பதில்லை. அவளது பெண் பிறவிக்கு ஒரு சில குறிப்பிட்ட தகுதிகள் என்று வரையறுத்துக் கூறப்பட்டிருந்த தகுதிகளைத்தான் அவர்கள் பெரிதாக நினைக்கிறார்கள். குடும்பம், சமையல் சாப்பாடு, பிள்ளைப்பேறு என்ற வட்டத்திற்குள் அவளை அழுத்திப் பிடித்துப் போட்டு விட ஆத்திரப்படுகிறார்கள்.

ஸவிதாவின் பட்டப்படிப்பு, அவளது திறமைகள், அழகு, எல்லாமே பின்னுக்குத் தள்ளப்பட்டு இப்போது வெளியே தள்ளப்பட்ட குப்பையைப் போல... ஸவிதாவின் உடல் ஒருமுறை சிலிர்த்தது.காலையில், அவசரமாக அள்ளிப் போட்டுக் கொண்டு சாப்பாடு, கையில், டப்பாவில் திணித்துக் கொண்டு ஓடிய, இரண்டு சப்பாத்தியும், சப்ஜியும், அவளது பசிக்குப் போதவில்லை. பசி குடலை முறுக்கியது.

தனியார் வங்கியில், கணக்கராகப் பணியாற்றி, கணிசமாக அவள் கொண்டு வரும் சம்பளத்தை, மாமியார் பறிமுதல் செய்து விடுவாள்.

''கைச் செலவுக்குத்தானே பணம் வேணும்? அம்மா கிட்டே கேட்டு வாங்கிக்க.'' அவள் கணவன் ஆனந்தன் கண்டிப்பாகக் கூறிவிட்டிருந்தான்.

மூன்று படுக்கையறைகள் கொண்ட குடியிருப்புப் பகுதி. அவர்களுக்கு ஒரு படுக்கையறை, பெரியவனுக்கு ஒரு படுக்கையறை, தாயும் மகளுமாக ஒரு படுக்கையறை என்று வசதியாக இருக்க இடம். வேளா வேளைக்குச் சாப்பாடு. சம்பாதித்துப் போட மனைவி. அவனுக்கு, ஒரு தட்டெழுத்துக் கம்பெனியில், விற்பனைப் பகுதி மேலாளர் வேலை. வேறு என்ன வேண்டும் வாழ்க்கையில்? ஆனந்தன் ஆனந்தமாகவே இருந்தான்.

''ஆனந்தனுக்காவது கொஞ்சம் பொறுப்புத் தெரியணும். ஏதுடா இது, வீட்ல அம்மாக்காரி உடம்புக்கு முடியாதவ. அண்ணி கைக்குழந்தைக்காரி. வேலைக்கு



வீட்ல ஆள் இல்லே. கொஞ்சம், பெண்சாதிக்காரியை
சொல்லி, காலாகாலத்தில் வீட்டுக்கு வரச் சொல்லு
வோம். ஊஹூம். என்னால் ஏதாச்சும் உதவமுடியுதா?
ஒண்ணும் முடியலை'' அடுக்கடுக்காய் பெருமூச்சு விட்
டாள் மாமியார்.

''நீங்க என்ன செய்ய முடியும் அத்தே! ஏற்கெனவே
'பிரஷர்.' அடுப்புகிட்ட வந்தா மயக்கம் வந்திச்சின்னா...
கொஞ்சம் வெங்காய பஜ்ஜி சாப்பிடுங்க'' உரத்துப்
பேசினாள் அண்ணி நீலா.

''வீட்டில் ரெண்டுகுழந்தைகளையும் சமாளிச்சுகிட்டு
சமையலை பார்க்கறதுன்னா லேசா?''மாமியார் உபசார
மாகக் கூறிவிட்டு ''சரி! நீ சொல்றியேன்னு சாப்பிடு
கிறேன். ஒரு நாலு பஜ்ஜி கொண்டா, தேங்கா சட்னி
கொஞ்சம் கூடவே வச்சிடு, ஒரே எண்ணெய் பாரு''
என்றாள் மாமியார்.

''ஆமா பாவம் அம்மா! ஒரே தேங்காய் பாரு! உடம்
புக்கு ரொம்ப நல்லது. நல்லா சாப்பிட்டுப்பிட்டு,
ராத்திரி முழுசும் என்னைத் தூங்கவிடாம, நச்சரிப்
பாங்க'' பானுமதி கிண்டலாகக் கூற, சிரிப்பு அலை
பரவியது.

''போடி போக்கிரி! நீ ராத்திரி பன்னிரண்டு மணி
வரை, கதைப் புஸ்தகம் படிச்சிட்டிருக்கிறது, எத்த விதத்
தில சேத்தி?'' செல்லமாக மகளைக் கடிந்து கொண்டாள்
கிருஷ்ணவேணி.

ஸவிதா மரம் போல நின்றாள். காலை அலுவலகத்
திற்குப் புறப்படுமுன், சகல வேலைகளையும் செய்தது
அவள்தான் என்று ஒரு வாய் வார்த்தை எவரும் கூறாதது
அவள் மனத்தை என்னவோ செய்தது. அவளது வங்கி
நேரம் காலை எட்டரைமணி. அண்ணாசாலையிலுள்ள
அந்த வங்கிக்கு மந்தைவெளி பஸ் நிலையத்தில் ஏழே
முக்கால் அல்லது எட்டு மணி பஸ்ஸைப் பிடித்தாக
வேண்டும்.

அதிகாலையில் அண்ணி படுக்கையறையை விட்டு வெளியே வரமாட்டாள். அவள் பெரிய இடத்திலிருந்து சீரும் சிறப்புமாக வந்தவள். அத்துடன் அவளது கணவன் தாமோதரன், தனியார் நிறுவனத்தில் பெரிய அதிகாரியாகப் பணியாற்றுபவன். ஆனந்தனை விட அதிக சம்பளம். ஆபீஸ் கார் வசதிகள் எல்லாம் உண்டு. இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல, நீலாவிற்கு இரண்டு குழந்தைகள். தற்போது கைக்குழந்தைக்காரி. பச்சை உடம்பு. குளிர்காலத்து ஊதல் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது.

சாதாரண நாட்களிலேயே, நீலா அண்ணிக்குத் தொட்ட காரியம் தொலையாது. நிதானமாகத்தான் அவளால் வேலை செய்ய முடியும். இப்போது கைக் குழந்தை வேறு. அவளை எதிர்பாராமல், ஸவிதா அதிகாலையில் எழுந்து காப்பியைத் தயாரித்து யாவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். சமையலைக் கவனித்தாக வேண்டும்.

ஸவிதா நிமிர்ந்தாள். "என்னவோ காலையில சமைக்கறதா பேர் பண்ணிட்டு ஓடிடறாங்க சின்ன அண்ணி! இன்னிக்கி சமைச்ச பொடலைப் பொறியல், ஒரே உப்பு! வாயில வைக்க முடியலே" பானுமதியின் குற்றச்சாட்டு காதில் விழுந்தது.

"வேலையில கவனம் இருந்தால்தானே. என்னவோ கடனைத் தொலைக்கணும்னு ஒரு அவசரம். டமால், டமால்னு பாத்திரங்களைப் போட்டு உடைக்கறதும், நசுக்கறதும் சமையலா செய்யறா..." மாமியார் புலம்பினாள்.

"வெங்கலக் கடையில யானை புகுந்த மாதிரி!" பானுமதி 'ஓ'வெனச் சிரித்தாள்.

"உங்க சின்ன அண்ணி, யானையாட்டமாவா இருக்காங்க. ஆனாலும் நீ ரொம்ப மோசம்" தாமோதரன் கூடவே சிரிப்பது கேட்டது.



"யானை இல்லேன்னா, பூனை மாதிரி சாதுவாட்டம் இருக்காங்க. ஆனா... பெரிய ஆள். ரொம்ப அழுத்தம்!" பானுமதி அரட்டலாகக் கூறினாள்.

ஸவிதாவின் முகம் கோபத்தால் சிவந்தது. கல்யாணமான புதிதில், இதே பானுமதி அவளிடம் எத்தனை குழைந்திருக்கிறாள்!

"அண்ணி! உங்களோட அந்த சிவப்பு பனாரஸ் சேலையை, என் சிநேகிதி கல்யாணத்துக்குக் கட்டிக் கிட்டுப் போகட்டுமா?"

"அதுக்கென்ன, உன் உயரத்துக்கு நல்லா இருக்கும், கட்டிக்க" ஸவிதா உபசரித்தாள். பலதடவைகள் அண்ணியின், ஆபீஸ் சேலைகளில் கை வைத்திருக்கிறாள் பானுமதி. ஆனால், அவளிடம் உள்ள கெட்ட குணம், சேலைகளை உடுத்திவிட்டு மீண்டும் பழைய சுத்தமான நிலையில் தோய்த்து, இஸ்திரி போட்டுத் திருப்ப மாட்டாள். கசக்கி சுருட்டிக் கட்டிலின்மீது விட்டெறிந்துவிட்டுப் போவாள்.

ஒருமுறை அவளது பொக்கிஷம் போலக் காத்து வந்த மயில் கழுத்துப் பட்டுச் சேலையை, கரை ஓரத்தில் கிழித்துக் கொண்டு வந்து ஓசைப்படாமல் மடித்து வைத்திருந்தாள் பானுமதி.

ஸவிதா அதைத் துவைக்க எடுத்ததும் திடுக்கிட்டுப் போனாள். பானுமதியின் உயர்ந்த குதிகாலணி செருப்புக்களின் மீதுள்ள ஆணிகள் பட்டுக் கிழிந்திருக்க வேண்டும். சேலையை உடுத்தியதும், அது பின்பக்கம் தழையத் தழைய இருக்கவேண்டும் என்று பின்னங்காலால் மிதிப்பது பானுமதியின் வழக்கம் என்பதை அவள் விளங்கிக் கொண்டிருந்தாள்.

"ஏம்மா பானு! இந்த சேலை கிழிஞ்சிட்டிருக்கே?" ஸவிதா கேட்டதும் பானுமதி முகம் சிவந்து போனாள்.

''மக்கல் சேலையா இருந்திருக்கும்! எத்தனை நாள் பழசோ!'' பானுமதி முகத்தைக் கோணிக் கொண்டாள்.

''நீ எதுக்கு இந்த விவகாரத்துக்கெல்லாம் போறே? உங்கிட்ட இல்லாத சேலையா, டிரஸ்ஸா'' மாமியார் ஓங்கிக் கத்தினாள், அதன் பிறகு பானுமதியின் சுபாவமே மாறிப் போயிருந்தது.

ஸவிதா பலமுறை சமாதான முயற்சிகள் செய்து பார்த்தும் பயனற்றுப் போயின. ''உன் காலேஜ் பார்ட்டிக்கு, இந்த காதணியை போட்டுக்கிட்டுப் போயேன்... உன் தோழியோட பிறந்தநாள் விழாவுக்கு இந்த நைலக்ஸ் சேலையைத் தரட்டா?'' ஸ்விதா வேண்டி இருக்கிறாள்.

''ஆளைவிடுங்க! ஒரு வாட்டி பட்டதே போதும். ஏற்கெனவே, சேலை கிழிச்சேன்னு பேர் வச்சிட்டீங்க. இப்ப, நகையில இருக்கிற பவுனை எல்லாம் தங்க பஸ்பம் செய்து சாப்பிட்டேன்னு பழி சுமத்துவீங்க. எனக்கு வேண்டாம்'' பயந்தவளைப் போல அபிநயித்தாள் பானுமதி.

''ஆமா... உங்க நீலா அண்ணி மாதிரி பீரோ நிறைய சேலையும், உடம்பு நிறைய நகையும் கொண்டு வந்திட்டா பேச்சே வேறயா இருக்கும். இதுக்கே இந்தப் பாடு.'' மாமியார் குத்தினாள்.

''மாதாமாதம் சம்பளம் முழுவதையும் உங்க கையில கொட்டி, அழுகிறேனே. அதுமட்டும் கணக்கில்லையா? வட்டியில்லாத கடனா? அந்தப் பணத்தில் சேலையோ, நகையோ வாங்கிக் குவித்திருந்தால், எனக்கும் ரெண்டு பீரோ நிறைய சேலைகளும், உடம்பு முழுதும் நகைகளுமாகக் குவிந்திருக்குமே'' சுடச்சுடக் கேட்டுவிட வாய் துடிக்கும். ஆனால் வீட்டின் நிலைகருதி அவள் அடங்கிப் போவாள்.



''அம்மா பேரில, அம்மாவே வாங்கின ஃப்ளாட் இது. அவங்ககிட்ட பணத்தைக் குடுத்திடணும். இல்லாட்டி நம்மால தனியா குடித்தனம் செய்ய முடியாது. பெரியண்ணன் மாசாமாசம் வீட்டுச் செலவுக்குன்னு ஆயிரத்தைந்நூறு ரூபா குடுக்கிறான். என் சம்பளத்தில் குடுக்க முடியலை. அதனால உன் சம்பளத்தைக் குடு. மிச்சத்தை நிரவிப்போட்டு நானும் அண்ணனைப் போலக் குடுத்திடறேன். என் பாக்கி சம்பளம் பேங்க்ல போட்டு வக்கறேன்'' என்றான் ஆனந்தன்.

பணம் என்று வரும்போது, கணவன் பணம், மனைவி பணம் என்று பேதம் பிரிப்பது நியாயமா? யார் பணமாக இருந்தால் என்ன? ஒருவரது சம்பளத்தில் ஒரு துளியாவது சேமிப்பில் இருக்குமே என்ற திருப்தியில் தலையை ஆட்டினாள் ஸவிதா.

நாளாவட்டத்தில், அவளது போக்குவரத்துச் செலவிற்கே மாமியார் கையை எதிர்பார்க்க நேரிட்ட வெட்கக்கேட்டில் அவள், மனம் சுருங்கிப் போனாள்.

''சம்பளத்தைக் கையில குடுத்திடறதா பேரு! சாப்பாடு, கையில டிபன்னும் கொண்டு போய்ட்டு, கைச் செலவுக்குன்னும் கேட்டா என்ன அர்த்தம்?'' கிருஷ்ணவேணி கோபமாகக் கேட்டபோது, அவமானத்தால் அவள் முகம் சிவந்தாள்.

''பஸ்ஸுக்குத்தான் கேட்டேன் அத்தே!'' மென்று விழுங்கின ஸவிதாவை உறுத்துப் பார்த்துவிட்டு ஒரு இருபது ரூபாய்த் தாளை அவளிடம் விட்டெறிந்தாள் மாமியார்.

பிச்சைக்காசைப் பொறுக்குவது போல கூசிய கைகளால் [illegible] அதை எடுத்தவள் மனதில் ஆயிரம் எண்ணங்கள். '[illegible]க்கறேன்னு பேரு. உங்ககிட்ட அடிமையா கை [illegible] பணம் வாங்க வேண்டி இருக்கு. எனக்குப் புருஷன் [illegible]க்கறான்னு பேரு. ஒரு பைசா, என்னிஷ்டப்படி

செலவு செய்யக் குடுக்கறதில்லேன்னா என்ன அர்த்தம்?' அடிவயிற்றில் பொங்கிய கசப்பு, நாவில் வந்து சுருட்டிக் கொண்டது.

''நீங்களாச்சும் பணம் தந்து உதவக் கூடாதா? ஆபீஸ்ல, யாராவது கல்யாணம், கார்த்தின்னு, பரிசுக்கு 'லிஸ்ட்' போட்டுக்கிட்டு வந்துடறாங்க. ஒரு பத்து ரூபாய்கூடத் தர முடியாம என்னங்க இது?'' கணவனிடம் தனிமையில் முறையிட்டாள்.

''சரி! அம்மாவுக்குத் தெரியாம, ஒரு ஐம்பது ரூபா தரேன், வச்சுக்கோ'' ஆரம்பத்தில் சிறிது தயையுடன் தாராளமாக இருந்தான் ஆனந்தன்.

ஆனால் திடும் என ஒருநாள் அதிலும் மண்விழுந்தது. ''ஆபீஸ் போக வசதியா இருக்கும்னு ஒரு ஸ்கூட்டர் வாங்கப் போகிறேன்.''

''சந்தோஷம்! என்னையும் ஏத்திக் கொண்டுவிடுவீங்க இல்லியா?'' பரவசத்துடன் கேட்டாள் ஸவிதா.

''அதெப்படி? உன் ஆபீஸ் அண்ணாசாலையில். என் ஆபீஸ் மஹாபலிபுரம் போறவழி. சரிவராது.'' கணவனது கடுமை அவளை அடக்கி விட்டது.

''எதுக்குச்சொல்ல வந்தேன்னா, இனிமே கடுமையான 'பட்ஜெட்' நம்மளுது. ஏன்னா, என் சேமிப்பை எல்லாம் போட்டு வாங்கறேன். அதனால, உன் ஐம்பது ரூபாமுதல் வெட்டு!'' ஸவிதா முகம் சிறுத்துப் போனாள்.

பம்பரம் போலக் காலையில் எழுந்து அடுக்களைக்குள் புகுந்து வேலைகளை முடித்துவிட்டு, ஆபீஸிற்கு ஓடி அவள் என்ன சாதித்தாள்? எவரது பாராட்டுதலைப் பெற்றாள்? அதற்குமேல் அவளுக்கு ஒரு முத்திரை வேறு குத்துவதற்காக யாவரும் தயாராக நிற்பது போல ஒரு பிரமை அவளை வாட்டியது.



தாய்மை! இந்த அழகான வீட்டில் அது ஒன்றுதான் தேவை. அவளது குழந்தையையும் அவளைப் போலவே அநாதையாக நடத்துவார்கள். கேவலப்படுத்துவார்கள். டாக்டர் ரேவதி கூறியதை நினைத்ததும் அவளுக்குத் துயரம் பீரிட்டுக் கொண்டு வந்தது.

''டாக்டர் ரேவதி பதில் என்னன்னு தெரிஞ்சு கொள்ளணும்னு பாக்கறேன். என்னவோ, நம்ம ஆனந்துக்கும் ஒரு வாரிசு பிறந்துட்டா எங்கவலை விட்டுது' கிருஷ்ணவேணியம்மாள் அலுத்துக்கொண்டாள்.

'எனக்குத் தோணலைம்மா!' பானுமதி அட்டகாசமாகக் கூறினாள்.

'என்ன தோணலை?' அண்ணி நீலா ஆவலுடன் வினாவினாள்.

'நம்ம பானுவோட மூளையே குறுக்கதான் வேலை செய்யும். சொல்லு, சொல்லு' பெரியண்ணா அவசரப் படுத்தினான்.

'காளிதாஸரோட ரத்னாவளியில ஒரு சம்பவம் வரும்' தங்கை ஆரம்பித்தாள்.

'நீ சகலகலா வல்லின்னு தெரியும். சுருக்கமாச் சொல்லு' பெரியண்ணா ஆரம்பித்தார்.

'அசோக மரம் பூக்காம போயிட்டா அதை பூக்கச் செய்ய ஒரு வழி செய்வாங்களாம்! அழகான பெண்கள் தங்கள் பாதங்களிலே செம்பஞ்சுக்குழம்பைத் தடவிக் கிட்டு, அந்த மரத்தைச் சுத்திவந்து உதைப்பாங்களாம். அந்த அவமானம் தாங்காம அந்த மரம் பூத்துடுமாம்?'

''அதனால இப்ப என்ன செய்யறதாம்?' அண்ணி தூண்டினாள்.

'நான் என் பரதநாட்டியக் கால்லே செம்பஞ்சுக் குழம்பை, அதாவது 'அல்தா'வைத் தடவிக்கிட்டு சின்ன

அண்ணியை எட்டி உதைக்கிறேன். அப்பவாவது அவங்களுக்குக் குழந்தை பிறக்குமான்னு பாக்கலாம்.' பானுமதியின் கத்தியின் கூர்மையான பேச்சில், யாவரும் 'ஓ'வென இரைச்சலிட்டுச் சிரித்தார்கள்.

ஸவிதா 'ஓ'வென அழமுடியாமல் விம்மலானாள்.

'அந்த மரத்துக்கு இருக்கற வெட்கம்கூட இந்த மனுஷிக்கு இருக்குமோ?' மாமியாரின் கடுமையான விமரிசனம் அவளை உடைந்து போகச் செய்தது. ஆவேசமாக அழைப்பு மணியை அழுத்தினாள் ஸவிதா.

## 2

அன்று காலை எழுந்ததுமே ஸவிதாவிற்கு நேரம் பறந்து கொண்டிருந்தது. ஊரிலிருந்து நீலா அண்ணியின் பெற்றோர்கள் வரப் போகிறார்கள் என்ற கடிதம் வந்தது முதல் வீடே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

நீலாவின் பெற்றோர்கள், மதுரையிலிருந்து வரப் போகிறார்கள் என்றதுமே, கிருஷ்ணவேணி ஆர்ப்பாட்டமே செய்து விட்டாள்.

''வராதவங்க நம்ம வீட்டுக்கு வராங்க. அவங்களுக்கு ஒரு படுக்கையறையை ஒழிச்சுக் குடுத்திடணும்.'' படபடத்தாள். நீலா, தாமோதரன், குழந்தைகளுக்குத் தனி அறை தேவை. மேலும் வருவது அவளது பெற்றோர்களாயிற்றே! கிருஷ்ணவேணி எக்காரணம் கொண்டும் தனது சுக சௌகரியங்களைத் தியாகம் செய்யாத பிறவி. பானுமதியோ, தாய் எட்டடி என்றால் தான் பதினாறடி பாய்கிற குணசாலி. இருவரும் சுயநல வசதிகளையே பெரிதாக எண்ணுகிறவர்கள். அவர்களது வசதிக்கு ஏற்றவாறு ஆனந்தன் 'டூர்' புறப்பட்டு விட்டிருந்தான்.



''ஆனந்துதான் திரும்பிவர பத்துநாளாகுமே. அவங்க படுக்கை அறையை, சம்பந்திங்களுக்குக் குடுத்திட்டா போவுது.'' கிருஷ்ணவேணி அம்மாள் தீர்மானித்து விட்டிருந்தாள். அந்த வீட்டில் அவள் சொன்னால் சொன்னதுதான்.

''நாளைக்கு சஷ்டி. தலைமுழுகிட்டுத்தான் சமைக்கணும், நினைப்பிருக்கா?'' முதல் நாளிரவே, ஸவிதாவை அதட்டி இருந்தாள் மாமியார்.

''சஷ்டி விரதம் இருந்தா, நாக சாபம் தீரும். அது போனால்தான், நல்லபடியா குழந்தை பிறக்குமாம்'' ஒருமுறை மாமியார் சுருக்கென்றது நினைவிற்கு வந்தது.

காலையில் எழுந்ததுமே, அறையைச் சுத்தம் செய்து வைத்தாள் ஸவிதா. இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே ஆனந்தன், கம்பெனி விஷயமாக 'டூர்' புறப்பட்டுப் போயிருந்தான். "நீ அம்மா ரூம்ல படுத்துக்க. நான் வர ஒரு வாரத்துக்கு மேலாகும், புரியுதா?' மனைவியை எச்சரித்துவிட்டுப் புறப்பட்டான். அவள் எதுவுமே பேசும் நிலையில் இல்லை.

தனது, அன்றாடத் தேவைகளை எடுத்து ஒரு தோள் பைக்குள் போட்டுவைத்தாள். புதிய படுக்கை விரிப்புக்கள், தலையணை உறைகளை எடுத்துப் படுக்கையை மாற்றினாள். அன்றைய ஆபீஸ் உடைகளை மட்டும் தயாராக எடுத்து வைத்துக் கொண்டாள். குளித்து, சமையலறைக்குள் புகுந்தவளுக்கு அதற்குப் பிறகு நேரம் போனதே தெரியவில்லை.

'பாயஸம் காச்சணும், சேமியாவே செய்திடு. பச்சடிக்கும் ஆப்பிளைப் பொடியா நறுக்கிடு. உருளைக் கிழங்கைத்தானே பொறியல் செய்திருக்கே. கத்தரிக்காயை சாம்பார்ல போடாதே. சம்பந்தியம்மாளுக்குக் கத்தரிக்காய் அலர்ஜியாம்.' பொரிந்து கொட்டியபடி,

வாசலுக்கும் உள்ளுக்கும் நடை போட்டாள் கிருஷ்ண
வேணி.

வழக்கம்போல், நகத்தைக் கொரித்துக் கொண்டு
புத்தகத்தில் மூழ்கிக் கிடந்த பானுமதி சோம்பல் முறித்
தாள். நீலா அண்ணி, அண்ணன் குழந்தைகளுடன்
ஸ்டேஷனுக்குப் புறப்பட்டுப் போவதில் மும்முரமாக
இருந்தனர். மாமனார் விஜயத்தின் பொருட்டு, தாமோ
தரன் அன்று 'லீவு' போட்டிருந்தான்.

'மசமசன்னு, சமையல் அறையிலேயே வேலை
செஞ்சுகிட்டு நின்னுகிட்டிருக்காதே. நேரமாயிடும்.'
தாமோதரன் மனைவியை அன்புடன் கடிந்து
கொண்டான்.

ஸவிதாவிற்கு மனதினுள் சிறு எரிச்சல். காலை
வேளை அமர்க்களத்தில் ஒரு நாள்கூட சமையலறைப்
பக்கம் தலைகாட்டி அறியாதவள் நீலா. வீட்டு வேலை
முழுவதும் அவளே செய்வதுபோல, அவளது பெரிய
மைத்துனருமல்லவா நம்புகிறார்! அவள் முகத்தைத்
திருப்பிக் கொண்டாள்.' எல்லோரும் ஒரே குட்டையில்
ஊறிய மட்டைகள்; அவனவன் பெண்சாதி உடம்பைத்
தேய்த்துக் கொள்ளக்கூடாது. அவ்வளவே! நான்
மட்டும் விதி விலக்கு!'

ஸவிதா முகத்தில் வியர்வைத் துளிகள் பெருக்கெடுத்
தன. ஸ்நானம் செய்த ஈரக் கூந்தலை அப்படியே அள்ளி
முடித்ததில் தலைவலி மண்டையைப் பிளந்தது. போதாத
குறையாக, மாமியார் அவள் முதுகுப்புறம் நின்றபடி,
ஓடும் குதிரையை சாட்டையால் சொடுக்குவது போல்,
அதிகாரம் செய்து கொண்டிருந்தாள்.

ஸவிதாவிடம் ஒரு குணம். அவளிடம் சில பொறுப்புக்
களை ஒப்படைத்து விட்டால், அவளாகவே ஒழுங்காக
எல்லாவற்றையும் முடித்து விடுவாள். ஆனால் எவராவது



அவளது வேலைகளில் தலையிட்டு, 'இதை இப்படிச்
செய், அதை அப்படிச் செய்' என்று கூற ஆரம்பித்தால்,
தடுமாற்றம்தான். கையிலிருப்பவையெல்லாம் குழப்பம்
தான்.

'காப்பியை ஒட்டு மொத்தமா கலக்காதே. அவங்க
ஒவ்வொருத்தரா, தனித்தனியா காப்பிபோட்டு சாப்பிடு
றதுதான் பழக்கமாம்.'

ஸவிதா மவுனமாகத் தலையை ஆட்டினாள். பதில்
பேசினால், கிருஷ்ணவேணி எரிந்து விழுவாள். அன்று
அவளது வங்கியில் 'ஆடிட்' கெடுபிடி வேறு. வீடு திரும்ப
நேரமாகும் என்று சொன்னால் என்ன நடக்குமோ என்ற
கிலி. இதர நாட்களாக இருந்தால் அவள் 'சாயந்திரம்
வர நேரமாகும்' என்று கூறிவிட்டுப் புறப்படுவாள்.
ஆனால், அன்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு, அவளால்
எதுவுமே கூற இயலாமல் மனதினுள்ஒரு புழுக்கம்.

பானுமதி உரக்கக் குரல் கொடுத்தாள். எனக்குக்
காலேஜுக்கு நேரமாகுதும்மா.

'இதோ ஒரு நிமிஷம்' என்றபடி, சாப்பாடு மேஜை
மீது தட்டுகளை வைத்தாள் ஸவிதா. அவளும் ஒருவாய்
அள்ளிப் போட்டுக் கொண்டு கிளம்ப வேண்டும்.

'உப்பு, காரம் எல்லாம் சரியா இருக்கா, பாயசத்தில
சர்க்கரை கொஞ்சம் தூக்கலாவே இருக்கட்டும். ஏலக்
காய் பொடி செய்து போட்டியா? மணமே இல்லியே'
கிருஷ்ணவேணி தொண தொணத்தாள்.

"என்னம்மா. எனக்குப் பசி உயிர் போவுது. நீ
பாட்டுக்கு வளவளன்னு" மகள் எரிந்து விழுந்தபடி
சாப்பாடு மேஜையருகே 'தொப்'பென்று அமர்ந்தாள்.

கிருஷ்ணவேணி மகளை ஆதரவுடன் பார்த்தாள்.
"சாப்பிடும்மா. ஆனா இந்த 'டிரஸ்'லயா காலேஜ்
போகப்போறே?" என்று கேட்டாள்.

''ஏனாம்? இந்த 'மிடி' டிரஸ் இப்ப ஃபாஷன். இதுக்கு என்னவாம்.'' சீறினாள் மகள்.

''கொம்பேறி மூக்கனாட்டமா அந்தப் பொண்ணு ஒரு 'டிரஸ்ஸை' மாட்டிக்கிட்டு நிக்குது. நல்லா ஒரு சேலை கட்டக்கூடாது?'' என்று சம்பந்தி வீட்டம்மா கூறி விட்டால் என்ன செய்வது என்று உள்ளூர பயம் கிருஷ்ண வேணிக்கு. மகளிடம் உண்மையை விண்டு வைத்தால் அவள் பத்ரகாளியாகி விட மாட்டாளா?

''சரி! சரி! சாயங்காலம், நல்லா ஒரு சேலையை எடுத்துக்கட்டிக்க. உங்க அண்ணியோட அம்மா பாத்தா...'' அவள் முடிக்குமுன், மகளின் முகம் கோணியது. உதட்டைப் பிதுக்கி விட்டு, ''என்னைப் பொண்ணு பாக்க அவங்க வீட்ல பிள்ளை ஏதாச்சும் இருக்காமா?'' கேலி செய்தாள்.

தாயின் குரலில் கனிவு. 'அவங்களுக்கு அண்ணார் மகன் அமெரிக்காவில வேலை இருக்கான். அடுத்த மாசம் இந்திய வரானாம். அதுக்காகத்தான் சொன்னேன்.' ரகசியமாகக் கூறினாள்.

''வரட்டும்! அதுக்கு நான் என்ன ''ஷோகேஸ்'ல நிக்கற பொம்மையா? அலங்காரம் செய்கிட்டு நிக்கறத் துக்கு? இத பாருங்கம்மா. எனக்கு இப்ப கல்யாணமே வேண்டாம்.'' அழுத்தமாகக் கூறியபடி, தட்டில் பிரதி பலித்த தன் முகத்தை வெறித்தாள் பானுமதி.

ஸவிதா, தட்டில் சோற்றைப் பரிமாறி குழம்பை ஊற்றினாள். நெய்யை விடப் போனவளிடம், "ஐயையோ! கொழுப்பு சத்து வேணாம். உடம்பு ஊதிப் போகும். நான் 'டயட்'ல இருக்கேன்' என்றாள் உரக்க.

'நல்லா இருக்கு, வளர்ற பொண்ணு. டான்ஸ் வேற ஆடறே. உடம்பிலே சக்தி வேணாம்? சாப்பிடு.' தாயார் உரிமையுடன் அதட்டினாள்.



'ஊஹூம்! எனக்குக் கொழுப்பு சத்து வேணாம். சின்ன அண்ணிக்குத்தான் கொழுப்பு வேணுமாம். நெய் போட்டு சாப்பிடட்டும். சீண்டலுடன் தட்டில் இருந்த சோற்றைப் பிசைந்தாள் பானுமதி.

ஸவிதா நெஞ்சினுள் முள்ளைப் போல 'சுரீர்' வேதனை. 'கொழுப்பு, உன் உடம்பு நாக்கு எல்லாத்தி லேயும் ஏறி இருக்கு. உனக்கு நெய் தேவை இல்லைதான். ஆனா, ஓடா தேய்ந்து போற எனக்கு கொழுப்பு தேவை தான்' - சொல்லத் துடித்த நாக்கை சட்டென அடக்கிக் கொண்டாள். அப்படிப் பேச முடியாதபடி, அவளை அடக்கி விட்டுப் போயிருக்குறானே அவளது கணவன்!

ஸவிதா ஒரு விநாடி தட்டையே வெறித்தாள். பிறகு ஒரே அள்ளாக உணவை முடித்துக்கொண்டு எழுந்தாள். அண்ணியின் பெற்றோர்கள் வருவதற்குள், ஆபீஸிற்குக் கிளம்பி விட வேண்டும். வீட்டில் தங்கினால் ஆபத்து.

சாப்பிட்ட தட்டை மேஜைமீது வைத்துவிட்டுப் பானுமதி ஓடிச்சென்று கையைக் கழுவிக் கொண்டாள். சாப்பிடு முன் மட்டும் அல்ல. சாப்பிட்ட பின்பும் அவள் எச்சில் தட்டைத் தீண்டாதவள். ஸவிதா, தட்டுகளை எடுத்துச் சுத்தம் செய்துவிட்டு, மேஜையைத் துடைத்து வைத்தாள்.

ஆபீஸ் புறப்படுவதற்கு முன், காலையில் தயாரித்து வைத்திருந்த எலுமிச்சம் பழச்சோற்றையும், ஊறுகாயை யும் டப்பாவினுள் அடைத்தாள். பிளாஸ்டிக் பையினுள் அதை அடக்கம் செய்தாள். தயாராக வைத்திருந்த, நீல நிற ஆர்கண்டி வாயில் சேலையை மாற்றிக் கட்டிக் கொண்டு, கண்ணாடியில் ஒரு விநாடி அழகு பார்த்தாள்.

மாநிறம்தான் என்றாலும், நாகரீக ஒப்பனையில் அவள் அழகியாக விளங்கினாள். கழுத்து வரை புரண்ட கூந்தலை, 'கிளிப்' போட்டு ஒதுக்கி இருந்தாள். வட்ட மான பொட்டும், எல்லைக் கோடுகளான இரு வில்

புருவங்களும், அகன்ற கண்களுமாக அவள் பளிச்சென்று தான் விளங்கினாள். நீலா அண்ணியைப் போல வைர மூக்குத்தி மூக்கில் மின்னாவிட்டால் என்ன? நீண்ட கூர்மையான நாசி, அழகிய அளவான உதடுகள், கச்சித மான உடற்கட்டு, காதுகளிலும், கைகளிலும் பணக் காரர்களை பகட்டாகத் தெரியாவிட்டால் என்ன? காதில் சிறிய முத்துத்தோடும், கையில் வளையல், கழுத் தில் மெல்லிய சங்கிலியுமாக, அவள் கவர்ச்சியாகத்தான் இருந்தாள். இல்லாவிட்டால் கிருஷ்ணவேணியம்மாள் அவளை மருமகளாக அந்த வீட்டுப் படியேற விட்டிருப் பாளா?

## 3

ஸவிதா தன் தமையனை கருணை பொங்கும் இதயத்துடன் ஒருமுறை எண்ணிப் பார்த்தாள். தாய், தகப்பன் இல்லாத குடும்பம். ஸவிதாவின் தமக்கையை, இரண்டாந்தாரமாக, வாழ்க்கைப்படுத்தி, தனது ஒரு சுமையைக் குறைத்துக் கொண்டிருந்தார் அண்ணன். இரண்டு தம்பிகள் படிப்புக்கும், பிற்கால வாழ்விற்கும் அவனை அண்டி இருந்தனர். ஸவிதா, படிப்பில் கெட்டி. வகுப்பில் முதல். கல்லூரியில் தங்கப் பதக்கம் வாங்கின பெருமை அண்ணனுக்கு. 'நீ நல்லா படிச்சு வேலைக்குப் போம்மா. தன்னால ஒருத்தன் வந்து கொத்திக்கிட்டுப் போவான்' என்று பீற்றிக்கொண்டார்.

வங்கியில் வேலைக்குச் சேர்ந்தபோது உணர்ச்சி பொங்க ஸவிதா அண்ணனிடம் கூறினாள். 'அண்ணா! எங்களுக்காக நீங்க உழைச்சது போதும். இனிமே, அந்த ஜவுளிக்கடை கணக்கர் வேலையை விடுங்க. நான் சம்பாதிக்கிறேன்.'



'பைத்தியம். நீ சம்பாதிச்சு நான் சாப்பிடக் கூடாதும்மா. இந்த வேலை உனக்கு ஒரு ஊன்றுகோல். பொருளாதார சுதந்திரம். இதை எக்காரணம் கொண்டும் விட்டுடாதே. உன் புருஷன் சம்பாத்தியத்தில்தான் எல்லாம் வாங்கணும்னு நீ சதா கையேந்திகிட்டுக் கண்ணைக் கசக்கிக்கிட்டு நிக்க வேணாம். நீயே இஷ்டப் பட்டதை வாங்கிக்கலாம். தெரிஞ்சுக்க' அன்புடன் அறிவுரைகள் வழங்கினார் அவர்.

தெரிந்த உறவினர் மூலம், வீடு தேடி வந்த கிருஷ்ண வேணியின் உள்நோக்கம் அவளது அண்ணனுக்குத் தெரிந் திருக்க நியாயமில்லைதான். திருவல்லிக்கேணி சந்தின் ஒண்டுக் குடித்தனத்திற்குள் பெண் பார்க்க அந்தம்மாள் வந்தபோது அவர் கை, கால்கள் பதறின.

"உங்க பொண்ணை 'பாங்க்'லயே பாத்திட்டோம், எங்க சித்தப்பா மகன்தான் சொன்னார். உங்களுக்கு ரொம்ப சிநேகிதக்காரராம்.'

வலுவிலே வந்த ஸ்ரீதேவி போல கிருஷ்ணவேணி அம்மாள் அவர் கண்களுக்குத் தோன்றினாள். மந்தை வெளிப் பக்கம், பெரிய ஃபிளாட். பெரிய மகன் பதவி யில் இருக்கிறான். அவன் மனைவியும் பெரிய இடம். வேறு தொல்லை இல்லை. ஆனந்தும் பார்க்க லட்சண மாக இருந்தான். காதோர கிருதாவும், சுருள் கிராப்பும் நிறமுமாக பையன் அம்சமாக இருக்கிறான். அண்ணன் கிறங்கிப் போனார்.

'பெரியவன் எஞ்ஜினியருக்குப் படிச்சான். சின்னவ னுக்கு படிப்புல அத்தனை நாட்டம் விழலே. பட்டம் வாங்கறதுக்குள்ளற இந்த வேலை கிடைச்சிட்டது. சம்பாதிக்க ஆரம்பிச்சிட்டா, பிறகு எங்கே படிப்பை முடிக்கறது? உங்க தங்கச்சியையும் ஒருவார்த்தை கேட்டுக்கிடுங்க. பிறகு... நாள்பாத்து...' கிருஷ்ணவேணி முடித்துவிட்டாள்.

படிப்பு குறைவானால் என்ன? எளிமையான முறையில் கையைக் கடிக்காமல் திருநீர்மலையில் கல்யாணம். எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல், கையோடு ஸவிதாவைப் புக்ககத்திற்கு அழைத்துப் போய்விட்டார்கள். ஏதோ, நம்மால் முடிந்தவரை சீர் செய்து அனுப்பி வைத்தோம் என்ற திருப்தியில் அண்ணன் இருந்து விட்டார்.

கல்யாணம் ஆகிவிட்டது என்றதும் ஒரு பெண்ணின் கலி தீர்ந்துவிட்டதா? இல்லை. சில சமயங்களில் அவளது பலி அதன் பிறகுதான் ஆரம்பிக்கிறது! அவளைப் பொறுத்தவரையில் ஆனந்தன், சுயநலம் மிகுந்த ஒரு மனிதன். அவனது தேவைகள், விருப்பு, வெறுப்புக்களை அவள்மீது சுமத்தி, தன் காரியங்களைச் செயலாக்குவதில் சமர்த்தன்.

ஸவிதாவிற்குத் தன் குறைகளை எவரிடம் சென்று முறையிட முடியும்? அவளது தமக்கை, வாழ்க்கைப்பட்ட இடத்தில் பிள்ளை இல்லாத குறையுடன் குமைந்து கொண்டிருந்தாள். அண்ணன், திருமணத்தைப் பற்றிய நினைவே இல்லாமல், தம்பிகளின் வாழ்க்கைக்காக உழைத்துக்கொண்டிருக்கிறார். திருமணமாகி, சுகமாகத் தங்கை வாழ்கிறாள் என்று அவர் மனச்சமாதானத்துடன் இருக்கட்டுமே! ஸவிதா பிறந்தகம் பக்கம் போவதைத் தவிர்த்தாள்.

மாதச் சம்பளம் முழுவதும் மாமியாரின் கையில் போன பிறகுதான் ஸவிதா விளங்கிக் கொண்டாள். சம்பளக் குறைவான மகனுக்கு, படிப்பு மட்டமான மகனுக்கு. ஈடுகொடுக்க, படித்த அறிவுள்ள, சம்பாதிக்கும் மருமகள் தேவை. ஸவிதா அந்த இடத்தைப் பூர்த்தி செய்துவிட்டாள்.

"வீட்டுமேல, கடன் இருக்குது. அதை அடைக்கணும்னா பிள்ளைங்கதானே குடுத்தாகணும்." கிருஷ்ண



வேணி அடிக்கடி ஜாடையாகக் கூறுவதன் பொருளும் அவளுக்குப் புரிந்திருந்தது. "சம்பாதிப்பது கடன் அடைக்கவே. உன் புருஷனால் முடியாததை மருமகளே! நீ கொடு. உனக்குக் கணவன் தேவை. எனக்குப் பணம் தேவை. வியாபார நோக்கமான ஒரு வாழ்க்கை ஒப்பந்தம்.

ஸவிதா, இதையெல்லாம் பொருட்படுத்தியிருக்கவே மாட்டாள், அவளிடம், மாமியார் ஒரு துளி அன்பு காட்டி இருந்தால், வீட்டில் மற்றவர்கள் எப்படி நடந்திருந்தாலும், வீட்டின் தலைவி என்ற முறையில் அவள் பரிவுடன் நடந்திருந்தால் ஸவிதா, எந்தத் துன்பத்தையும் பொருட்படுத்தி இருக்கமாட்டாள்.

சமீபகாலமாக, அவளைக் கேவலப்படுத்துவதை அவளால் சகித்துக்கொள்ள முடியாமல் போயிற்று. அன்று டாக்டர் ரேவதி கிளினிக்கிலிருந்து திரும்பியதும், வீட்டில் நடந்த நிகழ்ச்சி அவளை ஒரு விநாடி செயலிழக்கச் செய்தது.

"அழைப்பு மணியை அலற விடறது யாரு?" அதட்டியபடி பானுமதி கதவைத் திறந்தாள்.

'ஓ! சின்ன அண்ணி! என்ன 'குட்நியூஸ்' கொண்டு வந்திருக்கீங்களா? ஜோரா, 'பெல்' அடிச்சீங்க" தொடர்ந்து கிண்டலாக வரவேற்றாள்.

முன்புற வரவேற்பறை ஓரத்தில் சுவருக்குள் பதித்திருந்த அலமாரிக்குள் செருப்புக்களைக் கழற்றி வைத்து மூடினாள் ஸவிதா. அவளது தெம்பும், அத்துடன் மூடிக் கொண்டு விட்ட உணர்வு, தோள் பையை இறுக்கியபடி, உள்ளே செல்ல முயன்றாள்.

"டாக்டரம்மா என்ன சொன்னாங்க." பெரிய மைத்துனர், நாத்தி, ஓரகத்தி என எல்லோர் முன்னிலையிலும் மாமியார் கேட்டது ஏனோ ஸவிதாவிற்குப் பிடிக்கவில்லை.

மெல்லிய குரலில் மாமியார் அருகே வந்தாள். "எனக்கு உடம்பில கோளாறு எதுவும் இல்லேன்னு சொன்னாங்க.'' என்றாள்.

கிருஷ்ணவேணியம்மாள் விடுவதாக இல்லை, 'அப்ப நீ சொல்றத்துக்கு என்ன அர்த்தம்?'

அதற்குமேல் ஸவிதாவின் பொறுமை எல்லை கடந்து விட்டிருந்தது.

'அது புரியலையாம்மா? அண்ணன் மேலதான் கோளாறுன்னு சொல்றாங்க. அப்படித்தானே''பானுமதி தலையிட்டதும் கோபமாக அவளை வெறித்தாள் ஸவிதா.

"நான் கேட்டதுக்கு அவளை எதுக்கு வெறிச்சுப் பாக்கறே?'' மாமியார் அதட்டினாள்.

'டாக்டர் ரேவதி, உங்க மகன் உடம்பையும் பரிசோதிச்சுக்கணும் என்று சொன்னாங்க.'' நிதானமாகக் கூறிவிட்டு உள்ளே செல்லத் திரும்பினாள் ஸவிதா.

''நல்லா இருக்கே நியாயம். எதுக்காக அவனைப் பரிட்சை செய்யறதாம்?'' மாமியாரின் அதட்டலான கேள்விக்குப் பதிலளிக்காமல் உள்ளே சென்றாள் ஸவிதா.

மருமகளைத் தொடர்ந்து வந்த கிருஷ்ணவேணி குரலை உயர்த்தியபடி, ""யாரு பேர்ல குத்தம் சொல்றதுன்னே இல்லியா? குழந்தை குட்டிகளைப் பெத்து, வம்சம் தழைக்கிற குடும்பம் எங்களது. மலட்டுத் தனம்கறது எங்க குடும்பதில இல்லே.'' சாட்டையடி போல விழுந்த வார்த்தைகளைக் கேட்டு, வெடுக்கென நிமிர்ந்தாள் ஸவிதா.

'என்ன சொல்றீங்க அத்தே!'

'உண்மையைத்தான் சொல்றேன். உங்கக்காகாரி ஒருத்தி போதாதா உங்க வம்சத்து யோக்கிதையைப் பத்தி சொல்றத்துக்கு? வயித்தைத் துடைச்சிக்கிட்டு



வந்து நிக்கற குடும்பம்தானே, நீ மட்டும் எப்படி இருப்பியாம்?' படபடத்தாள் கிருஷ்ணவேணி.

அவள் பின்னால் எட்டிப்பார்த்த பானுமதியின் முகத்தில் விஷமச்சிரிப்பு.''எதுக்காக கவலைப்பட றீங்கஅண்ணி இந்தக் காலத்தில 'டெஸ்ட் ட்யூப்' குழந்தைங்க பிறக்குதே. நீங்களும் முயற்சி செய்யலாமே!'

''ஷட்அப் பானுமதி! பெரியவங்க கிட்ட எதைப் பேசறதுன்னு வரைமுறை வேணாம் உனக்கு'' பொறுக்க முடியாத கோபத்தில் சீறினாள் ஸவிதா.

கிருஷ்ணவேணியின் முகம் கோபத்தால் ஜொலிக்க ஆரம்பித்தது. என்ன சொன்னே? என் மகளைப் பார்த்து வாயை மூடுன்னா சொன்னே? உனக்கு எத்தனை துணிச்சல். என் எதிரயே அவளை இப்படி அலட்சியமா பேசறயே?''

ஸவிதாவின் உடல் முழுவதும் உணர்ச்சியில் துடித்தது. உதடுகள் நடுங்கின. 'அத்தே! நீங்க வீட்டுக்குப் பெரியவங்க. பானுமதி வயசில சின்னப் பொண்ணு. இப்படிப்பட்ட விஷயங்களைக் கேலி செய்து குத்திக்காட்டலாமா? சொல்லுங்க.'' என்றாள் குரல் நடுங்க.

"உள்ளதைச் சொன்னா, உடம்புக்கு நோப்பாளமாம். உனக்கு சுடுது. என்ன செய்யறது?' மாமியார் வெடித்தாள்.

''தப்பு எம்பேர்ல இல்லே.உங்க மகனையும் டாக்டர் கிட்ட அனுப்புங்க, பிறகு என் பேர்ல தவறுன்னா நீங்க என்மேல நெருப்பை வாரிக் கொட்டினாலும் ஒத்துக் கொள்கிறேன். அதுவரைக்கும் வார்த்தையால நெருப்பைக் கக்கிடாதீங்கன்னுதான் சொன்னேன்''ஸவிதாவின் கண்களில் நீர் பெருக, கன்னங்களின் மீது சுட ஆரம்பித்தது.

'எங்க மேல எரிஞ்சு விழுந்து என்ன பயன்? நாங்க எதுக்காக ஆனந்த் மேல சந்தேகப்படணும். உனக்கு சாமர்த்தியமிருந்தா, உன் புருஷன் கிட்டயே சொல்லு.' சீறினாள் மாமியார்.

''அண்ணனைக் கூட்டிக்கிட்டுப்போய் டாக்டர்கிட்ட 'செக் அப்' செய்து கொள்ளச் சொல்லுங்க. அதை விட்டுட்டு எங்கிட்ட எரிஞ்சு விழுவானேன்? வாங்கம்மா போகலாம்.'' பானுமதி தாயின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள்.

அன்றிரவு சாப்பாட்டின் போது, வீட்டில் ஒரு பயங்கர அமைதி. ஆபீஸிலிருந்து வீடு திரும்பிய ஆனந்தனுக்கு எதுவும் புரியவில்லை. ஆனால் என்னவோ நடந்திருக்கிறது என்பது மட்டும் அவனுக்கு உணர்த்தியது. ஒன்றும் தெரியாதவன் போல அவன் இரவு படுக்கப் போனான்.

கணவனைத் தனிமையில் கண்டதும் ஸவிதா மனம் உடைந்து போனாள். கட்டிலின் மீது அமர்ந்தவன் விசித்து விசித்துக் குழந்தை போல் அழும் மனைவியை வியப்புடன் பார்த்தான்.

''என்ன நடந்தது ஸவிதா? எதுக்கு அழறே? இப்படி உக்காரு'' ஆறுதலாகக் கூறியதைக் கேட்டதும், அருகே வந்து அமர்ந்தாள் அவள். அதுகாறும் அடக்கி வைத்திருந்த துயரம் மடைதிறந்த வெள்ளமாகப் பாய ஆரம்பித்தது.

''ஸ்! அழாதே! நடந்ததைச் சொல்லு' அவளது தோளைப் பற்றியபடி உலுக்கினான். சிறிது நேரத்தில் விசும்பல் அடங்கியது. கணவனது தோளின் மீது ஆதரவாகச் சாய்ந்து கொண்டாள் ஸவிதா. டாக்டர் ரேவதி கூறியது முதல் வீட்டில் நடந்ததுவரை திணறலுடன் கூறியவளை வெறித்துப் பார்த்தான் ஆனந்தன்.

'நானும்தான் கேக்கறேன். அம்மா கேட்டதில என்ன தவறு? உன்னைத்தானே பரிசோதிக்கணும்? என்னை



எதுக்காக அந்த டாக்டரம்மா வரச் சொல்றுங்க?' சிறிது சினத்துடன் கேட்டான் ஆனந்தன்.

கணவனது தோளிலிருந்து வெடுக்கெனத் தலையை நிமிர்த்தினாள் ஸவிதா. அவனை ஏறிட்டுப் பார்த்தவள், ''நீங்களுமா அவங்களாட்டம் சொல்றீங்க?!'' என்றாள் வேதனையும், துயரமுமான குரலில்.

''நான் ஆண்பிள்ளை. இது மாதிரியெல்லாம் டாக்டர் கிட்ட வந்து நிக்க எனக்கு நேரமும் இல்லே. என் பேர்ல தவறும் இல்லே. போதுமா?'' நறுக்கென பதிலிறுத்து விட்டு கட்டிலின் மீது படுத்துவிட்டான் அவன்.

கணவனது துணையே ஊன்றுகோலாகக் கருதி வந்தவளுக்கு, அவளது கால்களையும் தட்டிவிட்டு, கைக்கோலையும் பிடுங்கிஎறிந்த உணர்வு, ஆயிரம் ஊசிகளாக உள்ளத்தைக் குத்தி ரணகளமாக்கியது. "நீயுமா? துணை என்று வந்த நீயே என்னை உதறிவிட்ட பிறகு மற்றவங்க சொல்லம்பு என்ன செய்ய முடியும்? ஏற்கனவே, நெஞ்சில் ஊசி குத்த இடமில்லாத ரணம் இருக்கும் போது, வேறு எவர் வந்து வார்த்தைகளால் குத்த முடியும்?''இரவு முழுவதும் அழுது தீர்த்தாள் ஸவிதா. மனைவியிடம் முகம் கொடுத்துப் பேசாமல் இரண்டுநாள் இருந்த பிறகு, மூன்றாம் நாள் 'டூர்' புறப்பட்டு போனான் ஆனந்தன். அவன் வரையில் இந்த நரகத்திலிருந்து விடுதலை...அவளுக்கு...?

# 4

'ஸவிதா! அவங்கள்ளாம் வராங்க.' மாமியாரின் உச்சஸ்தாயி குரல் அவளை திடுக்கிடச் செய்தது. ''ஐயையோ! நேரமாயிட்டுது. ஆபீஸ் போகணும். பஸ் போயிருக்கும்.'' மனம் பறக்க, வேகமாக வெளியே வந்தாள்.

காரிலிருந்து இறங்கிய அண்ணியின் பெற்றோர்கள் கண்ணில் படாமல், பின் பக்கக் கதவின் வழியே, அடுத்த ஃபிளாட்டின் படி வழியாக இறங்கிச் சென்றாள். தோள் பையைத் திறந்து குட்டி மணிபர்ஸைத் திறந்து பார்த்த வள் மனத்தில் நிம்மதி. ஆட்டோவிற்குத் தேறும் படியாக ஒரு கணிசமான இருபது ரூபாய் நோட்டு எட்டிப் பார்த் தது. அதே சமயம், டிபன் டப்பாவை மறந்தது நினைப்பு வந்தது. அன்று கையிருப்பு ஆட்டோவிற்குப் போனால், அவள்பட்டினிதான். வேகமாக நடந்தாள். அவள் "பாங்க்' ஆடிட் வேலை முடிந்து அன்று கிட்டத்தட்ட ஒருவாரம் ஆகிவிட்டது. டிஸம்பர் கடைசி நேர கணக்கு வேலை களும் தொடங்கி விட்டால், வீடு திரும்ப நேரமாகலாம். வெளியூர் புறப்பட்டுப்போன கணவன் இன்னம் திரும்ப வில்லை. ஸவிதாவிற்கு அவசரமாக திரும்ப வேண்டிய ஆவலும்இருக்கவில்லை. ஆனால் கிருஷ்ணவேணி அவளை விரைவாகத் திரும்பச் சொல்லி அடிக்கடி கட்டாயப்படுத் தினாள்.

''சம்பந்திங்க இன்னிக்கி, 'டிராமா' பார்க்கப் போறாங்க. அவங்க கூட என்னையும் பானுவையும் வரச் சொல்லி நிர்ப்பந்திக்கிறாங்க. வீட்ல கைக்குழந்தைக்காரி அண்ணி, ஒண்டியா கஷ்டப்படுவா. சீக்கிரமா வந்திடு''

மாமியாரின் உத்தரவிற்கு அவள்தான் பயப்பட முடியும்! பாங்க் மானேஜர் கூட பயப்பட வேண்டும் என்றா எதிர்பார்க்க முடியும்? மனதினுள் குமுறியபடி, ஸவிதா, காலையில் புறப்பட்டாள்.

சமையலறையில் காலை ஐந்து மணி முதல் வேலை செய்த களைப்பு. ஆபீஸில் கணக்கு லெட்ஜர்களைப் பார்த்துப் பார்த்துப் பூத்துப் போன கண்கள். அவள் மிக்க சோர்வுற்றிருந்தாள். சம்பந்திகள் கெடுபிடியில், வீடு, ஓட்டலுக்குச் சமமாக இரண்டுபட்டுக் கொண் டிருந்தது.



'இன்னிக்கி நாங்க ஃபைவ் ஸ்டார் ஓட்டல்லே சாப்பிடப் போறோம். உனக்கு வர நேரமாகும்ன்னு சொன்னியே, ஏதாச்சும் சமைச்சுக் கொள்ளு' திடும்மென கிருஷ்ணவேணி கூறிவிடுவாள்.

அலுத்துச் சோர்ந்து வீடு திரும்பும் சமயம், யாவரும் புறப்பட்டுச் சென்று இருப்பார்கள். பக்கத்து ஃபிளாட் கார பரிமளாவிடம், வீட்டுச் சாவியை வாங்கிக்கொண்டு கதவைத் திறந்தால் ஒரே மயான அமைதி.

'ஏம்மா! பசியோட வந்திருக்கே போல இருக்கு. ஏதாச்சும் காப்பி, டிபன் சாப்பிடக்கொண்டு வரட்டுமா?' பரிமளா ஓடிவந்து கேட்டபோது அவள் மறுத்து விடுவாள்.

'ஆபீஸ்லேயே டிபன் சாப்பிட்டுப்பிட்டுத்தான் வந் தேன். நேரமாகும்னு தெரியும். ரொம்ப தேங்கஸ்!' அவளை வழியனுப்பி விட்டு கதவை மூடி விடுவாள் ஸவிதா.

அக்கம் பக்கம் உதவி தேவைதான். அதேசமயம் கறிவேப்பிலை, கொத்துமல்லி போலத்தான் அவர்களைத் தேவையான போது உபயோகித்துக் கொள்ள வேணும். வேண்டாத சமயம் தூக்கிப் போட்டு விடவேண்டும் என்பது மாமியாரின் கொள்கை. இதை அவள் நன் றாகவே தெரிந்து வைத்திருந்தாள்.

'ரொம்ப சிநேகம் கொண்டாடினால், நம்ம வீட்டுக் கார்ல ஏறி உக்காந்துப்பாங்க. ஓசி லிப்ட் தரணும். பெரியவனுக்கு ஆபீஸ் போன் வேற வரப்போவுது. அதுவும் ஓசியில அடிக்கடி பேசவருவாங்க. எல்லாத் துக்கும் மேல, நம்ம வீட்டு விஷயம் அவங்களுக்கு தெரி வானேன்?' மாமியாரின் மேலான அறிவுரை.

ஸவிதாவிற்கு அதுபற்றிக் கவலைப்படவோ, பயப் படவோ நேரம் இல்லைதான். அவள், வீட்டில் தங்கும்

நேரம் மிகக்குறைவு. அத்துடன், வீட்டு வேலைகளில் தன்னை மூழ்கடித்துக் கொண்டுவிட்டால் வெளி உலகே மறந்து போகும். அக்கம் பக்கம் திரும்பக்கூட அவளால் முடியாதே!

பசியால் உயிர் போனாலும் அவள் பரிமளாவிடம் வாய் திறவாமல் சமாளிப்பாள். பலவீனமான மனநிலையில் எங்கே தன் உள்ளத்து உணர்ச்சிகளைக் கொட்டி விடுவோமோ என்ற பயம்.

ஐந்து நட்சத்திர ஓட்டல் சாப்பாட்டில் வயிற்றைத் தடவிக் கொண்டு வரும், கும்பல் திரும்பி வரும் போது, ஸவிதா ஃபிரிட்ஜைத் திறந்து, ஒரு டம்ளர் மோரைக் குடித்துப் பசியாறி இருப்பாள்.

'என்ன சின்ன அண்ணி! சமைச்சுச் சாப்பிட்டு, பத்து பாத்திரத்தை அடையாளம் தெரியாம துலக்கி வச்சிட்டுங்க போல இருக்கு' பானுமதியின் கிண்டலில் யாவரும் சிரித்து மகிழ்வார்கள்.

பசி, பட்டினி, வேதனை யாவும் அவளுக்கு பழக்கமாகிப் போனது, அதேசமயம், அண்ணியின் பெற்றோர் முன் அவளை, மாமியாரே சிறுமைப் படுத்துவது கேவலமாகத் தோன்றியது.

பஸ் நிலையத்தில் நின்ற ஸவிதா, தோளில் தொங்கிய தோள் பையை இறுக்கிப் பிடித்தாள், கைக்குள், டிக்கட்டுக்கான சில்லரை கசகசத்தது. இரண்டு நாட்களுக்கு முன் நடந்த அந்த நிகழ்ச்சி...?

சம்பந்தி அம்மாள், அலங்காரவல்லியாக பூவும், பொட்டும், வைரமுமாக ஜ்வலித்தாள். செல்வாக்கின் பெருமை, அந்தம்மாளிடம் கர்வமாகப் பொங்கி வழிந்தது.

'தம்பிதான் சம்பாதிக்குதே. எதுக்காக, உங்க சின்ன மருமகளை வேலைக்கு அனுப்பறீங்க?' காலைக் காப்பி



பலகாரத்தை ஒரு கை பார்த்தபடி வினவினாள் அந்தம்மாள்.

கிருஷ்ணவேணியின் முகத்தில் அசடு தட்டியது? சமாளித்தபடி 'அதுக்கும் பொழுது போக வேண்டாமா?' என்றாள்.

'என்ன இது? வீட்டைக் கவனிக்கறதுதான் ஒரு பெண்பிள்ளையோட வேலை. வெளியே போய்த்தான் வேலை செய்யணுமா?' சம்பந்தியம்மாள் அதட்டினாள்.

'இன்னும் கொஞ்சம் நெய் விடம்மா இட்லி மேல' அருகில் அமர்ந்திருந்த சம்பந்தி ஐயா அதிகாரம் செய்து விட்டுத் தொடர்ந்தார், 'எங்க நீலா கூட, படிச்ச கையோட வேலைக்குப் போகணும்னு ஒத்தக் கால்ல நின்னாள். நானந்தான் கூடாதுன்னிட்டேன். என்ன வேலை. பெரிய வேலை? அவன் குடுக்கற ஆயிரத்து சொச்ச ரூபாய்க்கு, ஆயிரம் பேருக்கு பதில் சொல்லிக்கிட்டு... சே! சே! வீட்ல ராணியாட்டமா உக்காந்துகிட்டு இருக்கறதை விட்டுட்டு, உடம்பு தேஞ்சு, மனசு ஒடிஞ்சு...எனக்குக் கட்டோட பிடிக்காத விஷயம்.'

'அதான் நீலாவுக்கு உடனடியாக கல்யாணம் செய்திட்டேன்' பக்க பலமாக சம்பந்தியம்மாள் ஊதினாள்.

தொண்டையைச் செருமியபடி, கிருஷ்ணவேணி, ஸவிதாவைப் பார்த்தாள். 'வாயைத்திறந்து ஏதாச்சும் உளறிடாதே' என்ற எச்சரிக்கை தெரிந்தது. ஸவிதா, பூப்போன்ற இட்லிகளைத் தட்டில் வைத்து அதன்மீது நெய்யை வார்த்தாள்.

'உங்களுக்குப் பணம் இருக்கிறது. அந்த மிதப்பில் நீங்கள் இதுவும் பேசுவீர்கள், இன்னமும் பேசுவீர்கள். எங்களைப் போல, வறுமைக் கோட்டின் கீழே அவதிப்படும் பெண்களைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? எங்கண்ணன் மாடாக உழைத்து, ஓடாகத் தேய்ந்து எங்களைக் கரையேற்ற எத்தனை அவதிப்பட்டார்? என்

னுடைய மாத சம்பளம் முழுவதும் இங்கே கொடுக்கப் படாவிட்டால், ஒரு வேளைச் சோறு கூடக் கிடைக்காது என்ற உண்மை உங்களுக்குப் புரியுமா? பணத்தையும் கொடுத்து, செக்குமாடு போல நான் உழைக்கிறதால் தானே, உங்கள் மகள் ராணிபோல வளைய வருகிறாள்?" மனது "ஓ'வெனக் கூச்சலிட்டது.

'சட்னி போடம்மா ஸவிதா!' அன்பொழுகக் கூறிய பாசாங்குடன், 'என்ன செய்யறது? பாவம்! அதுக்கு இன்னமும் ஒரு பூச்சிகூட வயித்தில வரலே... வீட்ல உக்காந்துகிட்டு என்ன செய்யும்! வேலைக்குத்தான் போகட்டும்னு பேசாம இருந்திட்டேன்'' என்றாள் கிருஷ்ணவேணி.

ஸவிதாவின் முகம் அவமானத்தால் குன்றிச் சிவந்தது. 'மீண்டும் அவளையே குற்றவாளிக் கூண்டில் ஏற்று கிறாளே மாமியார்?' ஆத்திரம் குமுற, தலையை நிமிர்த் தினாள்.

'மிளகாய்ப் பொடியும், நெய்யும் எடுத்திட்டு வா' மாமியார் அடிக் குரலில் மிரட்டினாள். சட்டென சமையலறைக்குள் புகுந்த அவளுக்கு ஆத்திரமும், அழுகையும் வந்தன.

சம்பந்தியம்மாள் உரத்த குரலில் கூறினாள். 'இந்தக் காலத்துல இதுமதிரி கேஸுக்கெல்லாம்தான் புது வைத்திய முறை வந்திருக்குதே! எனக்குத் தெரிஞ்ச ஸ்பெஷலிஸ்ட் ஒருத்தர் பம்பாயில் இருக்கார். அவர் அமெரிக்காவில் படிச்சிட்டு வந்தவர். ரொம்ப கைராசி, பாருங்க, பன்னிரண்டு வருஷமா, என் தங்கச்சி மகளுக்குக் குழந்தையே இருக்கலே. ராமேஸ்வரம், காசின்னு போனாங்க. பண்ணாத பூஜை இல்லே. கடைசில, அவரு தான் வைத்தியம் செய்தாரு. தங்கம் போல ஒரு பொண்ணு பிறந்திருக்கு...'



'செஞ்சிட்டா போவுது' தம்பி "டூர்'லயிருந்து வரட்டும். பம்பாய் கூட்டிப் போகச் சொல்றேன்" கிருஷ்ணவேணி பதில் சமாதானம் கூறினாள்.

ஸ்பெஷலிஸ்ட்! அதிலும் அமெரிக்காவில் படித்துப் பட்டம் பெற்ற நிபுணர்! பம்பாய் வாசம்! சிகிச்சை ஸவிதாவிற்கு. அந்த வேதனையான சமயத்திலும் சிரிப்பு. கிருஷ்ணவேணி நயாபைசாவிற்கும் கணக்குப் பார்க்கும் பெண்மணி 'போன மாசம் மளிகை சாமான் ஆயிரம் தானே ஆச்சு, இப்ப ஏன் இருநூறுருபா கூட ஆயிருக்குது' என்று அலறுபவள், சாமான்விலை விஷம்போல ஏறு கிறது என்பதை இலேசில் ஒப்புக்கொள்ள மாட்டாள்.

'இருபத்தஞ்சாம் தேதியோட சாமான்கள் எப்படி ஆகும்? ஒரு மாசத்து சாமான்னா, மாசமுச்சூடும் இருக்க வேணாமா? அப்ப, பருப்பில்லாம குழம்பு வச்சிடு, தோசை வேணாம், எண்ணெய் செலவு. அப்பளம்பொரிக் காதே, இட்லி சுட்டா போதும்' அடுக்கடுக்காக உத்திரவு களைப் பிறப்பித்து சிக்கனத்தைக் கடுமையாகக் கடைப் பிடிப்பாள். இதில் ஸவிதாவின் பாடுதான் ஆபத்து. தாமோதரனும், ஆனந்தனும் வெளியே விருப்பம்போல் சாப்பிட்டு விட்டு, வீட்டில் 'பசி இல்லை' என்று கூறிவிடு வார்கள். பானுமதி மட்டும் என்ன? தோழிகளுடன், "ஆலு மட்டர், நான்' என்று ஒரு கை பார்த்துவிட்டு வந்துவிடுவாள். அண்ணி நீலாவிற்கு, அண்ணன் ரகசிய மாக, அவர்களது அறைக்குள், டிபனை வாங்கி வந்து தரு வதை ஸவிதா கவனித்திருக்கிறாள். ஆனால் அவளது கணவனோ? அவனுக்கு அவளைப் பற்றித்தானே நினைப்பு?

"நீங்க மட்டும் சாப்பிட்டீங்களே? என்னைப்பத்தி எண்ணிப் பார்த்தீங்களா?' என்று கேட்டுவிட முடியாது. 'ஏன்? உங்ககிட்ட பணம் இல்லே? சாப்பிடறது. நானா கையைப் பிடிக்கறேன்' தூக்கி எறிந்தாற் போலப் பதில் கிடைக்கும். 'மாமியாருக்குப் பாதிநாளைக்கு 'டயட்',

மீதி நாள் மருந்து உபசாரங்கள். அவளைப் பற்றி கவலைப்பட யார் இருக்கிறார்கள்? அண்ணனிடம் முறையிட்டால் அவர் துயரத்தில் துடித்துப் போக மாட்டாரா?

மாமியாரின் கரிசனம் வெறும் வெளிப்பூச்சு, சம்பந்தியின் கண்களில் மண் தூவும் மாய்மாலம். அதற்காக ஸவிதாவைக் காட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, ஸவிதா வீட்டில் தங்கும் நேரத்தைக் குறைத்தாள். இரவு படுக்கப்போகும் சமயம் மட்டும், மாமியாரின் அறைக்குள் படுக்கையை விரிப்பாள். இதர நேரங்களில் ஆபீஸ், அதைவிட்டால் சமையலறை என்று தஞ்சம் புகுந்து விட்டிருந்தாள்.

## 5

அன்று காலை ஆனந்தன் சென்னை வந்து சேர்வதாகச் சொல்லி இருந்தான். அவள் புறப்படும் வரை வந்து சேர்ந்தபாடில்லை. 'ஆடிட்' வேலை முடிந்த கையுடன், டிஸம்பர் மாத வேலைகளையும் மானேஜர் நெருக்கிப் பிடிக்கத் துவங்குவார். அவரது வேண்டுகோளுக்கிணங்க, மெயின் ஆபீஸிலிருந்து அதிகப்படியாக இரண்டு ஆபீஸர்கள் வந்திருந்தனர்.

அந்த இருவரில் சோமசுந்தரம் என்ற ஆபீஸர் சிறிது பணிவுடன் நடந்து கொண்டான். தான் உயர் அதிகாரி என்ற கர்வமோ, அல்லது, குமாஸ்தாக்களை அதிலும் பெண் குமாஸ்தாக்களை ஓட ஓட விரட்டி வேலை வாங்கலாம் என்ற அகந்தையோ இல்லாதவன்.

'இந்த லெட்ஜர் டாலி ஆகல்லே ஸார்' என்று கூறினால், ஓடி வந்து உதவி செய்வான், மற்ற ஆபீஸர் சரியான கடுவன் பூனை.



'ஸ்டிரைக், யூனியன், மண்ணாங்கட்டின்னு பேசினா போதாது. வேலையிலும் கருத்து வேணும்' எரிந்துவிழுந்தான். ''ஒரு கணக்குப் போட தெரியலே, வீட்ல உப்பு, புளி கணக்குக்கூட ஒழுங்கா எழுதத் தெரியாமே, வேலைக்கு வந்திடறாங்க'' அவன் ஒருநாள் முணுமுணுத்தது காதில் விழுந்தது. வேறு எவராக இருந்தாலும், அந்த மனிதனுக்குப் பாடம் கற்பித்திருப்பார்கள்.

''என் வேலை இல்லே ஸார். இதெல்லாம் உங்களது, என்று பதிலுக்கு அரட்டலாகக் கூறி இருக்கலாம். ஸ்டிரைக், வம்பு வழக்கு என்றெல்லாம் ஈடுபட அவளைப் போன்ற பெண்களுக்கு நேரம் இருப்பதில்லை. நியாயமான உரிமைகளைத் தட்டிக் கேட்கவே அவளுக்குத் துணிவு இருக்கவில்லையே! மௌனமாக இருந்து விட்டாள்.

'மேடம்! ஏதானும் உதவி தேவைன்னா சொல்லுங்க'. ஒரு முறை சோமசுந்தரம் கேட்டபோது, கண்களை மலர்த்து நன்றியுடன் பார்த்தாள், 'தாங்க் யூ மிஸ்டர் சோமசுந்தரம்' என்றாள்.

பல சமயங்களில் அவளுக்கும் அவளது சக ஊழியர்களுக்கும் ஏற்பட்ட சந்தேகங்களை அவன் தெளிவுபடுத்த உதவினான்.

'இன்னிக்கி ரொம்ப நேரம் நிக்க முடியாது ஸார். வீட்ல வேலை இருக்கு' என்று சொன்னவர்களிடம் எரிந்து விழாமல் ஓ.கே. நாளை காலையில சீக்கிரம் வந்து செய்துடுங்க' என்று தட்டிக் கொடுத்து வேலை வாங்கிக் கொண்டான். ஒரு சிறந்த மேலதிகாரி என்ற பெயரை வாங்கிக் கொண்டிருந்தான். ஸவிதா அவனை ஆபத்பாந்தவனாக எண்ணிக்கொண்டாள்.

'இன்னைக்கி எப்பிடியாச்சும் சோமுகிட்டதான் உதவி கேக்கணும். 'லெட்ஜர்' வேலை நிறையவே இருக்கு' மனதிற்குள் எண்ணியபடி, கைக் கடியாரத்தைப்

பார்த்தாள். எட்டுமணி பஸ் எட்டிக்கூடப் பார்க்கவில்லையே!

'குட் மார்னிங் மேடம்!' தூக்கி வாரிப்போட நிமிர்ந்தாள். சோமசுந்தரம் புன்னகையுடன் நின்றிருந்தான்.

'நீங்க இங்கதான் இருக்கீங்களா?' சமாளித்தபடி கேட்டாள் ஸவிதா.

'ஆமா, அதோ தெரியுதே லாட்ஜ், அதுதான் என் வீடு' சிரித்தான் அவன்.

'அப்ப உங்க குடும்பம்...?'

'நான் இன்னமும், திருமணங்கிற விலங்கில மாட்டிக்காத அதிர்ஷ்டசாலி. ஸாரி! உங்களைப்போல குடும்பத்தில இருக்கிறவங்ககிட்ட தவறா பேசிட்டேன். சும்மா விளையாட்டா...' தயங்கினான் அவன்.

'பரவாயில்லே, ஷேக்ஸ்பியர் சொன்னதா ஒரு நினைப்பு—'பிரும்மச்சாரியும், மணமானவனும் முடிவில் வருத்தப்படுகிறார்கள்!' ஸவிதா சிரிக்க முயன்றாள்.

'ஆபீஸுக்கு நேரமாய்க்கிட்டே போகுது. பேசாம, நான் சொல்றதைக் கேளுங்க. ஒரு ஆட்டோ பிடிச்சு போயிடலாமா? பாதி, பாதி.' அவன் இயல்பாகக் கேட்ட போது அவள் நடுங்கிப் போனாள்.

'இல்லீங்க! நீங்க போய்டுங்க. பஸ் இப்ப வந்திடும். தாங்க்ஸ்!' பதட்டத்துடன் கூறிவிட்டுத் திரும்பினாள். அதுசமயம் தாமோதரனின் ஆபீஸ் வண்டி அவளைத் தாண்டி சென்றதைக் கவனித்தாள். நிச்சயம், அவளை, சோமசுந்தரத்துடன் பார்த்திருப்பார்கள். வண்டிக்குள் மாமியாரின் தலை தெரிந்தது. சம்பந்திகள் இன்னும் யாரோ? உடல் பயத்தால் சில்லிட்டுப் போயிற்று ஸவிதாவிற்கு.

இடை நேரம் சாப்பாட்டு வேளை. 'பாங்க்' வாடிக்கையாளர் நேரம் முடிந்துவிட்டது. ஆபீஸ் வேலைகளை



மீண்டும் கவனிக்கும்முன் ஸவிதா சோற்றை அள்ளிப் போட்டுக் கொள்ள விரைந்தாள்.

லெட்ஜரை ஒதுக்கி மேஜைமீது ஒழுங்குபடுத்தினாள். 'பாங்க் பியூன்' வாயிற் கதவின் ஷட்டர் கதவுகளை, படபடவென்ற சப்தத்துடன் இழுத்து மூடினான். இனி எவரும் வெளி மனிதர்கள் வரமாட்டார்கள். அவரவர் மேஜை மீது டிபன் டப்பாவை திறந்து வைத்துக்கொண்டனர்.

பக்கத்து மேஜைமீது இருந்த அவளது தோழி சப்பாத்தி குருமாவை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தாள். மற்ற சக ஊழியர்களும் 'செவிக்குணவு இல்லாத போது' வயிற்றிற்கும் ஈந்து கொண்டிருந்தனர். மற்ற ஆபீஸர்கள் மானேஜர் அறையினுள் சாப்பாட்டை முடிக்கச் சென்றுவிட்டனர். சோமசுந்தரம் அருகிலிருந்த ஓட்டலை நாடிப் போயிருந்தான்.

ஸவிதா டப்பாவைத் திறந்ததும், 'குப்'பென்ற மோர் வாசனை, முகத்தில் அடித்தது. புளிப்பு! அவளால் அதைச் சாப்பிட முடியாதபடி அடிவயிறு புரண்டது.

சம்பந்திகள் வந்து போன செலவினத்தை கிருஷ்ண வேணி, குடும்ப பட்ஜெட்டில் ஈடுகட்டிக் கொண்டிருந்தாள். பாயஸம், கேசரி, பக்கடா, பஜ்ஜி என்று விதம் விதமாக உபசரித்துவிட்டு, வீட்டில் உள்ளவர்களுக்கு 144 போட்டுவிட்டிருந்தாள். கையில் மோர் சோறும் ஊறுகாயும்தான். மாலை நேரம் வீடு திரும்பினால் அரிசி அல்லது ரவை உப்புமா அவர்களைப் பார்த்து விழித்தது. வழக்கம்போல் மற்றவர்கள் வெளியே வயிற்றை நிரப்பிக் கொண்டார்கள். ஸவிதாவின் நிலை ஆபத்தாகிப் போயிற்று.

ஆனந்தன் ஊர் திரும்பிவிட்டான். ஆனால் வீடு தான் பழைய நிலையில் இருக்கவில்லை. அன்று பஸ் நிலையத்தில் ஸவிதா, சோமசுந்தரத்துடன் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டன கிருஷ்ணவேணி

யின் கழுகுக் கண்கள், பிறகு அவள் சும்மா இருப்பாளா? அன்று வீடு திரும்பியதும் அவள் கேட்ட முதல் கேள்வி, 'அவன் யாருடிம்மா?'

'யார் அத்தே!' ஸவிதா திகைத்துப் போனாள்.

'ஆஹா! பூனையாட்டமா இருந்துகிட்டு... ஊம்! பஸ் ஸ்டாண்டில, இளிச்சுகிட்டு நின்னியே அவன் யாரு? ஒரு நெட்டையா, கறுவலா இருந்த பயல். தொங்குமீசை கூட இருந்திச்சே?' உறுமினாள் மாமியார்.

ஸவிதா முகத்தில் ஓங்கி அறைந்துவிட்ட வேதனை. 'அவர் எங்க 'பாங்க்'ல வேலை செய்றவர். புதுசா வந்திருக்கார் அத்தே!'

கிருஷ்ணவேணி சந்தேகத்துடன் மருமகளை ஏறிட்டாள். ''புதுசா? இல்லே ரொம்பநாள் பழசா?'

ஸவிதா அதிர்ந்து போனாள். 'அத்தே!'

'எங்கிட்டே நீ மறைக்கலாம். ஊரார் கண்ணை மறைச்சிட முடியாது.'

ஸவிதாவின் கோபம் தலைக்கேறியது. 'அத்தே! ஆணும் பெண்ணும் சேந்து வேலை செய்யற ஆபீஸ்ல, ஒருத்தருக்கொருத்தர் பேசாம, பழகாம இருக்க முடியுமா? நீங்க வீணா என் மேல அவநம்பிக்கைத் தெரிவிக்கறது அநியாயம்' அவள் குரல் உயர்ந்தது.

இந்த பஸ் ஸ்டாண்டில் அவனுக்கு என்ன வேலை? யாருகிட்ட காது குத்தறே? கிருஷ்ணவேணி மிரட்டினாள்.

'ரொம்ப நல்லா இருக்கே. அவர், இங்கதான் எங்கியோ லாட்ஜ்ல இருக்காராம். அதே பஸ் ஸ்டாண்டுக்கு வந்தார். இது என்ன பெரிய விஷயமா?'

'பின்னே, சின்ன விஷயமா?' லாட்ஜ்ல இருக்கானா? வசதியா போயிட்டுது.'



'அத்தே! நாக்கில நரம்பில்லாம பேசாதீங்க, என்னைப் பத்தி...' அதற்கு மேல் துயரம் தாளாமல் வெடித்தாள் அவள்.

'அவன் வரட்டும். இப்பல்ல தெரியுது. நீ ஏன் இப்படி ஒட்டாம நிக்கறேன்னு, இதுக்கு ஒரு வழி செய்யறேன்' கிருஷ்ணவேணி தீர்ப்புக் கூறினாள்.

ஆனந்தன் ஊர் திரும்பியதும், மகனிடம் கிருஷ்ணவேணி என்ன சொன்னாளோ தெரியாது. அவனிடம் பெரும் மாறுதல் ஏற்பட்டுவிட்டிருந்தது.

'என்னங்க? 'டூர்'ல இருந்து வந்தீங்க? எனக்கு என்ன வாங்கிட்டு வந்தீங்க?' என்று கெஞ்சலாகக் கேட்டாள்.

'உனக்கு நான் எதுக்கு வாங்கிட்டு வரணும். உனக்குத் தான் உன் 'பாய்ஃபிரண்ட்' இருக்கானே! வாங்கிட்டு வந்திருப்பான். அவனைக் கேளு.' முகத்திலடித்தாற் போல வெறுப்பை உமிழ்ந்தான் அவன்.

காலுக்கடியில் பூமி பெயர்ந்து தன்னை விழுங்கிவிடாதா என்ற அவமானத்தில் துடிதுடித்துப் போனாள் அவள். மனைவி மீது நம்பிக்கை இல்லாத கணவன் எப்படிப்பட்டவன்! நம்பிக்கை என்ற வேரில்தான், வாழ்க்கை என்ற செடி பூத்துக் குலுங்க முடியும்?

இதுநாள் வரை அவள் தன்னை 'மலடி' என்று இளக்காரம் செய்ததை மட்டும் லட்சியம் செய்யாதவளாக இருந்து வந்தாள். இப்போது அவள் மீது சுமத்தப்படும் அபாண்டத்தை எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்.

'நீங்க கூடவா இதை நம்பறீங்க?' தயவாகக் கேட்டபோது வெறுப்புடன் அவளைப் பார்த்தான்.'

'ஆபீஸ் போனோம் வந்தோம்னு இருக்கணும். வழியில கண்டவனோட என்ன பேச்சு?'

'அவர் எங்க ஆபீஸர். நல்ல மனுஷர். சாதாரண மாகத்தான் பேசினார்''

'ஓஹோ! உன்னோட ஃபிரண்ட் நல்லவன். அப்ப நான் பொல்லாதவன். அப்படித்தானே?' அவன் சீறினான்.

'ஐயையோ! அப்படிச் சொல்லலீங்க. நீங்க கூடத் தான் உங்க கூட வேலை செய்கிற பெண்களோட பேசற தில்லையா? அதை நான் தவறாப் பேசியிருக்கேனா?' அவள் முகம் 'குப்'பென்று சிவந்து போயிற்று.

'என்ன சொன்னே? நான் ஆண் பிள்ளை. யார் கிட்ட வேணும்னாலும் பேசுவேன், சிரிப்பேன். நீ ஆயிரம் சம் பாதிச்சாலும் பொம்பிளை, நினைப்பு வச்சிக்க. நான் அப்பிடி, இப்பிடி இருந்தாலும் இது சகஜம்னு சொல்லு வாங்க. உன்னால முடியுமா?' சவாலாகக் கேட்டான் அவன்.

ஸவிதா சுருண்டு போனாள். அன்பு தான் இல்லை. அவனது அரவணைப்புத்தான் இல்லை. ஆறுதலாக 'உன்னை நான் நம்பறேன் ஸவிதா! அம்மா ஏதோ சொல்லிக்கிட்டு கிடக்கட்டும்' என்று கூறி இருந்தால் தன் துயரை மறந்திருப்பாள், இப்போது அவனே, அவளுக்கு காவலாக நிற்க வேண்டியவனே,கல்லெடுத்து எறிகிறான்.

அன்றிரவு முழுதும் அவள், தரை மீது படுத்து விசித்து விசித்து அழுதும், ஆனந்தன் ஒரு முறைகூட எழுந்து வந்து சமாதானம் செய்யவில்லை.

மறுநாள் முதல் அவளை சிறைக் கைதியைப் போல நடத்தத் துவங்கினார்கள். 'ரொம்ப லேட்டா வராதே! ஆனந்தனுக்கு கோபம் வந்திடும். வீட்டுக்கே வராம வெளியே தங்கிடுவான்.'

பானுமதியும், சின்ன அண்ணியின் மீது தன் சொல் அம்புகளைத் தொடுக்கத் துவங்கினாள், 'ஏன் அண்ணி?



நீங்க வர்ற பஸ்லதான் உங்க ஆபீஸ்காரங்களும் வராங் களா?'

'முந்தா நாள், கபாலித் தியேட்டர் பக்கம், அந்த நெட்டை ஆசாமியைப் பாத்தாங்க அம்மா. இவன் தான்னு காட்டினாங்க. நல்லாவே இல்லியே'.

'சின்ன அண்ணி! உங்க பாய்ஃபிரண்டை, மருந்துக் கடையில பாத்தேன். பாவம்! குளிர் ஒத்துக்கலை போல இருக்கு. உடம்பு சரியில்லையோ என்னவோ?'

பானுமதியின் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட வேண் டும் என்ற ஆவேசத்தை அடக்கிக் கொண்டாள் ஸவிதா. இப்போது அவர்கள் பேச வேண்டிய நேரம். பேசுகிறார் கள், எல்லாம் நாளடைவில் அடங்கிப் போகும் என்றிருந் தாள். ஆனால்—

## 6

அன்று காலை, வீட்டிலிருந்து புறப்படும் போது புதிய புயல் வெடித்துவிட்டது. சமையலறைக்குள்ளிருந்து வெளியே வர முயன்றவள் காதில், கிருஷ்ணவேணியின் குரல் தெளிவாக விழுந்தது.

சாப்பாட்டு மேஜை மீது பூரியையும், உருளைக்கிழங் கையும் ஒரு கை பார்த்துக் கொண்டிருந்த ஆனந்தனிடம் உபதேசம் செய்து கொண்டிருந்தாள் தாய்.

'அப்பவே, சம்பந்தியம்மா சொன்னாங்க. நல்ல இடம். அடக்கமான பெண். நிலம், நீச்சு, வீடு, வாசல் எல்லாம் இருக்கு. குழந்தை குட்டி உண்டாகிற வம்சம். பேசாம, தம்பிக்குக் கட்டிப் போடுங்கண்ணு. நீ தான் பிடி குடுக்க மாட்டேங்கிற'

ஸவிதா நிலை குலைந்து போனாள். மாமியார் மகனுக்கு அடிக்கும் வேப்பிலையின் நோக்கம் அவளுக்கு விளங்கிப் போயிற்று.

'அப்படி எல்லாம் அவசரப்பட முடியாதம்மா. முதல்ல, விடுதலை வாங்கணும். பிறகு...'

'அதெல்லாம் நான் பாத்துக்கறேன். நீ சரின்னு சொல்லு. நம்ம வம்சம் விளங்க வேணாமாப்பா. எனக்கு ராத்தூக்கம், பகல்தூக்கம் இல்லே. சதா உன் நினைப்புத் தான். 'கிருஷ்ணவேணி கண்களைத் துடைத்துக் கொண் டாள்.

'எதுக்கு அழறீங்க, நான்தான் சரின்னுட்டேனே' ஆனந்தன் எந்த வித சலனமும் இல்லாமல் பூரியை விழுங் கிக் கொண்டிருந்தான்.

சோற்றைப் பிசைந்து டிபன் டப்பாவில் அடைத்த ஸவிதாவின் கரங்கள் நடுங்கின. தாலிகட்டியவன், ஆயுள் முழுவதும் துணைவருபவன் என்ற கணவனே, நளனைப் போல நடுக்காட்டில் விட்டு விட்டு ஓட முயல்கிறானே! மனைவி என்ற சம்பாதிக்கும் இயந்திரம் என்ற அளவிலா வது ஒரு அபிமானம். குறைந்த அளவு அனுதாபம் கூட இல்லையா?

'அவ வேணா அண்ணன் வீட்ல போய் இருக்கட்டும், பிறகு ஒரு முடிவு எடுக்கலாம்.'

ஸவிதா புயலைப் போல வெளியே வந்தாள். 'நான் ஏன் அண்ணன் வீட்டுக்குப் போகணும், முடியாது, முதல்ல உங்க பிள்ளையை டாக்டர்கிட்ட 'செக் அப்' செய்யச் சொல்லுங்க. பிறகு போறேன். நீங்க எல்லாருமா சேந்து என்னை அவமானப்படுத்திப் பாக்க றீங்க. நான் போக மாட்டேன்' என்று சீறினாள் ஆவேசமாக.

'நீயா போறியா? இல்லே நான் போக வைக்கவா?' ஆனந்தன் வேகமாக எழுந்தான். அவன் கை உயர்ந்தது.



'ஸ்! தம்பீ! அடிச்சுக் கிடிச்சு ரசாபாசம் செய்தி டாதே. நம்ம வழிக்கு ஒழுங்கா வந்தா சரி. இல்லாட்டி, கோர்ட், கேஸுன்னு போக வேண்டியதுதான்.'

வழி முழுவதும் கண்ணீரை அடக்க முடியாமல் நடந் தாள் ஸவிதா. ஒதுங்கிப் போனாலும் மேலே வந்து விழுந்து அடாப்பழி சுமத்துகிற கதையாக, என்ன இது? எதில் போய் முடியப் போகிறது?

'என்ன மேடம்? சாப்பிடாம உக்காந்துட்டீங்க? அரு கிலிருந்த சக ஊழியர் கேட்டதும், திடுக்குற்று விழித்துக் கொண்டாள் அவள்.

'ஒண்ணுமில்லே. ஒரே தலைவலி. சாப்பாடே பிடிக் கலை. சட்டென டப்பாவோட பின்புறம் சென்றாள். வெளிப்பக்கம் இருந்த குப்பைத் தொட்டியில் அதை வீசி விட்டு, அருகிலிருந்த வாஷ் பேசினில் சுத்தமாகக் கழுவி னாள். மனதில் படிந்திருந்த துயரம் மட்டும் கழுவப்படா மல் இருப்பது போன்ற பிரமை,

'இனிமேல் மூடி மறைத்துப் பலனில்லை. அண்ண னிடம் உண்மையைக் கூறிவிட வேண்டியதுதான்.' ஒரு முடிவிற்கு வந்தவளாய், தன் இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டாள்.

மாலை வழக்கமான மைலாப்பூர் பஸ்ஸைப் பிடிக்கா மல் திருவல்லிக்கேணி பஸ்ஸைப் பிடித்தபோது நன்றாக இருட்டி விட்டிருந்தது. மாலை நேரக் குளிரில் உடல் வெட வெடத்தது. கடந்த காலமாக வீட்டில் அடிக்கும் புயலின் வேகமா அல்லது உடலிலும் மனதிலும் ஏற்பட்ட தளர்ச்சியா? எதனால் இப்படி ஒரு நடுக்கம்? குழப்பத் துடன் திருவல்லிக்கேணி வீட்டை அடைந்த போது அண் ணன் மட்டும் வீட்டில் இருந்தார்.

இரவு சாப்பாட்டிற்குத் தேவைகளைக் கவனித்த வாறு அவசரமாகக் கதவைத் திறந்த அண்ணனுக்கு ஒரே

வியப்பு. 'அடடே! வாம்மா! நீ இந்தப்பக்கம் வந்து ரொம்ப நாளாயிட்டுது. நானாவது வந்து பாக்கணும்னு இருந்தேன். ஆனா... பெரிய மனுஷங்க உங்க மாமியார் யாராச்சும் இருப்பாங்க...' அவர் உற்சாகமாகப் பொரிந்தபடி உள்ளே சென்றார்.

'பெரிய மனுஷங்க... பணம் மட்டும் தான் ஒருத்தனைப் பெரிசாக்கறதில்லை அண்ணா! குணம்தான் பெரிசாக்குது. இது உங்களுக்குப் புரியலியே!' மனது புலம்ப அண்ணனைப் பின் தொடர்ந்தாள்.

'தம்பிங்க யாரையம் காணோம்?' பேச்சை வளர்த்த விரும்பியவளாய் ஆரம்பித்தாள்.

'பெரியக்கா வந்து கூட்டிக்கிட்டுப் போச்சு. கிறிஸ்துமஸ் லீவு வருது, கொஞ்சம் எங்கூட இருக்கட்டும்னு அத்தானும் கேட்டுக்கிட்டார். எனக்கு வேலை. போக முடியலே.' பேசிக்கொண்டே உள்ளே சென்று காப்பியுடன் வந்தார்.

'பெரியக்கா குடுத்து வச்சவ. அவள் கணவர் நல்ல மனுஷர். தன்னை ஒப்பிட்டுப் பார்த்த ஸவிதாவிற்கு அவள் மீதே வெறுப்பு. 'அக்காவைவிட படிச்சவ. பதவியில் இருக்கறவ. ஹூம்! என்ன பிரயோசனம்?' மனம் குமுறியது.

'காப்பி சாப்பிடு. இப்பத்தான் கடையில இருந்து வந்தேன். சாதாரணமா ராத்திரி ஆயிடும், இப்ப கண் கொஞ்சம் மங்கலா தெரியுதுன்னு, முதலாளியே என்னை சீக்கிரமா வீட்டுக்கு அனுப்பிடறாரு. கண்ணாடி போட்டா பலனில்லே. கண்ணுல 'புரை' வளருதுன்னாங்கம்மா.' காப்பியை வாங்கிப் பருகியவள் கண்களில் நீர் புரண்டது.

காலமெல்லாம் உழைத்து இப்போது கண்ணும் மங்கிப் போய் அமர்ந்திருக்கும் அண்ணனிடம் என்ன சொல்வது? எப்படிச் சொல்வது'



'கண் தெரியாட்டி கஷ்டமாச்சே. எனக்கு ஒரு வார்த்தை சொல்லி அனுப்பி இருக்கக் கூடாது?' அன்புடன் கண்டித்தார்.

'உனக்கா? நல்லா இருக்கே. உன் புருஷன் சும்மா இருப்பாரா? இல்லே மாமியார்தான் சம்மதிப்பாங்களா? அதெல்லாம் சரி இல்லே. என்ன? இன்னும் ஒரு வருஷம். பெரியதம்பி என்ஜினீயர் படிப்பு முடிஞ்சிடும். வேலைக்குப் போய்ட்டானா எனக்கு கொஞ்சம் ஓய்வு' நம்பிக்கை தொனித்தது அவர் குரலில்.

'கண் ஆபரேஷன் செய்து கண்ணாடி போட்டுடலாமே' காப்பி தம்ளரைக் கீழே வைத்துவிட்டு அண்ணன் அருகில் வந்தாள். 'நான் சமைக்கட்டுமா?'

'நீ உட்கார்ந்து பேசும்மா. எனக்கு என்ன பிரமாத சாப்பாடு - ராத்திரியில் கொஞ்சம் தயிரு, ஊறுகாய், சோறு, போதுமே. ம்! உக்காரு.' அண்ணன் அன்புடன் அவளை அமர்த்தி அவரும் உட்கார்ந்தார்.

பழைய கால சிமெண்ட் தரை. பழைய ஓட்டுக் கட்டிடம். இருந்தாலும் மனதில் ஒரு அமைதி.

'ஏம்மா ரொம்ப இளைச்சு கருத்துப் போயிருக்கே?' அவள் பதில் பேசாமல் இருந்தாள்.

'மாப்பிள்ளை வரலியாம்மா?' ஸவிதா மீண்டும் மௌனம் சாதித்தாள். அண்ணன் தன் விழிகளைக் குவித்துத் தங்கையை உற்றுப் பார்த்தார்.

'என்னவோ நடந்திருக்குது. இல்லாட்டி இந்த அண்ணனைத் தேடிக்கிட்டு நீ வந்திருக்க மாட்டே. சொல்லு. ஏதாச்சும், மருமகன் உங்கிட்ட சண்டை பிடிச்சாரா?' அவளது தலையை ஆதரவுடன் வருடினார்

'நல்லா யோசிம்மா. கல்யாணம்கிறது ஆயிரங் காலத்து பயிரு' பயத்துடன் கேட்டார் அண்ணன்.

'வளராம சாவியா போற பயிரை எத்தனை நாள் வச்சுக் காப்பாத்துவீங்கண்ணா? அவங்களைப் பொறுத்த வரை நான் பூக்காத செடி. காய்க்காத மரம். அதனாலே அவங்க தோட்டத்திலே அதை பிடுங்கிட்டு வேற நடப் போறாங்க. நடட்டும்.'

வீடு திரும்பியபோது, அவர்கள் பகுதி படுக்கையறை ஜன்னலருகே, 'மணி ப்ளாண்ட்' வாடிக் கிடந்தது. காற்றில் வழக்கம்போல தலை அசைத்து ஆடவில்லை.

'பாவம்! என்னைப் போல ஆகிவிட்டாயா நீ?' ஸவிதா முணு முணுத்தபடி படி ஏறினாள்.

# 7

காலமும் நேரமும் யாருக்காகவும் காத்திருப்ப தில்லை. ஸவிதாவின் நிலைகூட அப்படித்தான். இப்பொழு தெல்லாம் அவள் திருவல்லிக்கேணியிலிருந்து அண்ணா சாலை போகப் பழகி விட்டிருந்தாள்.

அன்று காலை ஆபீஸ் மானேஜர் அவளைக் கூப்பிட்டு 'மேடம்! உங்களுக்கு மாற்றல் போட்டிருக்காங்க' என்ற போது அவள் அரண்டு போகவில்லை. வாழ்க்கையே மாறிப் போனபிறகு எதுவும் அவளை அசைக்கமுடியாது.

'திருவல்லிக்கேணியில புது பிராஞ்ச் திறந்திருக்குதே. அதுக்குப் போகச் சம்மதமான்னு கொஞ்சம் பேரைக் கேட்டிருக்காங்க.'



ஸவிதா, முதல் முறையாகப் புன்னகை புரிந்தாள். கரும்பு தின்னக் கூலியா? அவள் வீட்டின் அருகாமை யிலேயே ஆபீஸ், தலையசைத்து விட்டாள்.

புது ஆபீஸிற்குப் போகுமுன் அண்ணனை வணங்கி எழுந்தாள். 'ஆசி கூறுங்கண்ணா.' அவரது உதடுகள் நடுங்க, 'நல்லா தைரியமா இரும்மா.' என்றார், கண் களில் நீர் கசிவதைக் கட்டுப்படுத்தத் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

'தைரியமாத்தான் இருக்கேன். நீங்க இருக்கும்போது எனக்கு என்ன பயம், சொல்லுங்க.' கேட்டபடி, தோள் பையை எடுத்தாள். டிபன் டப்பா தேவை இல்லை. சாப் பாட்டுக்கு ஓடிவரலாம். வெறித்துப் பார்ப்பவர்கள், சுடு சொல் பேசுபவர்கள், குத்திக் காட்டுபவர்கள் யாருமே இல்லை. மனம் லேசாகிப் போன பிரமை.

'சாவி கையில வச்சுக்கிட்டிருக்கியா? நான்வர ஆறு மணிக்கு மேல ஆயிடும்.' அண்ணன் வீட்டின் மறு சாவி யைக் கையில் கொடுத்ததும், பழைய நினைப்பு வந்தது.

அவளது மந்தைவெளி வீட்டிற்கு அண்ணனே வந்து விட்டார். முதல்நாள், தன்னை வலுக்கட்டாயப்படுத்திக் கையெழுத்துப் போடச்சொல்கிறார்கள் என்று தெரியப் படுத்தி இருந்தாள் ஸவிதா.

'வாங்க, நானே சொல்லி அனுப்பணும்னு இருந் தேன். நீங்களே வந்துட்டீங்க.' கிருஷ்ணவேணி வரவேற் றாள்.

மரியாதைக்குக்கூட காப்பி உபசரிப்பு இல்லை என் பதை உணர்ந்து விட்டிருந்தார் ஸவிதாவின் தமையன். பதில் பேசாமல் மௌனம் சாதித்தார்.

'உங்க தங்கச்சி எல்லாம் சொல்லி இருப்பாளே.'

'சொன்னாள்.'

'குழந்தை இல்லேன்னு ஆனந்தனுக்கு ஒரே குறை. இருக்காதா சொல்லுங்க.' ஆரம்பித்தாள் கிருஷ்ணவேணி.

'என் தங்கச்சிக்கும் அதே மாதிரி உணர்ச்சி நிறையவே இருக்குது.'

'என்ன பிரயோஜனம்? நாங்களும் நாலுவருஷத்துக்கு மேலா பாத்திட்டோம். சஷ்டி, விரதம், நாகபூஜை, கோயில் குளம்னு செய்தாச்சு, டாக்டரையும் பாத்தாச்சு. ஒண்ணும் பலனில்லே' கிருஷ்ணவேணி புலம்பினாள்.

'அதனால என்ன? நாலு வருஷம்கறது என்ன நாலாயிரம் வருஷமா? மெதுவாகப் பொறக்கட்டும்' நிதானமாகக் கூறினார் அண்ணன்.

'நல்லா இருக்கே, நான் கண்ணை மூடின பிறகு பிறந்தா என்ன? பிறக்காட்டா என்ன? ஒண்ணு தெரிஞ்சுகொள்ளுங்க. உங்க வம்சத்திலே ஏற்கனவே...'

'நிறுத்துங்க. ஒருத்தியைக் காரணம் காட்டி, ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதம்னு பேசறீங்க. எங்க வீட்டுப் பெரிய பொண்ணுக்குக் குழந்தை இல்லை. ஒத்துக் கொள்கிறேன். ஆனா அதுக்காக அவளை 'மலடி'ன்னு முத்திரை குத்தி அவ புருஷன் அவளை ஒதுக்கலை. இந்த உலகத்திலே குழந்தை பிறக்காம வாழறதே ஒரு குத்தம் போலயும், இப்ப நம்ப நாட்டுக்கு அது ரொம்பத் தேவை போலயும் நீங்க பேசறது நல்லா இல்லே. நீங்க, பட்டணத்து நாகரீகம் தெரிஞ்சவங்க. தப்புன்னா ரெண்டு பேரையுமே, பரிசோதனைக்கு உட்படுத்தறதுதான் நியாயம். அதைவிட்டு என் தங்கச்சியைமட்டும் குறைசொல்லி நீக்கறது அநியாயம்.' என்று நீண்ட பிரசங்கமே நடத்தி விட்டார் அண்ணன்.

கிருஷ்ணவேணிக்குத் தலைகால் தெரியாமல் ஆங்காரம் பீரிட்டது. 'என்ன சொன்னீங்க? என் மகனை... என்



மகன் பேர்ல தப்பு சொல்றீங்களா? ஏண்டா ஆனந்து கேட்டியா?' கூக்குரல் இட்டாள்.

'மூதல்ல அந்த ஆளை, இடத்தைக் காலி பண்ணச் சொல்லுங்கம்மா. அவரோட அருமைத் தங்கச்சியைக் கூட்டிக்கிட்டுப் போகச் சொல்லுங்க' ஆனந்தன் ஓங்கிக் கத்தினான்.

'அண்ணியாக வந்த சீர் வரிசையை அவ மூஞ்சியில விட்டெறிஞ்சு போகச் சொல்லுங்கம்மா' பானுமதி கீச்சுக் குரலில் ஆர்ப்பரித்தாள்.

'நிறுத்துங்க. உங்ககிட்ட இனிமேல் கெஞ்சிக்கிட்டு நிக்கத் தயாரா இல்லே. மனசுல பஞ்சைப் போட்டு துடைச்சிட்டவங்ககிட்ட என்ன இருக்கப்போவுது? அம்மா ஸவிதா புறப்படு' என்றார் அண்ணன் கடும் சினத்துடன்.

'மரியாதையா கையெழுத்துப் போட்டுக் குடுத்திட்டா ஏதோகொஞ்சம் கையில பணம் குடுத்திடுவோம். மாறாகக் கோர்ட்டு, கேஸுன்னு இழுக்கடிச்சீங்க, நடக்கறதே வேறயா இருக்கும்' பயமுறுத்தினான் ஆனந்தன்.

ஸவிதா அவனை உறுத்துப் பார்த்தாள். 'எம் மேல பழி சுமத்தக்கூட அஞ்சாத சிங்கமாச்சுதே நீங்க. அதனால நான் சொல்றேன், இவரோட வாழப் பிடிக்கலே; விவாகரத்து வேணும்னு, ஓ.கே.'

'எனக்குத் தெரியும்டி. எப்ப நீ அந்த நெட்டைக் கறுப்பனோட கொட்டமடிக்க ஆரம்பிச்சயோ அப்பவே தெரியும் துணிச்சல்காரின்னு. பிடிச்சுக்க உன் பெட்டிச் சாவியை.' ஆங்காரத்துடன் சாவியை விசிறினாள் கிருஷ்ணவேணி. அடுத்த விநாடி அவளது வெள்ளி, தங்க நகைகளடங்கிய பெட்டி விசிறி எறியப்பட்டது.

'பொறுக்கிட்டுப் போங்க, பெரிய சீர்வரிசை. அனாவசியம் அது' ஆனந்தன் உறுமினான்.

'இது அனாவசியம்தான். ஆனா மாசாமாசம் சம்பளத்தை எண்ணி சுளையா வாங்கிட்டது அவசியமோ?''

'ஒரு 'செக்'கைக் கிழிச்சு எறிங்கம்மா.' பானுமதி இடையே ஆர்ப்பரித்தாள்.

'பானுமதி! ரொம்ப ஆட்டம் போடாதே. நீ நாளக்கி கல்யாணம் செய்துகிட்டு எப்படி திணறப் போறேன்னு பாக்கத்தான்போறேன்.' சாவியைக் கையில் எடுத்தாள் ஸவிதா. பெட்டியைத் தூக்கிக்கொண்டு அண்ணனிடம், 'வாங்க போவோம் அண்ணா, இவங்க கூட என்ன பேச்சு வச்சிருக்குது' என்றாள்.

'என்னம்மா சாவியை வச்சுக்கிட்டு நிக்கறே?' அண்ணன் கேட்டதும் சட்டென விழித்துக்கொண்டாள். 'சரி, போகலாம் நீங்களும் புறப்படுங்க.'

# 8

திருவல்லிக்கேணி, பைக்ராப்ட்ஸ் சாலையருகே அமைந்திருந்த கட்டிடம் புது மெருகுடன் கண்ணைக் கவர்ந்தது. உள்ளே படபடப்புடன் நுழைந்தவளுக்கு மாபெரும் அதிசயம் காத்திருந்தது.

'குட்மார்னிங் மேடம்!' மகிழ்ச்சியுடன் கரகரத்த குரலைக் கேட்டு வியந்து போனாள். சோமசுந்தரம் மானேஜர் நாற்காலியில் அமர்ந்திருந்தான்.

'ஓ! நீங்...களா? கங்கிராட்ஸ். இதை நான் எதிர் பார்க்கவே இல்லே.' உள்ளூரப் பொங்கிய மகிழ்ச்சியை வெளிகாட்ட முடியாத உவகை நெஞ்சுக்குள் துளிர்த்தது.

'இந்தப் புது பிராஞ்சில பிரமோஷன் செஞ்சிட்டாங்க. ஆனா உங்களையும் இங்கே மாத்துவாங்கன்னு



எதிர்பார்க்கல்லே. ப்ளஸண்ட் ஸர்ப்ரைஸ்! வெல்கம்'' என்றபடி எழுந்து வந்து மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தத் துவங்கினான்.

மிகச் சிறிய, கச்சிதமான ஆபீஸ். அதிகக்கூட்டம் இல்லை. பேச்சு இல்லை. ஸவிதா மனநிம்மதியுடன் வீடு திரும்பினாள். அதுநாள் வரை அவளை உதாசீனம் செய்து தள்ளிவிட்ட ஆனந்தனை நினைத்துக் கண்ணீர் வடித்திருந்தாள். 'மலடு' என்ற முத்திரையில் அவனிடமிருந்து பயமுறுத்தி விடுதலைப் பத்திரம் வாங்கிய பிறகுதான் கிருஷ்ணவேணி ஓய்ந்திருந்தாள். விவாகரத்து, சட்டபூர்வமாக கிடைத்த அன்று ஸவிதா ஆடிப்போய் விட்டாள்.

அதன் பிறகு, ஆனந்தனுக்கும் பெரிய பணக்கார மிராசுதார் வீட்டுப் பெண்ணுக்கும் திருமணம் என்பதையும் அவள் கேள்விப்பட்டாள். 'பாத்தியாம்மா! அவங்க பணத்திமிரை. என் சிநேகிதக்காரன் மூலம் சேதி சொல்லி அனுப்பி இருக்காங்க.' அண்ணா துயரத்தில் வெகுண்டார்.

'கடந்து போனது கெட்ட கனவு. மறந்திடுங்க அண்ணா! நானே அதைப்பத்தி நினைச்சுப் பாக்கறது இல்லியே.' ஸவிதா மெல்ல மெல்ல மனம்தேறி வரலானாள். இந்தப் புதுமாற்றம் அவளுக்குத் தெம்பு கொடுத்திருந்தது.

'அவங்களுக்கு மட்டும்தான் அப்படிச் செய்து காட்ட முடியுமோ? என்னாலும் முடியும்மா' அண்ணா மார் தட்டினார்.

'என்ன சொல்றீங்க?' அவள் குழப்பத்துடன் அவரைப் பார்த்தாள்.

'அவன் ஆண்பிள்ளைன்னா என்ன வேணாலும் செய்யலாம். நீ பெண் என்கிறதாலே, தாழ்ந்து போய் தவிச்சு

கிட்டு நிக்கணுமா? அதுக்கு நான் விடமாட்டேன்.
ஆமாம்' அவர் கண்களில் உறுதி.

புதிய ஆபீஸில் மீண்டும் புதுப்பிறவி எடுத்தவளைப்
போல் அவள் உற்சாகத்துடன் வேலை செய்து வந்தாள்.
அடிக்கடி சோமசுந்தரத்தைப் பற்றி அண்ணனிடம் அவள்
பேசிவந்தாள். ஒருநாள் அண்ணா திடீரெனக் கேட்டார்.
"ஏம்மா! அந்த மானேஜரை நம்ம வீட்டுக்குக் கூட்டி
வாயேன்.'

"அவரையா? கூப்பிட்டா வருவாரோ என்னவோ?'
தயக்கம்-அதே சமயம் அவளையறியாத ஒரு ஆசை முந்
திக் கொண்டது.

அவளது அழைப்பை சோமசுந்தரம் உடனடியாக
ஏற்றுக் கொண்டு கௌரவித்தபோது அவளுக்குச்சொல்ல
முடியாத பெருமை.

அன்றைய சாப்பாடு பலமான விருந்தாக முடிந்தது.
தங்கையின் சோகக்கதையை ஒளிவு மறைவில்லாமல்
அண்ணன் விவரித்தபோது. சோமசுந்தரம் பச்சாதாபத்
தால் உருகிப்போனான்.

'எப்படியாச்சும் அவளுக்கு ஒரு நல்ல மறுவாழ்வு
கொடுக்கணும்னு என் ஆசை.' அண்ணன் கண்கள் பனித்
தன. குரல் தழுதழுத்தது.

'நீங்க தப்பா எடுத்துக்கலைன்னா, நானே உங்க தங்
கச்சியை மணந்து கொள்ளத் தயார்.' தயக்கத்துடன்
கூறினான் சோமசுந்தரம்.

தூக்கி வாரிப் போட எழுந்து நின்றாள் ஸவிதா.
'ஸார்' உணர்ச்சிப் பெருக்கால் தடுமாறினாள். அண்
ணன் கண்களில் நீர்பெருக 'தம்பீ! நீங்க நல்லா இருச்
கணும்.' என்றார் நாத் தடுமாற.



"உங்க தங்கச்சியை எனக்குப் பிடிச்சிருக்குது. அவங்
களை ஒரு வார்த்தை கேட்டுக் கொள்ளுங்க. அவங்க
மனசு நோகாம எனக்கு வாழ்க்கை தரமுடியும்.' அவங்க
கதையை கேட்ட பிறகு அவங்க மேல இன்னமும் மதிப்பு
அதிகமாக ஆயிட்டுது' என்றான் சோமசுந்தரம்,

ஸவிதாவின் மீது ஆயிரம் மலர்களைத் தூவியது
போல் மென்மையான, இனிமையான அதிர்ச்சி. பேச்
சிழந்து நின்ற அவளிடம், 'என்னம்மா பேசாமா நிக்
கறே?' என்றார் அண்ணன். ஸவிதா நாணமும், மகிழ்வு
மாக 'நீங்க சொன்னா சரி அண்ணா' என்றாள்.

காலத்திற்குத்தான் எத்தனை அற்புதமான சக்தி!
எல்லா துயரங்களையும் மாற்றி மகிழ்ச்சியுடன் உல்லாச
மாக இல்லற வானில் பறக்க ஆரம்பித்திருந்தாள் ஸவிதா.
எளிமையாகத் திருமணம் முடிந்து, தனிக் குடித்தனம்
நடத்த ஆரம்பித்து சில மாதங்கள் ஆயின. அண்ணனுக்கு
உதவியாக இருக்கட்டும் என்று அருகிலேயே பெரிய
வீடாக எடுத்திருந்தான் கோமசுந்தரம்.

ஸவிதா வேலையை விடுவதற்கு சோமசுந்தரம் சம்
மதம் அளிக்கவில்லை. "உன்னை நான் வேலை செய்கிற
இடத்தில் வேலையைத் தொடர அனுமதிக்க மாட்டார்
கள். வேறு பிராஞ்சிற்கு மாற்றட்டும். பரவாயில்லை.
உனது சம்பளத்தை அப்படியே அண்ணாகிட்டக் குடுத்
திடு. இனிமே அவருக்கு ஓய்வுதேவை, வீட்ல இருக்கட்டும்.
தம்பிங்க படிப்பைக் கவனிக்க உன் பணம் உதவும்' எங்
கிட்ட இருந்து அவர் ஒருபைசா கூடத் தொடமாட்டார்'
என்றான் தீர்மானமாக.

வேறு மாற்றல் உத்தரவு வருவதற்குள் அவளுக்கு
அந்த மகிழ்ச்சியான செய்தி. குடும்பத்தில் ஒரு புதிய
வாரிசு உருவாகப்போகும் நல்லசேதி. அண்ணா மகிழ்ச்சி
ஆரவாரத்தில் குழந்தையைப் போலத் துள்ளினார்.

'இத பாரும்மா. இப்பப்போயி அந்த கிருஷ்ணவேணி முகத்தில காறித் துப்பணும் போல ஆசையா இருக்கும்மா' ஆர்ப்பரித்தார்.

'வேணாம் விட்டுடுங்க. ஆறாம் மாசம் வளை அடுக்குவாங்க இல்லியா? அதை எங்க ஒண்ணுவிட்ட அத்தை நடத்தனும்னு சொன்னாங்க. ஏதாவது கோவில்ல வச்சு நடத்திடணும்னு சொல்றாங்க.' சோமசுந்தரம் கருத்துத் தெரிவித்ததும் இருவரும் ஆமோதித்தனர்.

# 9

ஸவிதா, முண்டகக்கண்ணி அம்மன் கோவிலை வலம் வந்தாள். சோமசுந்தரத்தின் அத்தையான மூதாட்டி அவளது கைநிறைய வளையலை அடுக்கி திருஷ்டி சொடுக்கினாள். 'மவராசி நல்லபடியா பெண்ணோ புள்ளையோ பெத்துக்கம்மா' ஆசீர்வதித்தாள்.

அம்மனுக்கு அபிஷேகம் அர்ச்சனை செய்துவிட்டு அர்ச்சகர் காட்டிய கற்பூர ஜோதியைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு திரும்பினாள் ஸவிதா.

எதிரே பரங்கிப் பழம் போல ஒரு பெண், அவளைத் தொடர்ந்து பானுமதியும், கிருஷ்ணவேணியும் காரிலிருந்து இறங்கினார்கள். ஸவிதா திடுக்கிடவில்லை மாறாக அமைதியாக நின்றாள்.

'பாம்புப் புத்துக்குப் பாலை ஊத்து. நாகதோஷம் போகணுமில்லே,' கிருஷ்ணவேணி அதட்டியபடி அந்தப் பெண்ணின் பின்னால் நடந்தாள்.

மீண்டும் சஷ்டிவிரதம், நாகதோஷம்...பாவம்! ஸவிதா பச்சதாபத்துடன் அந்தப் பொண்ணைக் கவனித்தாள்.



'கோவிலை நல்லா சுத்திவா. அடிப்பிரதட்சணம் செய்யணும்' ஸவிதாவைக் கிருஷ்ணவேணி கவனிக்கவில்லை.

பின்னால் வந்த பானுமதிக்கு தூக்கி வாரிப்போட்டது. பீதியுடன் ஸவிதாவைக் கண்டதும் அவளை அவசரமாக முந்திக்கொண்டு போகப் புறப்பட்டாள்.

'நில்லு! உங்கிட்டே எனக்குப் பேசனும்' அடிக்குரலில் அதட்டினாள் ஸவிதா.

பானுமதி பயத்துடன் அவளை நிமிர்ந்து பார்க்கத் துணிவின்றித் தலையைக் குனிந்து கொண்டாள். 'ஏன் பயப்படறே? இந்த 'மலடி' கூட இப்ப வாயும் வயிறுமா நிக்கறாளேன்னா! உங்கண்ணனுக்கு மட்டும்தான் கல்யாணம் நடக்குமா? எனக்கும் நடந்திடுச்சு. இதை விவரமா சொல்றியா?' அவளது குத்தல் பானுமதியை பதறச் செய்தது.

'என்னடி வாசல்லயே நின்னுட்டிருக்கே. அபிஷேகச் சீட்டை வாங்கலே...?' கிருஷ்ணவேணி மகளை அதட்டியபடி வாயிற்புரம் வந்தவள் திடுக்கிட்டாள்.

'நீ...யா?' ஸவிதாவின் தாய்மை நிலையில் மேலும் அதிர்ச்சி யுற்றவளாய். வாயடைத்துப் போனாள் கிருஷ்ணவேணி.

'நானேதான் உங்க எக்ஸ் மருமகள். இப்ப மிஸஸ் சோமசுந்தரம்' ஒரு கண்யமான மனிதர் என்னை மனமுவந்து கல்யாணம் செஞ்சுக் கொண்டார்.'

'ஓ! அவனா...?' கிருஷ்ணவேணி அருவருப்புடன் முகத்தைச் சுளித்தாள்.

'அவரேதான். நீங்கதான் ஏற்கனவே அவரோட என்னை ஜோடி சேத்து வச்சிட்டீங்களே. இனிமே எப்படி இருந்தா என்ன. அவர் என்னை மதிப்போட, மரியாதை

யோட நடத்தறார். முழு சம்பளத்தையும் என் கையி லயே குடுத்திடறார்.' ஸவிதாவின் முகத்தில் ஏளனம் பர வியது.

பானுமதி கோபத்துடன் 'இவகிட்ட என்னம்மா பேச்சு? போகலாம் வாங்க' என்றாள்.

'இதையும் கேட்டுட்டு போ, ஒரு நிமிஷம்.'

'என்ன?' பானுமதி வெறுப்புடன் அவளை ஏறிட்டாள்.

'நீ சொன்னது நினைப்பிருக்கா?'

பானுமதி முறைத்துப் பார்த்தாள். கிருஷ்ணவேணி அலட்சியமாக வெறித்தாள்.

"டாக்டர் ரேவதி கிளினிக்ல இருந்து திரும்பி வந்த அன்னைக்கு என்ன நடந்தது...நினைவில்லே?' திரும்பவும் கேட்டாள் ஸவிதா.

கிருஷ்ணவேணியின் புருவங்கள் நெரிந்தன.

'ரத்னாவளியில காளிதாஸன் எப்படி வர்ணிச்சிருக் காரு. அசோக மரம் பூக்கலைன்னா, செம்பஞ்சுக் குழம்புப் பாதங்களாலே அழகான பெண்கள் அதை உதைப்பாங்களாம். அந்த வெக்கத்தில் அது பூக்குமாம். இல்லியா!'

கிருஷ்ணவேணி உடலைச் சிலிர்த்துக் கொண்டாள். 'உங்கண்ணி அடிப்பிரதட்சணம் முடிச்சிடுவா. வா போவோம் இவ கிடக்கறா.'

'ஊஹூம், உங்க அழகான பொண்ணு, நாட்டிய பேரழகி தன் 'அல்தா' தடவின காலாலே உங்க புது மரு மகளை எட்டி உதைக்கச் சொல்லுங்க. அவள் வெட்கப் பட்டுக்கிட்டு தாய்மை அடைஞ்சிடுவா!' கோபத்துடன் சிரித்தாள் ஸவிதா.



அவளது சிரிப்பைக் கேட்டு அரண்டு போனவர்களாய் தாயும், மகளும் ஒருவர் கையை மற்றொருவர் பற்றிக் கொண்டனர்.

'சொல்லு பானுமதி உங்க பெரியண்ணி, அண்ணன், சின்ன அண்ணன் எல்லார்கிட்டயும் சொல்லு. இந்த அசோக மரம் பூத்திடுச்சு. ஆனா உங்க வீட்டு அசோக மரம் பூக்கவே பூக்காது. அது மலட்டு மரம். காலால் உதைப்பட்டாலும் அதுக்கு வெட்கம் வராது. போய் சொல்லு. வரேன் நான். குழந்தை பிறந்ததும் பத்திரிகை அனுப்பறேன்.' கையில் அடுக்கிய வளையல்கள் குலுங்க கர்வத்துடன் தலை நிமிர்ந்து—வெளியே நடந்தாள் ஸவிதா.

—முற்றும்—